133

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
19 JUN 1933
MADRAS

தமிழரசு

'தமிழரசு' காரியாலயம்,
31. வைத்தியநாத முதலி வீதி.
சென்னை

பொருள் அடக்கம்

1. கடவுள் வணக்கம் ... 321
2. திருவாளர்—மின்னே ... 322
3. தமையனும் தங்கையும் —மனைவி மணாளர் ... 325
4. 10000 ரூபா பரிசு (நமது ஆசிரியருக்கு ஒரு கடிதம்) 326
5. கைகாட்டி மரம்-ராமசாமி 330
6. காமுஷ்டி யுத்தம் ... 331
7. கல்கி கண்ட கனவு ... 332
8. பெண்ணின் பெருமை ... 337
9. விதிக்கும் எமனுக்கும் தப்பி வாழ முடியுமா? 338
10. காதலுக்குப் பலி ... 340
11. வெள்ளைச் சர்க்கரையின் கேடு ... 345
12. அறிவு ஆக்கம் தரும் (சிறுவர் விருந்து) ... 346
13. சிறுமிகள் பொம்மைகளை விரும்புவதேன்? ... 349
14. இந்தியாவும் இங்கிலாந்தும் ... 350
15. நகைச் சுவை ... 357
16. இயற்கை யன்னையின் காட்சி ... 361
17. ஸாஸாவின் சேஷ்டைகள் 363
18. மாதர் வழிபாடுகள் ... 370
19. சித்திரக் கல்வி ... 371
20. குழந்தை வளர்ப்பு ... 373
21. நித்தியமூர்த்தியின் காதல் 378
22. பிரார்த்தனைக் குறிப்பு ... 383
23. வைதீகர் கொடுமை ... 384
24. கடற்கரை சம்பாஷணை 385
25. உணவு உண்ணும் விதங்கள் ... 387
26. யான் கொள்ளைக்காரன் ஆனதேன்? ... 388
27. தாசிகளும் தாசிகாந்தர் களும் (நாடகம்) ... 396

சந்தா விவரம்

வருடம் 1-க்கு தபாற்கூலி யுள்பட	இந்தியா, பர்மா, சிலோன் முதலிய உள்நாட்டிற்கு	ரூ 1—0—0
	பினங்கு, சிங்கப்பூர், தென் ஆப்ரிக்கா முதலிய வெளி நாடுகளுக்கு	2—0—0
	ஜீவிய சந்தா	20—0—0
	தனிப் பிரதி விலை	0—1—0

மாதிரி சஞ்சிகை இனாம்.

ஒரு வருடத்திற்குக் குறைந்த சந்தா கிடையாது.

ஒவ்வொரு ஆங்கில மாதம் 15-ஆம் தேதியிலும் வெளிவரும்.

விளம்பர விகிதம்

உட்பக்கம்	ஒன்றுக்கு	1-மாதத்திற்கு	ரூ. 10—0—0
,,	அரைப் பக்கத்திற்கு	,,	6—0—0
,,	கால் பக்கத்திற்கு	,,	4—0—0
கவர்	3-வது பக்கத்திற்கு	,,	15—0—0
,,	4 ,,	,,	20—0—0

இதர விவரங்களுக்கு எழுதவும்.

மானேஜர்,

'தமிழரசு' ஆபீஸ்,

31, வைத்தியநாத முதலி வீதி, சென்னை.

முந்துங்கள்! முந்துங்கள்!!

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார்

எழுதிய

அனுபவ வைத்திய நூல்

இரண்டு பாகங்களும் உங்களிடம் இருக்கின்றனவா? இல்லையேல் உடனே எழுதி வரவழைத்து வைத்துக் கொள்ளுங்கள். இப் புத்தகங்கள் ஒவ்வொரு வீட்டிலும் தவறாது இருக்க வேண்டியது இன்றியமையாததாகும். இந் நூல்கள் வீட்டில் இருப்பது குடும்ப வைத்தியர் ஒருவர் உங்கள் இல்லத்தில் கூடவே யிருப்பதுபோலாகும். நோய் உண்டான காலத்தில் நீங்களே இந் நூல்களின் உதவியைக் கொண்டு சிகிச்சை செய்து கொள்ளலாம். இந் நூல்களில் எல்லா நோய்களின் விவரமும், அவைகள் உண்டாவதற்கு முன் தோன்றும் குறிகளும், அவைகளைப் போக்கும் சுலபமான வழிகளும், அதற்குரிய எளிய மருந்து வகைகளும் காணக் கிடைக்கும்.

அனுபவ வைத்திய நூலின் இரண்டு பாகங்களையும் வைத்துக் கொண்டே எவரும் ஒரு சிறந்த வைத்தியராகலாமென்பது திண்ணம். சொற்ப பிரதிகளே கைவச மிருக்கின்றன. முந்துங்கள்.

முதல் பாகம் விலை ரூபா		1—0—0
இரண்டாம் பாகம்	,,	1—0—0
இரண்டு பாகங்களும் சேர்ந்து	,,	1–12—0

தபால் சார்ஜ் வேறு

காரியஸ்தர் :—

'தமிழரசு' புத்தகாலயம்,

31, வைத்தியநாத முதலி வீதி, சென்னை.

வெளி வந்துவிட்டது! வெளி வந்துவிட்டது!!

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்கள்

எழுதிய

ஜீவ ரகசியம்

என்ற அரிய ஆராய்ச்சி நூல் வெளிவந்துவிட்டது

உயிரை வளர்ப்பதற்கும், உய்விப்பதற்கும் உரிய வழிகளைப்பற்றி இந்நூலில் பெரிதும் ஆராயப்பட்டிருப்பதால் இதற்கு 'ஜீவரகசியம்' என்ற பெயர் சூட்டப்பட்டுள்ளது.

இதில் டாக்டர். முதலியார் அவர்கள் நீண்ட காலமாக அனேக சாதுக்களிடத்திலும், யோகிகளிடத்திலும், அறிஞர்களிடத்திலும் பழகி அவர்களிடமிருந்து அறிந்து கொண்ட விஷயங்களில் தமது அறிவிற்கும் அனுபவத்திற்கும் உண்மையெனப்பட்ட பல அரிய பொருள்களை ஆராய்ந்திருக்கிறார்கள்.

இந் நூலில் உயிர் வாழ்வதற்கு மிகவும் அவசியமான சுகத்தை—தேக சுகம், மனோ சுகம், ஆன்ம சுகம் என மூன்று பிரிவாக வகுத்து ஒவ்வொரு பிரிவைப் பற்றியும் விரிவுபடுத்தி எழுதப்பட்டிருக்கிறது. நீராடும் நெறி, மூச்சு விடும் வகை, சூரியனால் அடையும் பயன், காற்றின் உபயோகம் சரீர நிலை அறிதல், வழிபாடுகளின் உண்மைத் தத்துவங்கள் முதலான பல இன்றியமையாத பொருள்களைப் பற்றியும் இதில் ஆராயப்பட்டுள்ளது. மற்றும் இப் புத்தகத்தில் சகல மதங்களின் உற்பத்தியைப் பற்றியும், அவற்றின் கருத்துக்களைப் பற்றியும் அறியலாம்.

இந்நூலை ஒவ்வொருவரும் படித்தறிய வேண்டியது மிகமிக அவசியமாகும்.

இதன் விலை ரூபா 1.

தபால் சார்ஜ் வேறு.

'தமிழரசு' புத்தகாலயம்,

31, வைத்தியநாத முதலி வீதி, சென்னை.

சென்னை ... 008

OFFICE OF THE REGISTRAR ... JUN 193

சிறந்த வரலாறு   உயர்ந்த கருத்துகள்

லெனின்

இன்று சோவியத் ரஷ்யா உலகத்திலுள்ள நாடுகளுக்கு ஓர் உதாரணமாகத் திகழ்கின்றதென்றால், அதற்குக் காரணமாக இருந்தவர் லெனின் என்ற பெரியாரே யாவர். பெரியார் லெனின் சுயநலம் சிறிதும் கருதாது ஏழை ரஷ்யர்களைக் கொடுங்கோல் ஆட்சியினின்றும் விடுவிக்கவும், பணத்திமிர் படைத்தவர்கள் செய்துவந்த அட்டூழியங்களை ஒழிக்கவும் முயன்று, அதனால் தாம் சொல்லொணாக் கஷ்டங்களை அனுபவித்து இறுதியில் தாம் நினைத்ததைச் செய்து முடித்த வரலாறு படிப்போர்க்கு உணர்ச்சியையும் ஊக்கத்தையும் உதவுமென்பதில் ஐயமில்லை. ஏழை மக்களின் துயரம் துடைப்பதற்கெனவே தோன்றி, அதன் பொருட்டே தமது உடல், பொருள், ஆவி மூன்றையும் அர்ப்பணம் செய்த வெற்றி வீரர் லெனினது வாழ்க்கைச் சரித்திரத்தை அடிமைக் குழியில் வீழ்ந்து வருந்தும் இந்தியர் ஒவ்வொருவரும் கற்றறிய வேண்டியது மிகவும் அவசியமாகும்.

லெனினது வாழ்க்கை, தோற்றம், செயல், குணம் முதலிய விவரங்கள் அனைத்தையும் இந் நூலில் பரக்கக் காணலாம். அவரது திருவுருவப் படமும் இதில் சேர்க்கப்பட்டுள்ளது. கிளேஸ் காகிதம் 36 பக்கம் விலை அணா 2.

வேண்டுவோர் $2\frac{1}{2}$ அணா தபால் ஸ்டாம்பு அனுப்பவும்.

'தமிழரசு' புத்தகாலயம்,
31, வைத்தியநாத முதலி வீதி, சென்னை.

இரண சஞ்சீவி

இம்மருந்தை சேத்துப் புண்ணுக்குத் தடவலாம் சொரி சிரங்குகளுக்குப் பூசினால் குணமாகும். முகத்தில் காணும் மோகப் பருவுக்குத் தடவ முக வசீகரத்தைத் தரும்.

ஆராத மேகப்புண், மேகப்படை இவைகளுக்குப் பூச இரணம் ஆறும். மூல வியாதிக்கு மேல் பூசினால் மூல இரணங்கள் ஆறிவிடும்.

விலை புட்டி 1-க்கு ரூபா 1—0—0.

விலாசம்:—

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார்,
31, வைத்தியநாத முதலிதெரு, சென்னை.

சிறப்பு வாய்ந்த

இந்தியக் கைத்தொழில்

லெட்டர் பேபர் —	போட்டோ பிளாக்குகள் —
பில் பாரம் —	கேட்லாக்குகள் —
உண்டியல் —	அட்டைப் பெட்டிகள் —
இரசீது பாரம் —	ரப்பர் ஸ்டாம்புகள் —
சேக் பாரம் —	உபசாரப் பத்திரங்கள் —
புத்தக பைண்டிங் —	கலியாணப் பத்திரிகை —

முதலியன வெகு அழகாக கைதேர்ந்த வேலைக்காரர்களைக் கொண்டு குறித்த காலத்தில் தயார் செய்து குறைந்த விகிதத்திற்குக் கொடுக்கப்படும். ஒரு முறை பரீக்ஷித்தால் எமது வேலையின் நயம் நன்கு விளங்கும்.

மீனாட்சி அச்சுக்கூடம்.,

31, வைத்தியநாத முதலி தெரு, சென்னை.

பாரதியார் நூல்கள்

கதைக் கொத்து

இதில் பாரதியார்த சொந்த அநுபவங்கள், அபிப்பிராயங்கள், கனவுகள், இன்னும் நமது மடமை, மூட பக்தி, மாதர் நிலைமை, இவை போன்ற சமுதாய வாழ்வின் குறைகளை நாம் அறவே ஒழிக்கு முறையை எடுத்துரைக்கிறார். எளிய தமிழ் நடையில் எழுதப்பட்டது. அணா 0—8—0

பகவத் கீதை

நாகர அட்சரத்தில் மூலமும், பாரதியாரின் அழகிய தமிழ் உரையும், விரிவான நூன்முகமும் அடங்கியது. அணா 0—8—0

வசனங்கள்

இதில் ஞானரதம், சந்திரிகையின் கதை, நவ தந்திரம், பதஞ்சலி யோக சூத்திரம், வேத ரிஷிகளின் கவிதை, தராசு முதலியன அடங்கி யுள்ளன. ரூபா 2—0—0

கவிதைகள்

தேசீய கீதங்கள், தோத்திரப் பாடல்கள், வேதாந்தப் பாடல்கள், விநாயகர் நான்மணிமாலை, கண்ணன் பாட்டு, புதிய ஆத்திசூடி, பாப்பா பாட்டு, முரசு, பாரதி அறுபத்தாறு, காட்சி, குயில், பாஞ்சாலி சபதம் முதலியன சேர்ந்துள்ளன. ரூபா 2—8—0

'தமிழரசு' புத்தகாலயம்,

31, வைத்தியநாத முதலி வீதி, சென்னை.

இனி நீங்கள் கவலைப்பட வேண்டாம்

நீங்கள் பசியின்றி கஷ்டப்பட்டாலும், இருதய வியாதி, பித்த சோகை, விக்கம், மதுமேகம், பாரிச வாய்வு, க்ஷய இருமல் சுரம் இவற்றில் எந்த நோயால் நீங்கள் பீடிக்கப்பட் டிருந்தாலும்

இன்பசாரம்

புருஷத் தன்மையைத் தரும்.



புத்திர உற்பத்தியை யளிக்கும்.

என்ற எங்கள் ஒப்பற்ற உயரிய மருந்தை வரவழைத்து உபயோகியுங்கள். உங்கள் நோய் உடனே பரிதி முன் பனி போல் நீங்கி விடும்.

இன்பசார மாத்திரையை இரவில் படுக்கைக்குப் போகும்போது தூள் செய்து வாயில் போட்டுக்கொண்டு பால் சாப்பிட்டுவரின் பசி அதிகரிக்கும் ; நரம்புகளுக்கு உணர்ச்சி ஏற்படும் ; இரத்த விருத்தியுண்டாகும். இம் மாத்திரையானது தங்கம் ஒன்றையே செந்தூரம்



இரத்தவிருத்தியை உண்டாக்கும்.

க்ஷயரோகத்தைப் போக்கும்.

செய்து பவளம், முத்து, காரோபா முதலான சத்து வஸ்துக்களுடன் விதை தினுசுகளும் சேர்த்துத் தயார் செய்யப்பட்டது.

இன்பசாரம் ஆணுக்கு இழந்துபோன ஆண் தன்மையை அதிகரிக்கச் செய்வதோடு இரு பாலர்களின் இச்சையையும் பூர்த்தி

19 JUN 1933

செய்து கொள்ள வேண்டிய வலிமையை அளிக்கும். நெடுநாள் குழந்தை யில்லாத தம்பதிகளுக்குப் புத்திர சந்தானத்தையும் உதவும்.

இன்பசார மாத்திரையானது க்ஷய இருமலையும் சுரத்தையும் 10 நாளில் குறைத்துவிடுகின்றது. க்ஷயரோகத்தைப் போக்குவதில் இதற்கு நிகரான மருந்து இல்லை என்பது நிச்சயம்.

இன்பசார மாத்திரைகள் ஒடிந்த எலும்பைக் கூட்டுவதிலும் சொர்ப்பன ஸ்கலிதத்தை நீக்குவதிலும், சரீரத்திலுள்ள இரணத்தை ஆற்றுவதிலும் சிறந்தது. நூற்றுக் கணக்கான நல்லுரைகள் பெற்றுள்ளது. ஒரே வேளையில் குணம் தெரியும்.

விளம்பர மருந்துகளைப் போல் இம்மருந்தை நினைத்தலாகாது. இதன் அரிய குணத்தை டாக்டர்களும், நோயாளிகளும் ஏராளமாக அனுபவித்துப் புகழ்ந்திருக்கிறார்கள்.

இன்பசார மாத்திரையைப்பற்றிய சில நற்சாக்ஷிப் பத்திரங்கள்

குழந்தை பிறந்தது

கனம் டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு,

நான் இருபது வருஷமாக காசி, இராமேஸ்வரம் முதலான இடங்களுக்குச் சென்று பல தானங்களைச் செய்தும் எனக்குப் புத்திர சந்தான மில்லாத காரணத்தால் தங்கள் மருந்தால் புத்திர உற்பத்தி யுண்டானால் இருபது ஆயிரம் கொடுப்பதாய் வாக்களித்தேன். தங்களுடைய இன்பசார மாத்திரையின் பெருமையை என்னென்று புகழ்வேன்.

எனக்கு உள்ள சொத்து ஒன்பது ஆயிரம் தாளக்கூடிய வீடு ஒன்றுதான். என்னிடம் வேறு பணங் கிடையாது. வேண்டுமானால் கிருஷ்ணா அண்டு கம்பெனியாரையும் கங்கிபாட்டி சுப்பிரமணியம் செட்டியாரையும் கேட்டுக் கொள்ளுங்கள்.

தங்களுடைய மருந்தால் எனக்கு ஆண் குழந்தை ஒன்று பிறந்தது. இத்துடன் 4 சவரன் அனுப்பி யிருக்கிறேன். பெற்றுக்கொண்டு என்னை மன்னிக்கவும்.

தங்கள் அன்புள்ள,

தேவரப்பட்டு அப்பய்ய செட்டியார்.

ஆண் தன்மை அடைந்தேன்

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்கட்கு,

அன்புள்ள ஐயா, தாங்கள் கொடுத்த இன்பசாரம் என்னும் மருந்து என்னை வீர புருஷனாகச் செய்து விட்டதை நோக்க நான் அடைந்த சந்தோஷம் சொல்லுந் தரத்த தன்று.

எனது முதல் மனைவி 10 வருட மிருந்து காலமானாள். இரண்

டாவது மனைவியை எனக்கு என் உறவினர்கள் கட்டி வைத்தார்கள். விவாகமானதி லிருந்து என் மனம் அடைந்த துன்பம் அளவிலடங்காது. எனது நண்பர் திண்டுகுறத்தி எதிராஜுலு செட்டியாரால் தங்களிடம் வந்து இன்பசாரம் என்னும் மருந்தை உட்கொண்டதால் எனக்கும் என் குடும்பத்திற்கும் ஆனந்தம் கிடைத்தது.

என்னுடைய நாயகிக்குச் சரீரம் உஷ்ணமாயும் நீர் இறங்கும்போது பாதையாயும் இருப்பதாய்த் தெரிகின்றது. அதற்குத் தாங்கள் எண்ணெய் கொடுக்கும்படிக் கோருகிறேன்.

லேட் மோஹலஸ் கம்பெனி
கொத்தா கிருஷ்ணசாமி செட்டியார்.

க்ஷயரோகம் நீங்கிற்று

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு: என்னுடைய நாயகிக்கு ஏற்பட்டிருந்த க்ஷயரோகம் காரணமாய் அதிகமாய்க் காய்ந்து கொண்டிருந்த சுரமும், இருமலும் தங்கள் இன்பசாரம் என்னும் மாத்திரைகளில் சில புட்டி சாப்பிட்டவுடன் நீங்கிவிட்டது. இப்போது நிறையிலும் அதிகப்பட்டிருக்கின்றது. இருமலும், சுரமும் இருந்த இடம் தெரியாமல் போய்விட்டது. தங்களுடைய இன்பசார மாத்திரை ஆச்சரியகரமான மருந்து என்பதில் சந்தேகமேயில்லை. இதை க்ஷய ரோகத்தால் துன்பப்படும் என்னுடைய சிநேகிதர்களுக்குச் சொல்லி வருகின்றேன்.

வி. ராமநாத ஐயர்,
7—5—32 கார்ட்டன் வூட்ராப் கம்பெனி, மதராஸ்.

அன்பார்ந்த டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு,

இதுவரையிலும் 6 புட்டி இன்பசார மாத்திரையை என் மனைவிக்குக் கொடுத்துள்ளேன். அதனால் நான் எதிர் பார்க்காதவண்ணம் குணம் கண்டிருக்கிறேன். இரத்த விருத்தியும் நல்ல பசியும் எடுக்கின்றது. என் மனைவி பிழைத்தது ஆச்சரியமே!

வேறொரு பெண்மணிக்கு இதைக் கொடுத்திருக்கிறேன். அவர்களுக்கு இரத்த மில்லாமல் வெளுத்திருந்த உடம்பு இப்போது இரத்தம் பரவிவிட்டது. இன்னும் இரண்டு புட்டி வி. பி. யில் அனுப்பவும்.

இப்படிக்கு
28—4—32, காஞ்சிபுரம் Dr. T. N. நடராஜன். L. M. P.

ஒரு மாதம் சாப்பிடக்கூடிய 30 மாத்திரைகள் அடங்கிய
புட்டி 1-க்கு விலை ரூபா 5.

கிடைக்குமிடம்:—
டாக்டர் மே. மாசிலாமணி முதலியார்,
31, வைத்தியநாத முதலிதெரு, சென்னை.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
19 JUN 1933
MADRAS

அன்பே ஆண்டவன்

தமிழரசு

ஒரு செந்தமிழ் மாத வெளியீடு

'எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன்'...

ஆசிரியர்: டாக்டர் மே. மாசிலாமணி முதலியார்

மலர் 4	ஸ்ரீமுகவரு ஆனிமீ 2உ 1933வரு ஜூன்மீ 15உ	இதழ் 6

கடவுள் வணக்கம்

நோக்கின்றிக் கண்டும், நனி கையின்றிக்
கொடுத்தும், மறை நுவல்வ தாய
நாக்கின்றி அறுசுவையும் இனி துணர்ந்தும்,
கால்இன்றி நடத்தல் செய்தும்,
மூக்கின்றி மணம்கவர்ந்தும், செவியின்றிக்
கேட்டும், மறை முதல்வர் யார்க்கும்
வாக்கன்றி மனத்தினுக்கும் எட்டாநின்
தாமரைத்தாள் வணக்கஞ் செய்வாம்.

—அதிவீரராம பாண்டியர்

08528

திருவாளர் — மின்னே

நமது நாடு அன்னிய ராட்சியால் நசுக்குண்டு தத்தளிக்கும் இத்தருணத்தில் லண்டனிலிருந்து இந்தியாவைப்பற்றிய புத்தகமொன்று புறப்பட்டிருக்கிறது. இப்புத்தகத்தின் பெயர் 'இறந்த காலத்தையே நோக்கி நடக்கும் இந்தியா' அதாவது பின்னேற்றமடையும் இந்தியா' (India Marches Past) என்பதாகும். இதனுடைய ஆசிரியர் திரு. ஆர். ஜே. மின்னே என்பவர். இவர் 'லண்டன் டைம்ஸ்' பத்திரிகைக்கு இந்தியா நிருபராவர். இவரை வழக்கப்படி சரித்திராசிரியரென்றும், இந்தியாவைப்பற்றிச் சொல்லுவதில் இவருக்கிணை எவருமில்லை யென்றும் நம்மை ஆள்வோர் சொல்லுகின்றனர். இம் மின்னேயிக்கு லண்டன், இந்தியா காரியாலயத்தார் உதவியும் அமோகமாகக் கிடைத்துள்ளது. 'அவர்களது உதவிக்காகவும், அவர்கள் பொறுமையுடன் அளித்த ஆதாரங்களுக்காகவும்' திரு. மின்னே தமது மனமார்ந்த வந்தனத்தை அவர்களுக் களிக்கிறார். நாடோடிப்பெண்—குப்பைக்காரி மேயோவும் இவர்கள் உதவியைப் பெற்றே புத்தகத்தை வெளியிட்டாள். சாக்கடைப் பரிசோதகர்களுக்கெல்லாம் இந்தியா காரியாலயத்தார்களில் சிலருக்குப் பொய்ச் சான்றுகளையும் பொறுப்பற்ற—ஒரு தலைப்பட்ட ஆதாரங்களையும் கொடுப்பதைத் தவிர வேறொன்றும் வேலை யில்லையென்றே நாம் கருத வேண்டி இருக்கிறது. இனி புத்தகத்தைப்பற்றி ஆராய்வோம்.

'பத்ருஹரி' சரித்திரத்தைப் படித்து அதிலிருந்து பின்வரும் முடிவிற்கு வருகிறார் மின்னே:—'வாழ்க்கையில் ஏமாற்றமடைந்தவர்களின் அடைக்கலமே துறவறம்—சந்நியாசம்' என்று வாய் கூசாமல் கூறி விட்டார். இந்த அழகான கதையின் தத்துவத்தை இப்படித் திரித்துக் கூற எந்த நீதிமானாலும் முடியவே முடியாது. ஒரு அகம்பாவம் பிடித்த—மனச்சாட்சியற்ற மனிதனால்தான் அது முடியும். இந்தியாவில் நிகரற்று, ஒளி வீசி, உலகத்தின் தத்துவங்களுக்குக் காரணமாக யிருந்த முனிவர்களும், ரிஷிகளும் தபோதனர்களும் மின்னேயின் விபரீத மனதில் படவேயில்லை. இவர்களையெல்லாம் விட்டு விட்டு மின்னே ஆச்சரியமான ஒரு சம்பவத்தைக் குறிப்பிடுகின்றார்:—'ஒரு சாது தொடர்ந்து பட்டினி கிடப்பதாகச் சொன்னான். ஆனால் பின்னர் மற்றொருவன் வாந்தி யெடுத்த அசுசியை யாருக்கும் தெரியாமல் திருட்டுத் தனமாகத் தின்றான்.' இந்தக் கட்டுக்கதையை நம்மால் நம்ப முடியவில்லை.

இந்துமதக் கடவுள்களைப்பற்றி வெகு அழகாகக் கூறுகின்றார் மின்னே. சிவன் ஒரு அபகீர்த்தி வாய்ந்த கடவுளாம். அவன் ஒரு மாதிரி குடியனும். சிற்றின்பத்தில் மூழ்கிக் கிடப்பவனும். விஷ்ணுவின் ஆலயங்களில் சிற்றின்பத்தைக் குறிக்கும் சின்னங்கள் விளங்குகின்றனவாம். இதை விரிவாக எழுதுவது கடினமாம். மோக்ஷமூலர், தேவசேனர் முதலியோர் கண்ட தத்துவங்கள் இவரது ஊனக் கண்களுக்குப் புலப்படவில்லை. சிற்றின்பச் சின்னங்கள் அவரது நாட்டிலுள்ள யேசுநாதரது ஆலயங்களிலும் காணப்படுகின்றன. அதை மின்னே மறந்து சொல்வதின் கருத்தென்ன? பின்னர் 'சக்தி' வணக்கத்தையும் இழித்துக் கூறுகின்றார். 'உட்ராப்' என்ற அறிஞர் 'சக்தி' வணக்கத்தில் கண்ட நுட்பங்களை இவர் உணர்ந்தாரில்லை. 'சிற்றின்பந்தான் இந்தியாவில் பேரின்பம். இரவும் பகலும் அதன் பொருட்டே இந்தியாவில் செலவழிக்கப்படுகின்றது. இது தான் ஆசிரியரின் கடைசி தீர்ப்பு. புராணங்களிலும், காவியங்களிலும் மின்னே சிற்றின்பத்தைக் கண்டிருக்கலாம். கண்டிருந்தாலும் அதைக் கண்டிக்க முடியாது. ஒடிஸ்ஸி, இலியட் முதலியவைகளிலும், இன்னும் பல தேசத்துக் காவியங்களிலும் சிற்றின்பம் புகுத்தப்பட்டுள்ளது. அதை ஒரு இழிவு என்று யாரும் சொல்ல முடியாது. ஆனால் எங்கு உண்மையான பிரம்மசரியத்தைக் காண்கின்றாரோ, அதை மின்னே கட்டாயம் குறிப்பிட வேண்டும். அதை விடுத்து, 'கடவுள்களெல்லாம் சிற்றின்பப் பிரியர்கள்......... "குழந்தைத் தாலாட்டுப் பாட்டுக்கூட இந்தியாவில் சிற்றின்பத்தைப் பற்றியே கூறப்படுகிறது' என்கிறார். இந்தப் பெரும் புளுகை உங்களில் யாரேனும் நம்பத் தயாரா யிருக்கின்றீர்களா?

சாரதா சட்டத்தைப்பற்றி இவர் மிகவும் தவறுதலாகக் குறிக்கின்றார். (பொறுப்பற்றவர்களது பேச்சுகளைக் கேட்பதின் பயன் இம்மாதிரி அனர்த்தங்களில் வந்து முடிவது சகஜமே.) 'சாரதா சட்டத்தைப் பற்றி சட்டசபையில் 4 வருடங்களாக (1925 முதல்) வாதிக்கப் பட்டதாம். இந்தியாவிலுள்ள அனைவரும் அதை எதிர்த்தார்களாம். 'ஆ! 14 வயது வரையிலா பெண்ணைக் காக்கப்போட வேண்டும்! மிகவும் நீண்ட நாட்கள்!' என்று இந்தியர்கள் நினைத்தார்களாம். பின்னர் 1929-ஆம் வருஷத்தில் பிரிட்டிஷார் சட்ட புஸ்தகத்தில் இச்சட்டம் ஏறிவிட்டதாம். ஆனால் இதை எவ்வளவு தூரம் மக்கள் அநுஷ்டிக்கின்றனர் என்பதை அறிய வேண்டுமானால் அவரவர்கள் வீட்டில் புகுந்து வேவு பார்த்தால்தான் அறிய முடியுமாம்.' சபாஷ்! மிக்க பொறுமையுடனும், சிநேக பாவனையுடனும் இந்தியா காரியாலயத்தார் திரு. மின்னேயிக்கு அளித்த உண்மையான ஆதாரங்களின் போக்கைப் பார்த்தீர்களா? மேலும் மின்னே சொல்கிறார்:—'இந்திய மாதர்கள் தம் குழந்தைகள் மழலைச் சொற்கூற ஆரம்பித்ததும், அவைகள் சிற்றின்ப நுகர்ச்சிக்கும் தயாராய் இருக்க வேண்டும் என

நினைத்து, அவைகளின் ஜனனேந்திரியக் குறிகளை நிமிண்டி அவை களுக்கு ஓர்வித சுவையை உண்டாக்குகின்றனர். அதனால் பிற்காலத் தில் அக் குழந்தைகளுக்குக் கொடுமையான பழக்கங்கள் உண்டாகு கின்றன.' அஸ்தப் பிரயோகம், ஆணோடு ஆண் புணர்தல், 'இரவு களிப்புகள்' முதலிய திருவிளையாடல்களுக்கு இருப்பிடம் மின்னே யின் நாடே என்பதை நாம் கூறவேண்டியதில்லை. இதைப்பற்றி லஜபதி ராய் வெளிப்படையாகக் கூறியிருக்கின்றார். அவரைவிட நாம் அதிக மாகக் கூற முடியாது.

பிற்பாடு இவர் இந்தியாவின் கல்வியைப்பற்றிச் சிறிதும் ஆராய்ச்சி யில்லாமல் உளறுகின்றார்; வேத காலத்தில் விருதுக்கொடி நாட்டி விளங்கிய கல்லூரிகளை அறவே மறந்தார்; நாளந்தா, தக்ஷசீலா முத லிய நிகரற்ற சர்வ கலாசாலைகளையும் மறந்தார்; இந்தியாவின் லக்ஷக் கணக்கான அறிஞர்களையும் மறந்தார்; வான சாஸ்திரிகளையும் மறந் தார்; மின்னே கூறுகின்றார்:—'இந்திய சரித்திரத்தில் எந்தக் காலத் திலும் இந்துக்கள் இம்மாதிரி கல்வியில் களித்ததில்லை' என்று வெட்கமில்லாமல் கூறுகின்றார்; 'பிரிட்டிஷார் இதற்குமுன் இல்லாத சந்தர்ப்பங்களை இந்தியர்களுக்கு அளித்திருக்கின்றனர்' என்று மேலும் அளக்கிறார். கடைசியில் முடிவு என்ன? 'பிரிட்டிஷார் ஆட்சி ஏற்பட்ட 100 வருஷ காலத்திற்குப் பின் கல்வியின் முன்னேற்றம் இந்தியாவில் மிகவும் அதிகமாகியுள்ளது. இந்தியாவில் ஜனத்தொகை யில் 100-க்கு 8-ப் பேர்களுக்கு எழுதவும் பேசவும் தெரியும். மிகுதிப் பேர்கள் மூடர்கள்' என வசை புராணம் பாடுகிறார். பிரிட்டிஷார் வந்த ஒரு நூறாண்டுக்குப் பின்னும் உண்டான மகத்தான பயன் இதுதானோ? வெட்கம்! வெட்கம்!! வெட்கம்!!!

கடைசியாக ராஜீயத்தி லிறங்குகின்றார் மின்னே. 'இராஜீய வளர்ச்சிக ளெல்லாம் சதியாலோசனைக்காரர்களால் விளைந்தவை' தானாம். திலகரைப் பற்றி வசை புராணம் பாடியுள்ளார். மேலும் காந்திஜீயைப்பற்றி 12 பக்கங்கள் வரை எழுதியுள்ளார். புத்தகம் முடிந்து விட்டது.

இம்மாதிரி புஸ்தகத்தை எந்த ஸ்வதந்திர உணர்ச்சியுள்ள நாடும் வரவேற்காது. அதிலும் தாய் நாட்டு மகன் ஒவ்வொருவன் உதிரத்தையும் பொங்கச் செய்யும் இந்த அவதூறான புத்தகம் கண்டிக்கத் தக்கதாகும். இந்தியாவில் சில கெட்ட பழக்கங்க ளிருக்கலாம். அதை மாத்திரம் கூறி நல்லவைகளை மறைப்பது சரித்திராசிரியன் தர்மமல்ல. சரித்திராசிரியன் மனோ தர்மமுள்ளவன்; கடவுளுக்குச் சமானமானவன்; எதையும் நிறுத்துக் கூறும் சக்தி யுடையவன். இக் குணங்க ளில்லாத எந்தச் சரித்திராசிரியனையும் நாம் ஏற்றுக் கொள்ள முடியாது. அவர்களைக் குப்பைக்காரர்கள் என்றே கூறவேண்டும். பிரசார முறையில் வெளி வந்துள்ள இப்புத்தகங்கள்

இந்தியாவிற்குப் பெருந்தீங்களிக்கக் கூடியன. மகாவீரன்—புநிதன், நெப்போலியன் அரசாண்ட காலத்தில் இதே பிரிட்டிஷ் சரித்திராசிரியர்கள் அவனைப் பற்றிக் கட்டுக் கதைகள் எழுதி விட்டார்கள். ஜனங்களிடத்தில் பிற்காலத்தில் வெறுப்பு ஏற்பட்டதற்கும், நெப்போலியனது வீழ்ச்சிக்கும் அப்புத்தங்கள் தாம் காரணமாகும்.

சென்ற சில ஆண்டுகளாய் இம்மாதிரியான குப்பைத் புத்தகங்கள் பல தோன்றிக் கொண்டே இருக்கின்றன. நம்முடைய மானத்தையும், மக்களையும் அவைகள் எள்ளி நகையாடி கறைப்படுத்துகின்றன. பிரிட்டனைத் தூக்கி வைப்பதும், இந்தியர்களைத் தாழ்த்துவதும் அழகே யல்ல. இது அற்பத்தனமுள்ள ஆசிரியர் கூற்றே யாகும். இந்தியா உயிரிழந்த நாடு என்றால், அதைவிட உயிரிழந்த நாடு பிரிட்டன் என்றே நாம் கூறுகின்றோம்.

தமையனும் தங்கையும்—மனைவி மணாளர்

மாஸ்டர். எஸ். ரராஜம்



மிஸ். ஜெயலக்ஷ்மி

இவர்கள் சென்னை அட்வகேட் திரு. வி. சுந்தா ஐயரின் குமாரரும் குமாரத்தியுமாவர்; தமையன் தங்கையராகிய இவ்விருவரும் பிரபாத் கம்பெனியார் தயாரிக்கும் ‘சீதா கலியாணம்’ எனும் பேசும் படத்தில் முறையே ராமரும் சீதையுமாக நடிக்கப் போயிருக்கின்றனர். தமையனும் தங்கையும், மணாளன் மனைவியாகத் தோன்றும் இச் சம்பவம் தமிழ் நாட்டிற்கு ஒரு புதுமையே யாகும். இச் செயலுக்குக் காரணம் நாகரிக முதிர்ச்சியா? நாடகச் சீர்திருத்தமா? அல்லது பணம் பெருக்கும் வழியா? வாசகர்கள் முடிவுக்கு விட்டுவிடுகிறோம்.

10000 ரூபா பரிசு

நமது ஆசிரியருக்கு ஒரு கடிதம்

செங்கற்பட்டு,
27-5-33.

திருவாளர் - ஆசிரியரவர்கட்கு, வந்தனம்.

சென்ற மாதத் 'தமிழரசு' வெளியீட்டில் 'உண்மை உணர்ந்தோன்" என்னும் இரக்க மில்லா மனிதர் ஒருவரால் எழுதப்பட்ட '1000 ரூபா போட்டிப் பரிசு' என்ற கட்டுரையை நான் பார்த்தேன். கைக்கு வந்ததை எழுதி வெள்ளைக் கடுதாசியைக் கறுப்புக் கடுதாசி யாக்குவது மிகவும் சுலபம். ஆனால் பிற பத்திரிகாசிரியர்களது கஷ்ட நஷ்டங்களை அம்மனிதர் அறியமாட்டார் என்றே கூற வேண்டும். அறிந்திருந்தால் அத்தகைய கட்டுரையை எழுத அவரது பேனா துணியுமா? என்று கேட்கிறேன்.

நான் யாரென்று முதலில் தங்களுக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன். 'அற்புதம்' பத்திரிகையின் ஆசிரியன் அடியேன்தான். நான் தேச முன்னேற்றத்தைக் கருதியே 'அற்புதம்' பத்திரிகையைத் தொடங்கினேன். 'பிழைப்பதற்கு நல்ல வழி' என்று பல தறுதலைகள் சொல்லின. தமிழ் நாட்டில் உண்மைப் பத்திரிகைகள் இரண்டு மாத காலம் உயிர் வாழ்தல் அரிது. அவ்வா றிருக்கப் பத்திரிகையினால் பிழைப்ப தெப்படி? எப்படியோ ஆரம்பித்தேன். எனக்கு முன்னமேயே ஆரம்பித்த பத்திரிகைக்காரர்கள் வில்லிங்டன் சர்க்காருடன் விளையாட ஆரம்பித்தனர். அடியேனுக்கும் விளையாட வேண்டுமென்ற எண்ணம் தோன்றியது. ஆனால் உள்ளுக்குள் (தயவு செய்து தாங்கள் இதை ரகசியமாய் வைத்திருக்கவும்) கொஞ்சம் காபுராதான். ஆனாலும் என்ன செய்வது? பிற பத்திரிகாசிரியர்கள் விளையாடும்போது நான் மாத்திரம் விளையாடாம லிருந்தால் 'இது என்னடா விளக்கெண்ணெய் எடிட்டராக இருக்கிறான்!' என்று ஜனங்கள் தூற்றுவார்களே யென்றெண்ணி—அஞ்சி, அடியேனும் விளையாடத் தொடங்கினேன். 'இந்தியப் பேராசிரியர்கள் இவ்விதம் விளையாட்டி லிருந்தால் அப்புறம் உலகம் போற்றும்—மேனாட்டார் தலை வணங்கும் புஸ்தகங்களை எழுதாமற் போய் விடுவார்களே' என்ற தரும சிந்தை மேற்கொண்ட வில்லிங்டன் சர்க்கார், ஆசிரியர்களை யெல்லாம் ஒரு ஆறு மாத காலம் தங்கள் 'காராக்கிரக' மாளிகையில் வரவேற்று விருந்தளிக்க முன் வந்தது. சிறை செல்வது பெருத்த தியாகமல்ல என்பது அடியேனது எண்ணம். அதனால் சுயராஜ்ஜியம் வராது என்பது எனது சித்தாந்தம். எனக்கென்னமோ சிறை புகுவதற்கே இஷ்டமில்லை. ஆனாலும் நான் என்ன செய்வது? அந்தப் பொல்லாத பிற பத்திரிகாசிரியர்கள்!

ஆறு மாதம் கழிந்தது. அடியேன் விடுதலையானேன். உடனே சர்க்காருக்கு 5000 ரூபா தக்ஷிணை சமர்ப்பித்து விட்டு மீண்டும் 'அற்புத'த்தை ஆரம்பித்தேன். ச—பா—ஷ்! சிறை சென்றது வீணாகப் போகவில்லை! கைமேல் பலன்? 'சிறையி லிருந்து ரீஸண்டாதான் ரிலீஸானார் சார்! என்ன வெஹிமென்ட் ஆர்டிகில்ஸ்? டிரமென்டஸ் ஸார்! ஸ்பிரிட் ததும்புகின்றது 'அற்புதத்தில்' என்று அன்றொரு நாள் ஒரு ஐயங்கார் ஸ்வாமின் ஒரு நாயுடு

வுடன் சொல்லிக்கொண் டிருந்ததை அடியேன் கேட்டபோது என் உடல் ஐஸ் கிரீம் சாப்பிட்டது போலாயிற்று. உண்மையில் அடியேனுக்குப் பத்திரிகையில் ஸ்பிரிட்டையோ, பெட்ரோலையோ, கெரஸனாயிலையோ கொட்டி வாசகர்களை வெந்து போகச் செய்ய வேண்டுமென்ற எண்ணமே கிடையாது. ஆனால் ஜனங்கள் 'ஸ்பிரிடட் லேங்குவேஜ்'ஜையே விரும்புகின்றனராகையால் கொஞ்சம் 'மெதிலேடட் ஸ்பிரிட்டில்' நனைத்தே நமது 'அற்புத'த்தை வெளியிடுகின்றேன். இதுவரையிலும் எழுதி வந்தது கடிதத்திற்கு 'முகவுரை'யாகும். இனிமேல்தான் விஷயம். ஆசிரியரவர்களே, இனி ஊன்றிப் படியுங்கள்.

வில்லிங்டன் சர்க்காரோ இப்போது எந்த ஆசிரியனையும் விளையாட அனுமதிப்பது கிடையாது. என்ன செய்வது? கொஞ்சம் சில்லறை மிஞ்சிய பத்திரிகைகள் சுமாராக விளையாடி சமாளித்துக் கொள்ளுகின்றன. ஆனால் அடியேனைப் போன்ற ஏழை ஆசிரியர்களின் கதியென்ன? நான் ஒரு வரி மிஞ்சி எழுதினால் 5000 ரூபா அபேஸ் ஆகி விடும். 5000 ரூபா இப்பண நெருக்கடியான காலத்தில் சாமான்யமான தொகையல்ல என்பது தங்களுக்குத் தெரியாத விஷய மல்ல. திடீரென்று 'ஸேல்ஸும்' குறைந்து விட்டது. இப்போது எங்களைக் கைதூக்கி விடுவது யார்? 'போட்டிப் பரிசு' தான் எங்களது போஷகர். இது நவீனக் 'கலை'களில் ஒன்று என்பதை நான் தங்களுக்குச் சொல்ல வேண்டியதில்லை. இனி விஷயத்தைக் கூறுகிறேன்.

1000 ரூபா என்ன பிரமாதம்? 10000 ரூபா என்று போடுவோம். விடைகள் ஸ்டாம்புகளுடன் வரும். இதில் எங்களுக்கு 30000 ரூபா ஸ்டாம்புகள் அகப்படும். ஆனால்......? '7000 ரூபாய்தான் ஸ்டாம்பில் வந்தது. சரியான விடை யெழுதியவர்கள் 8500 பேர்கள். நாம் 3000 ரூபா மேலே போட்டு தலா 1—4—0 விகிதம் 8500 பேர்களுக்கும் பரிசு கொடுக்கும்படி நேர்ந்து விட்டது' என்று பத்திரிகைகளில் வெளியிடுவோம். ஏழைப் பத்திரிகாசிரியர்களாகிய நாங்கள் இப்படிப் பிழைக்காமல் எப்படிப் பிழைப்பது என்று தங்களைக் கேட்கின்றேன்?

அன்றொரு நாள் 'நக்ஷத்திரம்' பத்திரிகாலயத்திற்குச் சென்றிருந்தேன். அப்போது 'நக்ஷத்திரம்' ஆபீஸ் மானேஜர் முன்பு ரூபாய்கள் வரிசை வரிசையாக அடுக்கப்பட் டிருந்தன. மானேஜர் மணியார்டர் பாரங்களில் கையெழுத்துப் போட்டுக்கொண் டிருந்தார். இவ்வளவு ரூபாய்களைப் பார்த்ததும் என் வயிறு எரிந்தது. என் பத்திரிகையில் இவ்வளவு விற்பனை யில்லையே என்பதுதான் அதற்குக் காரணம். 'சார்! ஏஜண்டுகள் உங்களுக்குச் சரியாகப் பணம் அனுப்புகிறார்களா?' என்று நான் மானேஜரைக் கேட்டேன். 'தமிழகத்தில் ஏஜண்டுகளிடமிருந்து பணம் எதிர் பார்த்தால் பத்திரிகைக்காரர்கள் ஏமாந்து போக வேண்டியவர்களே! இதோ, இந்த ரூபாய்களெல்லாம்

'போட்டிப் பரிசு'க்காரர்களின் பிரவேசக் கட்டணம் சார்!' என்று சிரிப்புடன் விடை யளித்தார் மானேஜர். உம்.........என்று பெருமூச்சு விட்டுக்கொண்டு உள் நுழைந்தேன்.

அங்கு 'நக்ஷத்திரம்' ஆசிரியர் திரு. நடராஜமணியவர்கள் எதையோ கிழித்துக் கிழித்துக் குப்பைத் தொட்டியில் போட்டுக்கொண் டிருந்தார். 'என்னத்தை சார்? கிழித்துக்கொண் டிருக்கின்றீர்கள்? என்று அடியேன் கேட்டேன். (ஆசிரியரவர்களே, திடுக்கிடாதீர்கள்.) 'ஓ—ஹோ! இவைகளா? போட்டிப் பரிசு விடைகள் சார்! எவ்வளவு என்று பார்க்கிறது போங் கள்? இதோ பாருங் கள்? உள்ளூரினின் றும், வெளியூர்களி னின்றும் வரும் போட்டிப் பரிசு விடைக ளடங்கிய கவர்களை உடைத்து அவைகளினுள் அட ங்கி யிருக்கும் தபால் தலைகளை இதோ இப் பெட்டியில் போடு கின்றோம். விடை களைக் கிழித்துக் குப்பைத் தொட்டி யில் போடுகின்றோம். பிற்பாடு 100 விடை களை எடுத்துக் கொண்டு எங்களிஷ் டப்படிக் குலுக்கிப் பரிசு தருகின்றோம்' என்று புன்னகையுடன் மொழிந்தார் நடராஜமணியவர்கள். இதைக் கேட்டதும் அடியேன் மனம் இன்பத்தி லாழ்ந்தது. இவ்வற்புதமான முறையைத்தான் அடியேனும் நாளது வரையில் பின்பற்றி வருகிறேன். நாங்கள் மனிதர்களல்லவா? மக்களை ஏமாற்ற வேண்டிப் பல விளக்கெண்ணெய்த் தலையங்கங்களையும், விநோத ஹாஸ்யக் கட்டுரை களையும் எழுதுவதினால் எங்கள் மூளை கலகலத்துப்போ யிருக்கிறது. அப்படி யிருக்க நாங்கள் எவ்வளவு விடைகளைப் பார்க்க முடியும்? ஆதலின் மேற் கண்ட விதம் செய்ய வேண்டியது தர்மம் என்றே நான் கூறுகின்றேன். இதற்குப் பாவம், கீபம் ஒன்றும் கிடையாது. சுருங்கக் கூறின், பாபத்திலும் சாபத்திலும் அடியேனுக்கு நம்பிக்கையே கிடையாது.



'பத்திராதிபர் முடிவே சரியானது. பத்திராதிபர் இஷ்டப்படிச் செய்ய அவருக்கு அதிகாரமுண்டு'—இது போட்டிப் பரிசு ஷாத்துக்களில் ஒன் றாகும். அதுவும் முக்கியமான தொன்றாகும். இந்த ஷாத்தை மாத்திரம் நாங்கள் போடாவிட்டால் எங்கள் கதி என்னவது?

உதாரணமாக, 'அநுமார்' பத்திரிகையின் ஆசிரியர் திரு. ராமானுஜாச் சாரியார் நல்ல யௌவன புருடர். வழக்கப்படி போட்டிப் பரிசு விடைகள்

குலுக்கி எடுக்கப்பட்டன. சரியான விடைகள் இரண்டே வந்திருந்தன.



அச்சமயம் அவரது காதலி பங்கஜவல்லி அங்கிருந்தாள். அவரது நண்பன் ராமமூர்த்தியும் அங்கிருந்தான். அவர்கள் இருவருக்கும் அச்சமயம் எப்படி இருந்ததோ நாம் அறியோம். திடீரென்று பங்கஜம், ஆசிரியர் கன்னத்தில் ஒரு முத்த மிட்டாள். ராமமூர்த்தியோ ஆசிரியரது காத்தைப் பிடித்துக் கொண்டு, 'டேய் ராமாஞ்சா! பஸ்ட் பிரைஸ் எனக்குடா?' என்றான். மறுநாள் 'அநுமார் பத்திரிகையின் இதழ்களில் பின் வரும் எழுத்துக்கள் காணப் பட்டன. 'முதல் பிரைஸ் ரூபா 500 ஸ்ரீமதி பங்கஜவல்லி அம்மையாருக்கும், இரண்டாவது பிரைஸ் 300 ரூபா திருவாளர் ரங்கனுதமவர்களுக்கும் வழங்கப்பட்டது. முதல் வெகுமதி ஒரு மாதரசிக்குப் போனது குறித்து நாம் மட்டற்ற மகிழ்ச்சி யடைகிறோம். 'எட்டும் அறிவினில் ஆணுக்கிங்கே பெண் இளைப்பில்லை காணென்று கும்மியடி' என்ற பாரதியாரின் வார்த்தைகள் பலிக்கும் சமயம் வந்துவிட்டது—அது அதிக தூரத்திலில்லையென்றே நாம் கருதுகிறோம்.'

ஆக, 'தமிழரசு' ஆசிரியரவர்களே! காதலியின் முத்தத்தை அலட்சியம் செய்வது முடிகிற காரியமா? அல்லது நண்பனது வேண்டுகோளை நிராகரிக்கத்தான் முடியுமா? 'பொன்னவிர் மேனிச் சுபத்திரை மாதைப் புறங் கொண்டு போவதற்கு' வழி யென்ன என்று அர்ஜுனன் கிருஷ்ணனைக் கேட்டான். கண்ணன் வழி சொன்னான். தனது தங்கையையும்.............. கொடுத்தான், அத்தகைய தன்மையே நட்பின ரிருவருக்குள் இருக்க வேண்டுமென்று பாரதியார் கூறுகின்றார். ஆக நண்பனது எண்ணத்தைத் திருப்தி செய்ய வேண்டாமா? ஆக, இத்தகைய சந்தர்ப்பங்களில்—நெருக்கடியான சமயங்களில்—மிக மிக ஆபத்தான வேளைகளில்தான் மேற்கண்ட ஷரத்துக்கள் சமய சஞ்சீவியைப் போல உதவுகின்றன.

எனது பந்துக்களில்—முதலியார் மிகவும் ஏழை. 'செல்வர்க் கழகு செழுங்கிளை தாங்குதல்' அல்லவா? ஆக, அவருக்குச் சென்ற வாரந்தான் ஒரு 1000 ரூபாப் போட்டிப் பரிசு விடை மூலமாகக் கொடுத்து உதவினேன். இதற்கெல்லாம் 'முடிவாக ஆசிரிய ரிஷ்டம்' என்னும் ஷரத்தே மூல காரணமாக நிற்கின்றது.

இவ்வித மெல்லாம் செய்தாவது 5000 ரூபா சம்பாதிக்கலாமென்று எண்ணமிட்டுக்கொண் டிருக்கும் சமயத்தில் உங்களது பத்திரிகையில் 'பரிசுகளை'த் தாக்கி ஒரு கட்டுரை வெளிவந்தது என் தலையில் ஒரு பாராங்கல்லையும், வாயில் ஒரு பிடி மணலையும் போட்டதுபோ லிருந்தது. ஆக 'தமிழரசு'

ஆசிரியரவர்களே! இத்தகைய கட்டுரைகளால் தமிழ் நாட்டைச் சீர்படுத்த முயலுவது அறிவீனம் என்று நான் சொல்ல வேண்டியவனு யிருக்கிறேன். சென்னையில் 'நியூ வொர்ல்டு' 'கிங்ஸ் டவுன் பார்க்கு' முதலிய இடங்களில் காசை வீணுக்கும் பிரபுக்கள் 'போட்டிப் பரிசு' மோஹ வலையில் இன்னும் விழவில்லை யென்றே நினைக்கிறோம். கூடிய சீக்கிரத்தில் இவர்களும் 'பரிசு' விடைகளில் கலந்து கொள்ளுவார்களென்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஆதலின், ஆசிரியரவர்களே, தங்களது 'அருமையான 'தமிழரசி'ல் இம் மாதிரி அநாவசியமாக எங்களைப்பற்றி எழுதாதீர்கள். பச்சையாகக் கூறு கிறேன்—நாங்கள்—இல்லை, இல்லை, என் வரையிலும், தேசமக்களுக்கு உப காரமோ, கல்வியறிவோ அளிக்கத் தயாராகவில்லை. வியாபார நோக்கத் துடனேயே நான் பத்திரிகையை ஆரம்பித்தேன். சிறை சென்றேன். 5000 ரூபா கொட்டியிருக்கிறேன். எல்லாத் தியாகமும் வியாபார முன்னேற்றத்தின் பொருட்டேயாகும். ஏழைப் பத்திரிகாசியர்களாகிய எங்களுக்கு இம்மாதிரி செய்து வயிறு பிழைக்கும்படி ஆண்டவனே கட்டளை விதித்திருக்கின்றார் என்பதை நீங்கள் இப்போதாவது தெரிந்து கொள்ளுங்கள்.

ஆசிரியரவர்களே, இனியாவது தாங்கள் இம்மாதிரி கட்டுரைகளை வெளி யிடாதிருக்குமாறு எச்சரிக்கை செய்கிறேன். எனது எச்சரிக்கையை மீறி மீண்டும் இத்தகைய விஷமத்தனமுள்ள கட்டுரையை வெளியிடுவீரானல் அப்புறம் நான் தங்களை என்ன............னென்று சொல்ல முடியாது. அப்புறம் தங்களிஷ்டம்.

இப்படிக்கு

ஆசிரியன்—ஜெகஜ்ஜாலன்.

கைகாட்டி மரம் - ராமசாமி!

'தோழர்' ஈ. வே. ராமசாமியினது பொது உடைமை வெடிகள் திடீர் திடீரென்று வெடிப்பது அன்பர்கள் செவிகளைச் செவிடாக்கி யிருக்கலாம். பெரியாரிட மிருந்து சமீபத்தில் புது வெடி யொன்று புறப்பட்டிருக்கிறது. 'சிவில் ஜெயில் முறை ஒழித்தல்' என்பது இந்த வெடியின் பெயர். 'சிவில் ஜெயில் முறை ஒழிய வேண்டும். பணக்காரர்களிடம் கடன்பட்ட விவசாயிகள், ஏழைகள் கடன் தொகை கட்ட முடியாமல் சிறை செல்ல அஞ்சிக் கிடக்கும் நிலைமை விரைவில் ஒழியப் போகின்றது. ஆகவே, அந் நிலைமை ஒழிய வேண்டு மென்பதற்கு வழிகாட்டியாக நான் சிறைவாச மேற்கொண்டேன்' என்று நமது பெரியார் கூறுகின்றார். பல தடவைகளில் அநேகரை 'அன்னக்காவடி' கள் என்றழைத்த இந்தப் பெரிய காவடி ராமசாமி ஏழை, குட்டிக்கரணம் போட்டு விழுந்தாலும் மீசையில் மண்படவில்லை யென்றும், அதுவும் ஒரு கரடி வித்தையென்றும் கூறுகின்றதைக் கேட்கக் கேட்க, நமது மனம் மிக மிக மகிழ்ச்சி யடைகின்றது.

ஆகவே, கடன்காரர்களே! நீங்களும் இந்தக் கைகாட்டி மரமான ராம சாமியார் குறிக்கும் பாதை வழியே செல்லுங்கள்; கடன் கொடுத்தவர்களுக்குப் பட்டை நாமம் போட இதைவிட வேறு சிறந்த வழியே கிடையாது.

இந்த ராமனது புதிய புதிய திருவிளையாடல்களைக் கண்டு களிப்பதற்குச் சகோதரி நாகம்மாள் இல்லாமற் போய்விட்டாரே!



கரமுஷ்டி யுத்தம்

'தீண்டாமை யாவது ஒழிய வேண்டும்: அல்லது நானாவது மறையவேண்டும்'

—மஹாத்மாஜீ.

ஆக, அப்போதுதான் இச் சண்டையில் தோற்பு கெலிப்பை நாம் அறியமுடியு மெனத் தெரிகிறது.

ஹிந்து மதத்திற்கும், நாட்டின் விடுதலைக்கும் முட்டுக்கட்டையாக விளங்கும் தீண்டாமைக்குத் தமிழர்கள் ஆசி கூறி ஆதரவளிக்கப் போகிறார்களா? அல்லது ஹிந்து மதத்தின் முன்னேற்றத்திற்கும், இந்திய அன்னையின் விடுதலைக்கும் உயிர் நாடியாய் விளங்கும் எம் மஹாத்மாவுக்கு ஆசி கூறி ஆதரவளிக்கப் போகின்றார்களா?

'மஹாத்மா நீடூழி வாழ்க! தீண்டாமை ஒழிக' என்ற சப்தம் அதோ, ஹிந்துஸ்தானத்தையே பிளக்கின்றது!

கல்கி கண்ட கனவு

[உண்மை உணர்ந்தோன்]

சேஷன் இப்போதுதான் பி. ஏ. பரீட்சையில் தேறினான். ரிசல்ட் வெளிவந்ததோ இல்லையோ, பலர் சேஷனுக்குப் பெண் கொடுக்க அப்ளிகேஷன்கள் போட்டனர். சேஷனும் மிகுந்த சிரமத்துடன் அப்ளிகேஷன்களைப் பரிசீலனை செய்து, ஒரு அப்ளிகேஷனைத் தேர்ந்தெடுத்தான். அந்த அப்ளிகேஷனுக் குரியவள் ஒரு இளம் பெண்; வயது 14; இங்கிலீஷ் படித்தவள். மிகவும் சுந்தரி. அவனது விருப்பப்படி விவாகத்திற்கு 5000 ரூபாயும் 'சாந்தி'க்கு 2000 ரூபாயும் கொடுப்பதாக அப்பெண்ணின் பெற்றோர் ஒப்புக்கொண்டனர். விவாகமும் நடந்தேறியது.

இப்போது சேஷனும் ஜெயமும் சென்னையில் வந்து வசிக்கின்றனர். சேஷன் அப்ளிகேஷன்களுக்காகச் செலவழித்த காகிதங்கள் எண்ணி லடங்கா. அலையாத இடங்களில்லை. எங்கு நோக்கினும் 'நோ வேகன்ஸி' (வேலை காலியில்லை) யாகவே இருந்தது. கடைசியில் எந்தத் தெய்வத்தின் அதிர்ஷ்டத்தாலேயோ சேஷனுக்கு 40 ரூபாயில் ஒரு குமாஸ்தா வேலை கிடைத்தது.

வேலை கிடைத்த சங்கதி தெரிந்ததும் சேஷனது பெற்றோர், 'சாப்பாட்டிற்குப் பணம் வேண்டுமென்றும், வாய்தா கட்டவேண்டுமென்றும்' அடிக்கடி எழுதலாயினர். சேஷன் என்ன செய்வான். சம்பளமோ தன் செலவுக்கே போதவில்லை. பளிச்சென்று சேஷன் திருமூளையில் ஒரு யோசனை உதயமாயிற்று. 'அட ஜெயம்! நான் ஒரு பிளான் போட்டிருக்கேன். அதனை முடிக்க வேண்டியது உனது பொறுப்பு. விவரம் நாளை சொல்லுகிறேன்' என்றான் சேஷன்.

மறுநாள் சேஷன் ஆபீஸுக்குப் போனவுடன் துரைக்கு ஒரு சீட்டனுப்பினான். அச் சீட்டைப் பார்த்ததும் துரையவர்கள் சேஷனை உள்ளே வர உத்தரவிட்டார். சேஷனும் உள்ளே சென்று சலாம் செய்து 'Sir, I have got a beautiful wife. She wants to speak with You' (ஐயா, எனக்கு ஒரு அழகான மனைவி யிருக்கிறாள். அவள் தங்களோடு பேசவேண்டுமென்று விரும்புகிறாள்) என்று சொன்னதைக் கேட்டதும், 'Thank you,

send her tomorrow night' (வந்தனம், அவளை நாளை இரவு அனுப்பு) என்றார்.

*   *   *

'அட! நமக்கு நல்ல காலம் பிறந்திருக்கிறது. நாளை இரவே என்னையும் உன்னையும் துரை தம் பங்களாவுக்கு வரும்படிச் சொல்லி விட்டார். நாளை மாலை நன்றாய் அலங்கரித்துக்கொண்டு ஆயத்த மாய் இரு' என்றான் சேஷன்.

ஜெயத்தின் மனது திடுக்கிட்டது. அவளுக்கு ஒரு நிமிடம் உல கத்தின் நினைவே யில்லை. தன் பெற்றோர்களைச் சபித்தாள். 'பி. ஏ., பட்டதாரிகள் தலையில் இடிவிழட்டும்! என்ன பட்டம்? பட்ட தாரியோ மானத்தை விற்று உத்தியோகத்தைப் பலக்கச் செய்துவாழ நினைக்கின்றான். இது பெண்ணின் தற்கால கேவலத் தன்மையைக் குறிக்கின்றது. பெண்களை மிருகங்களென நினைக்கும் இந்து மதத் தில் நான் ஏன் பிறந்தேன்?' என்று யோசித்துக்கொண்டே, (நெஞ்சை அடைத்த துயரத்தால்) உறங்கலாயினாள்.

*   *   *

இரவு 8 மணி. சேஷன் ஜெயத்தை அழைத்துக்கொண்டு பங்க ளாவுக்குள் நுழைந்தான். அப்போது சேஷன் ஜெயத்தை நோக்கி, 'ஒரு வேளை துரை உன்னை பங்களாவிலேயே இருக்கச் சொன்னால் அதற்குத் தடை செய்யாதே. சிறிதளவும் அச்சம் வேண்டியதில்லை. இச் சரீரத்தைப்பற்றிக் கவலை கொள்வது மதியீனம். உள்ளன் புதான் முக்கியம். ஆக, எதைப்பற்றியும் நீ தயங்க வேண்டியதில்லை.



நான் விடியற்காலையில் 5 மணிக்கெல்லாம் வண்டியுடன் வந்து, உன்னை அழைத்துப் போய் விடுகிறேன்' என்றான்.

இதைக் கேட்டதும் ஜெயத்தின் இருதயம் வெடித்து விடும்போ லிருந்தது. 'ஆகட்டும்! சரியான வேலை செய்கி றேன்' என்று தனக்குள் ளேயே கூறிக்கொண்டு மேல் நடந்தாள். சேஷ னும் துரையைக் கண்டு ஜெயத்தை துரைக்கு அறிமுகம் செய்து வைத்த பின் அவளை அங்கேயே விட்டுத் தன் வீடு நோக்கித் திரும்பினான்.

துரையவர்கள் ஜெயத்தைப் பார்த்து, மனம் பூரித்தவராய்க் கிட்டே நெருங்கி, 'என் கண்ணே வா! எனக்கு ஒரு முத்தம் கொடு' என்றார்.

அதைக் கேட்ட ஜெயம் சற்று ஒதுங்கி, 'எனக்கு, ஒரு வரம் வேண்டும். அவ் வரத்தைக் கொடுப்பதாய் வாக்களித்தால் தங்களிஷ்டம் போல் முத்தம் தருவேன்' என்றாள்.

'உன் புருஷனுக்குப் பெரிய வேலை தானே? நாளைக்கே கொடுத்து விடுகிறேன். அதைப் பற்றிக் கவலை வேண்டாம். தாராளமாய்க் கேள்!' என்றார் துரை.



'இல்லை! இல்லை!! தாங்கள் நினைப்பது தவறு. எங்கள் நாட்டுப் பட்டப்படிப்பில் மோஹங் கொண்ட எனது பெற்றோர் கலியாணத்திற்கு ரூபா 5000மும் சாந்திக்கு ரூபா 2000மும் கொட்டிக் கொடுத்து என்னைச் சேஷனுக்கு—இம்மான மற்ற மிருகத்திற்கு ஒப்படைத்தனர். அதனைச் செலவழித்து விட்டு இப்போது என் மானத்தைப் பொருட்படுத்தாது அவன் தன் சுகத்தையே மதித்து என்னைத் தங்கள் வசம் சேர்ப்பித்தான். மீண்டும் நான் அவனிடம் சென்றால் என்னை இன்னும் எத்தனைப் பேர்களிடம் அனுப்புவானோ தெரியாது! ஆதலின் நான் திரும்பி அம்மிருகத்தினிடம் செல்ல மாட்டேன். இன்று முதல் என்னையே மனைவியாகப் பாவித்துத் தாங்கள் என்னோடு வாழ வேண்டும். மேலும் சேஷனை நாளையதினமே வேலையினின்றும் விலக்கிவிட வேண்டும்' என்றாள்.

துரை இதனைக் கேட்டு ஸ்தம்பித்துப் போய் விட்டார். 'சாந்தி முகூர்த்தம் செய்ய உங்களில் புருடனுக்கு 2000 ரூபா கொடுக்க வேண்டுமா? அது உங்கள் மதத்தில் இருக்கிறதா? அப்படியானால் எனக்கு என்ன கொடுப்பாய்?' என்று புன்சிரிப்புடன் கேட்டார் துரை.

'தங்களுக்கு 2000 ரூபாயினும் ஆயிர மடங்கு ஆனந்தத்தை யளிக்கும் ஒரு முத்த மளிப்பேன். அன்றியும் எனது உடலையே தங்களுக்கு அர்ப்பணம் செய்வேன்' என்று சொன்னாள் ஜெயம்.

இவ்வாருக இருவரும் சரச வார்த்தைகளாடி ஆனந்தமாய் அன் றிரவைக் கழித்தனர்.

* * *

காலை $5\frac{1}{2}$ மணி. சேஷன், முன்னேற்பாட்டின்படி ஜெயத்தை வீட்டிற்கு அழைத்துப் போக வேண்டி மாட்டு வண்டியைக் கொண்டு வந்து பங்களாவிற்கு அருகில் நிற்க வைத்து விட்டு அப்பக்கத்தில் உலாவிக்கொண் டிருந்தான். மனைவி வரவே காணும். காத்துக் காத்துக் களைத்து விட்டான். மணி 10 ஆயிற்று. என் செய்வான் பாவம்? ஆபீஸுக்குப் போக வேண்டும். அங் கும் இங்கும் பேந்தப் பேந்த விழிக்கிருன். அச்சமயம் ஜெயம் துரையின் கையைக் கோத்துக் கொண்டே பங்களாவி னின்றும் வெளி வந்தாள். வாச லில் 'கார்' தயாராக யிருந்தது. சேஷனைப் பார்த்தும், பார்க்கா தவள்போல ஜெயம் முகத்தைத் திருப்பிக் கொண்டே துரை யுடன் காரில் ஏறி ஞள். காரும் புறப் பட்டு விட்டது. இக் காட்சியைக் கண்ட



தும் சேஷன், உடலில் மின்சாரம் தாக்கப்பட்டவன்போ லானுன். விழிகள் வெளிவந்து விடும்போல் தோன்றிற்று. சேஷன் கார் செல் லும் வேகத்தை ஒரு முறை பார்த்தான்; இரண்டு முறை பார்த் தான்; நூறு முறை பார்த்தான். அப்படியே பார்த்துக்கொண்டே யிருந்துவிட்டான். அதற்குள் துரையும், ஜெயமும் 'ஆர்' ஷாப்புக்குப் போய் வைர நகைகளையும், ஒயிட்டவேயிக்குப் போய் பார்ஸி உடை களையும் வாங்கி யணிந்துகொண்டு பங்களா வந்து சேர்ந்தனர். துரை ஜெயத்தை மாத்திரம் பங்களாவில் இறக்கிவிட்டுத் தாம் ஆபீ ஸுக்குச் சென்று விட்டார்.

சேஷனுக்கு அப்போதுதான் உணர்வு வந்தது. அவசர அவசர மாக ஓடோடிச் சென்று ஆபீஸை அடைந்தான். மணியோ 12 ஆகி விட்டது. ஹெட் கிளார்க் சேஷன் கையில் ஒரு காகிதத்தைக் கொடுத்தார். சேஷன் பிரித்துப் பார்த்தான். அது அவனை வேலையி லிருந்து நீக்கிவிட்டதை அறிவிக்கும் டிஸ்மிஸ் ஆர்டராக இருந்தது. சேஷன் விழிகளினின்று கண்ணீர் ஆருகப் பெருகி ஓடியது.

வீடு திரும்பிய சேஷன் மனம் என் னிலையில் இருக்கும் என் பதை வாசகர்களுக்கே விட்டுவிடுகின்றோம்.

சேஷனுக்கு வேலை எங்கும் கிடைக்கவில்லை. இது சங்கதி எங்கும் பரவவே வேறு பெண்ணை விவாகம் செய்து வரதக்ஷணை வாங்கிப் பிழைக்கவும் முடியவில்லை. கடைசியில் தேசத் தொண்டு செய்வதாய்ச் சொல்லி வயிறு வளர்க்க முற்பட்டான் சேஷன்.

பாழும் பட்டப் படிப்பின் கொடுமையை யுணர்ந்த சேஷனது மாமனுரோ, அவரது மற்ற பெண்களை வியாபாரிகளுக்கும், விவசாயி களுக்கும் வரதக்ஷணை யின்றி மணம் செய்வித்துத் தாமும் சுகமாக வாழ்ந்து வாலானர்.

* * *

'அட பாவி! அட கர்மமே! ஆ! மானங்கெட்டவனே' என்று கூறிக்கொண்டே படுக்கையினின்றும் அலறியடித்துக்கொண்டு எழுந் தேன். என்னெதிரில் எனது நண்பன் பாலன் உட்கார்ந்து சிரித்துக் கொண்டிருந்தான்; 'என்னடா கல்கி! இன்று பகல் 5 மணி வரையி லும் தூங்கிவிட்டாய். யாரையோ திட்டிக்கொண்டு எழுந்தாயே? என்ன கினவு கனவு கண்டாயா?' என்று என்னை நோக்கிக் கேட்டான்.

நான் எனது கண்களைத் துடைத்துக்கொண்டே, 'ஆம்! பயங் கரமான கனவு!' என்றேன்.

பின்னர் நான் கண்ட கனவை விவரமாகப் பாலனிடம் தெரி வித்தேன். பாலன் இடி இடி யென்று சிரித்தான். 'கல்கி! இந்துஸ் தானம் இம்மாதிரி ஈன நிலையை அடைந்துவிட்டதடா! ஆம்! பட்ட தாரிகள் படும்பாடு ஆண்டவனுக்கே வெளிச்சம். இந்தியர் மான மற்றவர்களாய்ப் போய்விட்டனர் அந்நியர் நம்மை ஆளும் வரையில்—அடிமைப் படிப்பு நம்நாட்டில் இருக்கும் வரையில் இந்துஸ் தானத்தில் இப்பயங்கரக் காட்சிகள் இருந்து கொண்டுதா' னிருக்கும் என்முன் பாலன்.

நான் கண்டது வெறுங் கனவே யென்று உணர்ந்தவுடன் என் மனம் நிம்மதி யடைந்தது. பாரதநாடு மானமுள்ளதாக விளங்கட்டு மென்று பராசக்தியைப் பிரார்த்தித்தேன்.

பெண்களுக்குப் பரிசு

இம்மாத வெளியீட்டில் 370-ஆம் பக்கத்தில் மாதரின் வழிபாட்டைப் பற்றிய படங்கள் பிரசுரிக்கப்பட்டுள்ளன. பெண்மணிகளிட மிருந்து அவை பற்றிய கட்டுரைகளை எதிர் பார்க்கிறோம். தகுதியான வியாசம் பிரசுரிக்கப்படுவதோடு அதற்குச் சன்மானமும் அளிக்கப்படும்.

பெண்ணின் பெருமை

[தேசீயக்கவி. சி. சுப்பிரமணிய பாரதியார்]

1. சக்தி யென்ற மதுவையுண் போமடா
தாளங் கொட்டித் திசைக ளதிரவே
ஒத்தி யல்வதோர் பாட்டுங் குழல்களும்
ஊர் வியக்கக் களித்துநின் றுடுவோம்.

2. உயிரைக் காக்கும்; உயிரினைச் சேர்த்திடும்;
உயிரினுக் குயிரா யின்ப மாகிடும்
உயிரி னும்மிந்தப் பெண்மை யினிதடா!
ஊது கொம்புகள்! ஆடு களிகொண்டே!

3. 'போற்றிதாய்' என்று தோள் கொட்டி யாடுவீர்
புகழ்ச்சி கூறுவீர் காதற் கிளிகட்கே
நூற்றி ரண்டு மலைகளைச் சாடுவோம்
நுண்ணிடைப் பெண் ணொருத்தி பணியிலே.

4. 'போற்றிதாய்' என்று தாளங்கள் கொட்டடா!
'போற்றிதாய்' என்று பொற்குழ லூதடா!
காற்றி லேறியவ் விண்ணையுஞ் சாடுவோம்
காதற் பெண்கள் கடைக்கண் பணியிலே.

5. அன்னமூட்டிய தெய்வ மணிக் கையின்
ஆணை காட்டில் அனலை விழுங்குவோம்
கன்னத் தேமுத்தங் கொண்டு களிப்பினும்
கையைத் தள்ளும் பொற்கைகளைப் பாடுவோம்.

விதிக்கும் எமனுக்கும் தப்பி வாழமுடியுமா?

3.

பலியிடுவதால் பயனில்லை

1.



ஆவேசக்காரி - [illegible] பூவாடைக்காரி [illegible] கொடுங்கள் பிள்ளை பிழைப்பான்.

THE SOUTH INDIAN HUMANITARIAN LEAGUE
436, MINT STREET, MADRAS

அம்மனை சந்நதிச் சென்று நேற்று சாமியாடி சொன்ன வாறு உயிர்க்குயிர் கொடுத்தால் பிள்ளை எழுவான் என்றது பழம் கொடுக்க வேண்டும் என கேட்கிறார்கள்.

2.



பூசாரி - ஐயா, அம்மன் பழங்காலத்து விட்டான் இனி பயமில்லை - உயிருக்குயிர் மறவாமல் கொடுத்துவிடுங்கள்.

வர வர வியாதி அதிகரித்துக்கொண்டே வருகிறது, எமன் நாட [illegible] எண்ணிக்கொண்டே வருகிறது.

குழிப்பு சுற்றிப் போடுகிறார்கள்.

பிறகு
டாக்டரைக்
கூப்பிட்டுக்
காண்பிக்கின்றார்கள் 4

5.
டாக்டர்
சந்தேகமாய்
சொன்னபடியால்
ஜோஸ்யரை கூப்பிட்டு
ஜாதகம் பார்க்கும்படி
சொல்லுகிறார்கள்.



6.

விதியின் வலிமையால் பையன் இறந்து போனன்



காதலுக்குப் பலி

[இளங்கோவன்]

I

பாஞ்சால நாட்டிலே யமுனை நதிக்கும் ஸத்லேஜ் நதிக்கும் இடையே ஒரு பெருங் காடு. 'மிலேச்சர் வீழ்க! ஜயஜண்டி' என்ற வீர ஒலிகள் அக்காடு எங்கும் எதிரொலிக்கின்றன. தெய்வ லோகத்தில்கூட இத்துணை ஒற்றுமை, இத்துணை ஆனந்தம், இத்துணை அன்பு இருக்குமோ என்பது சந்தேகமா யிருக்கிறது. இத்தனை பரபரப்புக்கும், இத்தனை கோலாகலத்திற்கும் காரணம் என்ன? இந்த விருந்து எதற்காக நடைபெறுகிறது? இந்த விருந்தை நடத்தும் எஜமானன் யார்?

அதோ அவ்வுயரிய ஆசனத்தின்மீ தமர்ந்து தன் தோழர்களுக்கு உபதேசம் செய்துகொண் டிருக்கின்றானே, அவன்தான் இவ்விருந்துக்கு யஜமானன். அவனது கண்களில் தீப்பொறி பறக்கின்றது. அவனுடைய ஒவ்வொரு வார்த்தையும் அவர்களுடைய ஹிருதயத்துள் ஊடுருவிச் சென்று அவர்களுக்கு இரத்த வெறியையும் தர்ம வீரியத்தையும் ஊட்டுகின்றன.

அவன்தான் கள்வர் தலைவன் விக்கிரமசிம்மன் என்பான்.

விக்கிரமசிம்மன் மகா வீரன்; மகா தேசாபிமானி. அவனுக்குத் தன் தாய் நாட்டினிட மிருந்த பக்திக்கு அளவில்லை. அவன் பல தோழர்களைச் சேர்த்துக்கொண்டு, ஜனங்களை இம்சிக்கிற அரசாங்க உத்தியோகஸ்தர்களைத் தாக்கி அவர்களை ரக்ஷித்து வந்தான்.

அக் காலத்தில் ஷாஜஹான் தில்லி சக்கரவர்த்தியாக இருந்தான்.

தாய்த் திருநாட்டைத் தகர்த் தெறிந்துவரும் மிலேச்சர்களது கொடுமைகளை விக்கிரமன் எவ்வளவு நாளைக்குப் பொறுக்க முடியும்? விக்கிரமன் விடுத்த வேண்டுகோள்க ளெல்லாம் ஷாஜஹானால் புறக்கணிக்கப்பட்டு விட்டன. மும்தாஜ்பீகத்தின் மையலில் மூழ்கிக் கிடக்கும் ஷாஜஹானிடம் மேன்மேலும் வேண்டுகோள்கள் விடுப்பதை விக்கிரமன் விரும்ப வில்லை. அவனது கோபம் கொந்தளித் தெழுந்தது. உதிரம் பொங்கியது. சில நாட்களுக்கு முன்னர்தான் இருபது மிலேச்சர்களைச் சிறைசெய்து சண்டிதேவிக்குப் பலிகொடுத்தான். வீரவெறி கொண்டு ஒரு விருந்து நடத்த யத்தனித்தான்

விக்கிரமன். அந்த விருந்துதான் நாம் இச்சரித்திரத் துவக்கத்தில் வர்ணித்த விருந்தாகும்.

விக்கிரமனது பெருமித விழிகள் அவனது தோழர்களின் மீது பாய்ந்தன. தோழர்கள் மகா பக்தியுடன் அவனது வாய்ச் சொற்களுக்காகக் காத்துக்கொண் டிருந்தனர்.

அங்கிருந்தவர்களில் ஓர் சிறுவன் யாவர் உள்ளத்தையும் கவர்ந்து நின்றான். சிறுவனுக்கு வயது பதினைந் திருக்கலாம். கட்டமைந்த உடல். கமலக் கண்கள். தேவ ஒளி அவன் முகத்தில் வீசியது.

அவனது அகம் மாசில்லாதது; மாய மில்லாதது. கள்வர் தலைவனும், அவனது தோழர்களும் சிறுவனது அகக்கண்முன் தெய்வங்களாகக் காட்சி யளித்தனர். 'விக்கிரமன் மகா சக்தியின் ஜோதி; அதனை எதிர்த்து வெல்பவர் எவருமிலர்' என்று எண்ணினான் சிறுவன். விக்கிரமன் அருகில் அவனது மனைவி, இராணி ஹம்ஸாபாய் அமர்ந் திருந்தாள். அவளை யடுத்தாற் போல் அமர்ந் திருந்த ஒரு பெண் உருவத்தின் மீது சிறுவனது விழிகள் சென்றன.

பச்சிளம் பெண். பளிங்கு போன்ற பற்கள். பவள மனைய அதரம். உச்சியின் கூந்தற் படலங்கள் ஓடிவந்து அவள் மார்பின் இரு மருங்கினையும் தழுவி அணைந்துகொண் டிருந்தன. பொறுமை கொண்ட வாயு தேவன் கூந்தற் படலங்களை ஆலிங்கத்தினின்று பிரிந் தோடும்படி முயற்சி செய்கிறான். பயனில்லை—காற்றுத் தேவன் வெட்கி இப்போது மெதுவாக வீசுகின்றான். அக்கூந்தற் படலங்கள் இது காலை உவகை வெறி கொண்டு அவள் பால்போன்ற வெள்ளிய மார்பகத்தின்மீது புரண்டும், சுருண்டும், அலைந்தும், குதித்தும் விளையாடுகின்றன. இத்தகைய சுந்தரி யாவள்? அவள்தான் விக்கிரமனின் வீரப்புதல்வி கமலகுமாரி என்பவள்.

சிறுவன் காதல் தோய்ந்த கருத்துடன் அவளை நோக்கினான். குமாரியின் முகத்தில் குறும்புச் சிரிப்புக் குதித்தது. சிறுவன் அடைந்த மகிழ்ச்சிக்கு எல்லையில்லை, இறுதியில்லை. அக்ஷணத்திலேயே சங்கரனின் ஹிருதயம் குமாரிக்குத் தத்தம் செய்யப்பட்டு விட்டது.

"மாட்சிதீர் மிலேச்சர் மனப்படி யாளும் ஆட்சியி லடங்குவோன் ஆரிய னல்லன்; பிச்சை வாழ் வுகந்து பிறருடை யாட்சியில் அச்சமுற் றிருப்போன் ஆரிய னல்லன்; கொடுமைகள் ஒழிய வேண்டும். தர்மராஜ்ஜியத்தை ஸ்தாபிக்குமளவும் நமக்கு சுகம், போகம் முதலியவைகள் வேண்டிய தில்லை. அவரவர்கள் வாளின் மேல் ஆணை யிடுங்கள்" என்று கர்ஜனை செய்தான் விக்கிரமசிம்மன்.

மீண்டும், 'சண்டிதேவி வாழ்க! ஜயஜண்டி! மிலேச்சர் வீழ்க!" என்ற ஓரே ஆரவாரம். கானகம் அதிர்ந்தது.

II

நாட்கள் பல சென்றன. சக்கரவர்த்தி ஷாஜஹானது அரண்மனையிலுள்ள மைதானத்தில் விளையாட்டுப் பந்தயங்கள் நடந்துகொண்டிருக்கின்றன. இளைஞர்கள் ஒருவரையொருவர் வெல்லும் பொருட்டு முயற்சி செய்கின்றனர். அதோ, ஓர் இளைஞன் யாவரையும் வென்று வெற்றியுடன் நடக்கின்றான். அவன் முகத்தில் விஜயலக்ஷ்மி தாண்டவமாடுகின்றாள்! அவன் யார்? அவன்தான் சங்கரன்.

வல்லவனுக்கிய சித்திரம் போன்ற வனப் பமைந்த உருவம். வட்டக் கரிய விழிகள்; தைலங்களூட்டப்பெற்ற வண்டனைய கூந்தலினின்று வீசும் வாடை; பட்டுக் கருநீலப் புடவை; அதன்மேல் பாய்ந்தோடும் பச்சைக் கொடி மேகலை; முத்தால் வனைந்த முகத்திரை. இத்தகைய அலங்கார பூஷணியாய் அன்று வீற்றிருந்தாள் மும்தாஜ்.

மோகினி மும்தாஜ் தன் இருக்கையினின்று எழுந்து நாணத்தால் தலை குனிந்திருந்த சங்கரனது முகவாயைப்பிடித்து நிமிர்த்தினாள். சங்கரன் நாணங் கலந்த அச்சத்துடன் அவளை நோக்கினான். அவளது முகத்திரை அவளது பொன்னனைய கரங்களால் நீக்கப்பட்டது. அவளது உருண்டலையும் கண்களினின்று எழுந்த தீக்ஷண்யமான ஒளியை சங்கரன் வெல்லும் சக்தியின்றி மீண்டும் தலைகவிழ்ந்தான். மறுபடியும் மும்தாஜ் அவனது தலையைப் பிடித்து மெல்ல நிமிர்த்தினாள். சோலை மலரொளி யொத்த அவளது சுந்தரப் புன்னகையில் புனிதம் பிரதிபலித்தது. 'சங்கர்! நீ வருங்காலத்தில் ஒரு பெரிய காரியத்தைச் செய்வாய்!' என்ற வார்த்தைகள் அவளையு மறியாமல் தாமாகவே எழுந்து ஒலி செய்தன.

ஏற்கனவே வீர உணர்ச்சிகளால் புகைந்து கொண்டிருந்த சங்கரனது ஹிருதயம் இப்போது மும்தாஜ் மொழிகளால் கொழுந்து விட்டெரியத் தொடங்கியது. 'வீரச்செயல் புரிந்து வெற்றி பெறுவேன் அல்லது ஆவி துறப்பேன்' என்று தனக்குள்ளேயே சபதஞ் செய்தான் சங்கரன்.

மும்தாஜும் சங்கரனுக்கு ஆசி மொழிகள் கூறி வாழ்த்தினாள்.

III

சங்கரனுக்கு இப்போது வயது பதினெட்டு. இப்போது அவனிடத்தில் சிறுபிள்ளைக் குறிகள் மறைந்துபோயிருந்தன. காளைப் பருவ மடைந்து விளங்கினான் நம் சங்கரன். விக்கிரமன், அவனது

கோட்டை, அவனோடுண்ட விருந்து, அவனது புதல்வி கமலகுமாரி- ஆகிய இவைகளெல்லாம் சங்கரன் கருத்தினின்று கனவுபோல் மறைந்துவிட்டன.

மும்தாஜினது இராணுவப் படையில்—வாத்தியப் பகுதியில் பறை முழக்கும் தொழிலில் இப்போது அமர்ந்திருக்கின்றான் சங்கரன். அவனது புன்சிரிப்பும் இனிய முகமும் யுத்த வீரர்களின் ஊக்கத்தை ஊக்கி நின்றன. யாருடனேயோ சமர் முறுக்கும் பொருட்டு அப் படை அப்போது சென்றுகொண்டிருந்தது.

'ஹமீத்! விக்கிரமசிங்கன் இன்று வீழ வேண்டியவனே!' என்றான் சேனைத்தலைவன் ஸையத்கான்.

ஆ! அதென்ன! சங்கரன் கரங்களிலிருந்து பறை முழக்கும் கொம்புகள் கீழ் விழுந்து ஒலி செய்கின்றன!!

இக்காட்சியைக் கண்ட ஸையத்கான் மட்டில்லாக் கோபம் கொண்டான். 'சங்கர்! நீ இராணியின் ஊழியன். கொள்ளையடிக்கும் விக்கிரமசிம்மனது ஊழியனல்ல. கொம்புகளை எடுத்துக்கொள். கொள்ளைக்காரர்களுக்காக மீண்டும் நீ எப்போதாவது இரக்கங் காட்டுவாயானால்..............என்று கூறினான் ஸையத்.

'பிரபோ! பிரபோ! மன்னிக்கவேண்டும். ஆனால் தாங்கள் இம் மாதிரி என்னிடம் ஒழுங்கின்றி பேசுவதை என்னால் பொறுக்க முடியாது. நான் இராஜபுத்ரன் என்பதை நினைவில் வையுங்கள். அக் கொள்ளைக்கார விக்கிரமனது இருப்பிடம் எனக்குத் தெரியும். அதோ தெரியும் அம்மலைக் காட்டின் வழியே சென்றால் அவனது கோட்டையை அடையலாம். நம் வருகையை விக்கிரமன் எதிர்பார்த்திருக்க மாட்டான். மேலும் அவனது தோழர்கள் சிலரே' என்று அழுத்தமாய்க் கூறினான் சங்கரன்.

'உண்மைதானா? இவ்வார்த்தைகள் உண்மைதானா?' என்று ஸையது கூறிக்கொண்டே ஹமீத்கானை நோக்கி, 'ஹமீத் இன்றே விக்கிரமனைக் கொன்று அவனது தலையை ஈட்டி முனையில் சொருகி... ....

அப்போது வாத்தியங்கள் ஒலிக்கத் தொடங்கிவிட்டன. சங்கரனும் கடமைப்படி பறை முழக்கினான். வாத்தியங்களின் ஒலியில் அவர்களது பேச்சை மேலே கேட்க சங்கரனால் இயலவில்லை. ஆ! அவன் ஹிருதயம் எவ்வாறு துடித்தது!

'துரோகி! நான் ஒரு துரோகி' என்று தனக்குள்ளேயே சொல்லிக்கொண்டான் சங்கரன். வீரவாழ்க்கையை—யுத்த வாழ்க்கையை சங்கரன் வரவேற்று மகிழ்ந்தான். அவன் ஹிருதயத்தைக்

கொள்ளை கொண்ட கமல குமாரியின் தந்தைக்கு எதிராக—தேசாபிமானி விக்கிரமனுக்கு எதிராக—ஒரு விரோதியுடன் செல்ல அவன் மனம் விரும்பவில்லை. ஆயினும் என் செய்வது ? விதியின் கூற்று. ஆ! இதுதானே சங்கரனது காதலின் முடிவு ? காதலுக்குக் கைம்மாறு ?

சங்கரனது கரிய கண்களினின்று முத்துத் துளிகள் உருண்டு ஓடின. பறையோ சரியாக அடிக்கப்படவில்லை. வாத்தியக்காரர்கள் சங்கரனை வாயில் வந்தவாறு வைதனர். மறுபடியும் சங்கரன் முகத்தில் களிப்புத் தோன்றியது. வழக்கப்படி வெகு நன்றாக பறை முழக்கினான் சங்கரன்.

மணிகள் மறைந்து மாய்ந்தன; கன்னங்கரிய இருள்; நடு நிசி; மரங்க ளடர்ந்த பெருங் காடு. ஸையதின் படைகள் பதுங்கிப் பதுங்கிச் சென்றுகொண் டிருக்கின்றன.

விக்கிரமசிம்மனது கோட்டையை அணுகிவிட்டனர். கோட்டைக்கு இருவாயில்க ளிருக்கின்றன. முன் வாயிலைத் தாக்கி உட்புக நிச்சயித்தான் ஸையது. மற்றொரு வாயி லிருப்பதை ஸையத் உணர்ந்தானில்லை. 'சிறு சப்தம்கூட ஒருவரும் செய்யக்கூடாது. அப்படி செய்யும் ஒருவனுக்கு மரண தண்டனை நிச்சயம்' என்று கட்டளையிட்டான் ஸையது.

எங்கும் ஒரே இருள். நிசப்தம். 'டம டம' என்று கற்பாறையின்மீது உருண்டு செல்லும் ஓர் பறையின் சப்தம் அந்த நிசப்தமான அந்தகாரத்தைக் கலக்கியது.

அவ்வளவுதான் தாமதம் ! கோட்டைக் குட்புறத்தி லிருந்து, 'ஜயஜண்டி' பவானி மாதாகி ஜேய்! மிலேச்சர் வீழ்க !' என்ற ஜயத்வனிகள் கிளம்பின. பீரங்கிகள் அக்கினி ஜ்வாலைகளைக் கக்க ஆரம்பித்தன.

ஸையதும் அவனது சேனையும் பின்னடைந்து ஓர்புறத்தில் யோசனை செய்தனர். பின்னர் ஸையத்கான் கோட்டையைத் தாக்கும்படிக் கட்டளையிட்டான். மும்தாஜின் படைகள் கோட்டையைத் தாக்கித் தகர்த்து உட்புகுந்தன. ஆ! அங்கே கண்ட காட்சியென்ன? வெறும் காலியிடம். விக்கிரமசிங்கன் அவனது தோழர்களோடு பின்வாயில் வழியாக ஆரண்யத்திற்குள் ஓடிவிட் டிருந்தான். இனிமேல் அவனைப் பிடிப்பது அரிதென்று ஸையத் அறிவான். கோட்டை ஸையத் வசமாகியது.

நடுப்பகல். சங்கரன் ஸையத் முன்பு கொண்டுவரப்பட்டான். அவன் கரங்கள் கட்டப்பட் டிருந்தன. முகத்தினின்றும் உடலினின்றும் உதிரம் ஒழுகிக்கொண் டிருந்தது.

'இப் பைத்தியக்காரத்தனமான வேலையை ஏன் செய்தாய்?' என்று சங்கரனை நோக்கி வினவினான் ஸையது கான்.

'ஆம்! நான் செய்ய வேண்டியது அவசியமா யிருந்தது. அதை விட வேறுவழி எனக்கில்லை; நான் அதற்காக வருந்தவில்லை. நான் செய்த செய்கை அதோ, என் முன்னர் நக்ஷத்திரம்போல் ஜ்வலிக்கின்றதே' என்று அஞ்சாது பதி லளித்தான் சங்கரன்.

ஸையத் முகத்தில் சக்தி தாண்டவ மாடினாள். 'சுட்டுத்தள்ளுங்கள் சங்கரனை. இல்லை! இல்லை!! இவனைச் சுட்டுத் தள்ளினால் வீர ஸ்வர்க்கம் அடைந்து விடுவான். மலையுச்சியினின்று உருட்டி யமுனையில் தள்ளுங்கள்' என்று கட்டளையிட்டான் ஸையது.

* * * *

சங்கரன் ஒரு கோணிப்பைக்குள் அடைக்கப்பட்டு மலையுச்சிக்குக் கொண்டு போகப்பட்டான். இரு ஆட்கள் அம் மூட்டையைத் தூக்கி மலையுச்சியினின்று கீழே தள்ளினர். பயங்கர சப்தத்துடன் புரண் டோடும் யமுனைநதியில் 'தொப்' என்ற ஒலி கேட்டது.

வீரச் சங்கரனைப் பற்றி இராஜபுத்திரர்கள் பெருமையுடன் பேசிக் கொள்வதை இன்றும் நாம் கேட்கலாம்.

வெள்ளைச் சர்க்கரையின் கேடு

OFFICE OF THE REGISTRAR OF ... 19 JUN 1933 MADRAS

1. அதில் உணவுக்குரிய சத்தே இல்லை.
2. அது அதிக விலையான பொருள்.
3. இந்தியாவில் கரும்பி லிருந்து செய்யப்படும் நாட்டுச் சர்க்கரையும் பத நீரி லிருந்து செய்யப்படும் பனை வெல்லமும் இருக்கும் போது ஏன் வெள்ளைச் சர்க்கரையைச் சாப்பிட்டு வியாதிக்கு நல்வரவு கூற வேண்டும்.
4. நீரிழிவு போன்ற வியாதி அதன் உபயோகத்தினால் உண்டாகின்றது.
5. வெள்ளைச் சர்க்கரையை உபயோகிக்கிறவர்கள் தங்களுக்கு வியாதியை விலை கொடுத்து வாங்குவதோடு தங்கள் பந்துக்களுக்கும் ஒன்று மறியாத குழந்தைகளுக்கும் வியாதியை நல்வரவு கூறி, அழைப்பதால் தங்களுக்கும் தங்களைச் சேர்ந்தவர்களுக்கும் தங்கள் குழந்தைகளுக்கும் கேடு சூழ்கிறவர்களாகிறார்கள். இதை வாசிப்போர் இனியாவது எக் காரணத்தினாலும் வெள்ளைச் சர்க்கரையை உபயோகியாது நாட்டுச் சர்க்கரை, வெல்லம், பனை வெல்லம் ஆகிய உணவுப் பொருள்களையே உபயோகிக்குமாறு கோரப் படுகின்றனர்.

அறிவு ஆக்கந் தரும்

[தமிழாசிரியர். பா. பக்கிரிசுவாமி செட்டியார்]

திருக்கோவலூருக்கும் தியாகதுர்க்கத்திற்கும் இருபது மைல்கள் தூரம் இருக்கும். ரிஷிபந்தம் என்னும் ஊரிலிருந்து தியாகதுர்க்கம் போகுமட்டும் அதாவது பன்னிரண்டு மைல்களுக்கு இடையில் ஒரு வீடாவது கிடையாது. இரு புறமும் மலைகள் அதிகம். திருடர் பயம் உண்டு. திருக்கோவலூர்ச் சந்தைக்கு வியாபாரிகள் இரட்டை மாட்டு வண்டிகளில் தங்கள் சரக்குகளை ஏற்றிக் கொண்டு போய் விற்று வருவது வழக்கம். ஆனால் வர்த்தகர்கள் தங்கள் வண்டிகளைச் சரங் கோத்தாற் போல் நூற்றுக் கணக்காக ஓட்டிக்கொண்டு போவார்கள்.

ஒரு நாள் சரவணஞ் செட்டி என்னும் வியாபாரி தன் சரக்குகளை விற்றுவிட்டுத் தியாகதுர்க்கத்திற்குத் தனியாகத் திரும்பினான். அப்போது வீரபுத்திரன் என்ற ஒருவன் செட்டியிடம் வந்து தன்னையும் அவன் வண்டியில் ஏற்றிக்கொள்ள வேண்டுமென்று கேட்டான்; முக்கால் ரூபா தருவதாகக் கூறினான். வர்த்தகன் அதற்கு இசைந்து வீரபுத்திரனை வண்டியில் ஏற்றிக்கொண்டான்.

வழியில் திருடர் பயம் உண்டு என்பது சரவணஞ் செட்டிக்குத் தெரியும். ஆதலால் அவன் தன்னிட மிருந்த ரூபா ஐம்பதையும் எண்ணி ஒரு முடிப்பாகக் கட்டினான்; வண்டியில் கிடந்த வைக்கோலுக்குள் மறைத்து வைத்தான்; அதன்மீது உட்கார்ந்து வண்டியை ஓட்டிக்கொண்டு வந்தான். செட்டி செய்தவற்றை வீரபுத்திரன் கவனித்துக்கொண் டிருந்தான்.

வண்டி ரிஷிபந்தம் தாண்டி நான்கு மைல்கள் கடந்து விட்டது. அதுசமயம் ஒரு சிறு கல் பொத்தென்று வண்டிமீது விழுந்தது. உடனே சரவணஞ் செட்டியும் வீரபுத்திரனும் பயந்து நடுங்கினர். வண்டியின் வேகமும் குறைந்தது.

'யார்டா வண்டியிலே! கொண்டாடா உம் பணத்தே' என்னும் சத்தம் கேட்டது. நடுங்கினன் வீரபுத்திரன்!

செட்டி:—'ஏண்ணெ! நான்தா - சந்தைக்குப் போவுலீயே. ரிஷிபந்தத்துக்கு - சொந்த சவாரில்லே - பொயிட்டு வருறே' என்றான். அந்தச் சமயத்தில் வண்டிக்குள் இருந்த வீரபுத்திரன இருமினன்.



கள்ளன்:—'அடே! இன்ன ஒருத்தெ இருக்காண்டா உள்ளெ அவனைப் பாருங்கடா!' என்றான். மற்றொரு திருடன் வீரபுத்திரனைச் சோதிக்க முயன்றபோது இரகசியமாக அவனிடம் வீரபுத்திரன் ஏதோ கூறினன்.

உடனே திருடர் வீரபுத்திரனை விட்டு விட்டு வண்டிக்கு முன் புறம் போய், செட்டியின் கையைப் பிடித்து அப்பால் இழுத்து விட்டு, பண முடிப்பை எடுத்துக்கொண்டு செட்டியின் கன்னத்தில் ஓர் அறை கொடுத்துப் போய் விட்டனர்.

செட்டி கள்ளரிடம் தன்னைக் காட்டிக் கொடுத்ததற்காக வீர புத்திரனைக் கோபித்து அவனை வண்டியி லிருந்து இறக்கி விட்டான்; வழி நெடுக அவனை வைதுகொண்டு வந்தான்; தியாகதுர்க்கத்தில் போலீஸாரிடம் அவனை ஒப்புவிப்பதாகவும் பயமுறுத்தினன்.

வண்டி தியாகதுர்க்கம் வந்து சேர்ந்தது. வந்துகொண் டிருந்த வீரபுத்திரன் மாயமாய் மறைந்து விட்டான். சாவணஞ் செட்டி போலீஸாரிடம் தனக்கு நேர்ந்த கஷ்டத்தைக் கூறி வருந்தினுன்.

சில நாட்க ளாயின. 'சரவணஞ் செட்டியார்!' எனக் கூவிக் கொண்டே செட்டிக் கடையுள் தபாற்காரன் நுழைந்தான்; 'இன்ச் யூரன்ஸ்' கையெழுத்துப் போடும்' என்று சொல்லி ஒரு கடிதத்தைக் கொடுத்தான். செட்டி வியப்பொடு கையொப்ப மிட்டான். தபாற் காரன் ஒரு கவரைச் செட்டியிடம் கொடுத்துவிட்டுச் சென்ருன்.

செட்டி அக் கடிதத்தை உடைத்துப் பார்த்தான். அதில் ஐந் நூறு ரூபா நோட்டுகள் இருந்தன. அவனுக்கு அளவிட முடியாத ஆச்சரியமும் ஆனந்தமு முண்டாயின. அவற்றை யார் அனுப் பியது? அத்துடன் ஒரு கடிதமும் இருந்தது. அதில் கீழ்க்கண்ட வாறு எழுதி யிருந்தது:

கா. வீரபுத்திர வாண்டையார், கள்ளக்குறிச்சி,
மிராசுதார், 27–3–'17

மகா-ள-ள-ஸ்ரீ சரவணஞ் செட்டியார் அவர்களுக்கு நமஸ்காரம்.

என் உயிரைக் காப்பாற்றிய தங்களுக்கு யான் செய்யத் தக்க நன்றி எதுவு மில்லை. இத்துடன் ஐந்நூறு ரூபா நோட்டுகள் அனுப்பி யிருக்கிறேன். தயவு செய்து பெற்றுக்கொள்ளவும்.

மூன்று தினங்களுக்கு முன்பு தங்களைத் திருடர்கள் வசம் காட்டிக் கொடுத்ததற்காக என்னை மன்னிக்கவும். அச்சமயம் என் னிடம் ஆயிரம் ரூபா நோட்டுகள் இருபது இருந்தன. கள்ளர்கள் என்னைச் சோதித்து இருப்பார்களானுல் அப் பெருந் தொகையை நான் இழந்துபோக நேரிடும். ஆகவே, தங்கள் ரூபா ஐம்பதை மட்டும் கவர்ந்துகொண்டு போகட்டும் என்று, என்னைப் பரிசோதிக்க வந்த கள்ளனிடம் 'நான் அக்கரைச் சீமைக்குப் போன கூலி; காய்ச் சலில் அடிபட்டுத் திரும்பிவிட்டேன். என்னிடம் ஒரு காசும் கிடை யாது. செட்டியார் தமக்குக் கீழே வைக்கோலில் பண முடிப்பை ஒளித்து வைத்திருக்கிருர்' என்று சொன்னேன். உடனே அவன் தங்கள் பணமுடிப்பை எடுத்துக்கொண்டு போய்விட்டான். என்னுல்

தாங்கள் பட்ட துன்பத்திற்காக நான் மிக வருந்துகின்றேன். மன்னிக்கவும். சமயம் நேரும்போது தங்களை நேரில் சந்திப்பேன்.

இப்படிக்கு,

தங்கள் அன்புள்ள,

வீரபுத்திரன்.

சரவணஞ் செட்டி இந்த ஐந்நூறு ரூபாவைக் கொண்டு வர்த்தகம் செய்து அதிக சொத்து சேர்த்தான்; மூன்று வருஷங்களில் 'முதலாளி' என்னும் சிறப்புப் பெயரும் பெற்றான்.

சிறுமிகள் பொம்மைகளை விரும்புவதேன்?

:O:

இக்காலத்தில் பெண் குழந்தைகளெல்லாம் பல விதமான பொம்மைகளை வைத்துக்கொண்டு விளையாடுவதை நாம் பார்க்கிறோம். ஆனால் ஒரு காலத்தில் அவை அச்சத்தைத் தரத் தக்க வஸ்துக்களாக இருந்தன. அவை மந்திர வாதிகளின் கைப் பொருளாக இருந்து அதிர்ஷ்டமுள்ளவர்களிடத்தில் தங்கி அவர்களுடைய எதிரிகளின்மீது அவர்களுக்கு ஆதிக்கத்தை அளித்து வந்தன. முக்கியமாகத் தங்கள் கணவன்மாரை அடக்க விரும்பிய மாதர்களே அவற்றை வைத்துக்கொண்டிருந்ததால் அக்கால ஆடவர்கள் அவற்றை வெறுக்கவும் கண்டு பயப்படவும் செய்தனர். இதனால்தான் இக்காலத்துச் சிறுவர்கள் அவற்றைப்பற்றிக் கவலை கொள்ளவில்லை. பொம்மைகள் ஒரு காலத்தில் பயத்தை அளித்து வந்த பொருள்களின் சந்ததியே என்று ஜர்மன் அறிஞர் மாக்ஸ்வான் போயன் கண்டு பிடித்திருக்கிறார். ஆயிரம் வருஷங்களுக்கு முன்னர் பெண்கள் அவற்றை வைத்துக்கொண்டு ஆடவர்களைத் தம் கைக்குள் போட்டுக் கொண்டனர். ஆகவே நீண்ட காலம் ஆடவர்கள் அவற்றை வெறுத்ததால் இப்போதும் சிறுவர்கள் அவ்வளவாகப் பொம்மைகளை மதிப்பதில்லை. மனிதர்கள் குகையில் வசித்த காலம் முதலே இத்தகைய பொம்மைகள் அனுஷ்டானத்தில் இருந்து வந்ததாகத் தெரிகின்றது. அவர்கள், மனிதன் அல்லது மிருகத்தைப் போன்ற கல்லையோ அல்லது கட்டையையோ பொம்மையாக வைத்துக் கொண்டார்கள் என ஒரு அன்பர் 'அமெரிக்கன் வீக்லி'யில் எழுதி யிருக்கிறார்.

இந்தியாவும் இங்கிலாந்தும்

[திரு. சு. குருசாமி]

இப்பொழுது உலகத்தி லுள்ள தேசங்களி லெல்லாம் மிகவுந் தாழ்மையான நிலையி லிருப்பது நம் இந்திய நாடுதான். உலகப் படத்தை நாம் எடுத்துப் பார்த்தால், முழுமையும் ஓர் அன்னிய அரசாட்சிக் குட்பட்டு அடிமையாய் வாழ்வது நம் இந்திய நாடு தவிர வேறொன்று மில்லை என்பது விளங்கும். அதில் இன்னொரு விசேஷம். நாம் எங்கெங்கே குடியேறி யிருக்கிறோமோ அங்கே எல்லாம் அடிமையாகவே வாழ்கிறோம். தென்னாப்பிரிக்காவில் குடியேறி யிருக்கிறோம். அங்கென்ன? அடிமைகள் தான். அமெரிக்காவில் நமது பெயரை வைத்திருக்குங் கொடுமையால் சிவப்பு இந்தியர்களும் (Red Indians) அடிமைகளாகவே இருக்கிறார்கள். இந்தியன் எங்கெங்கு போகிறானோ அங்கெல்லாம் அவனை அடிமைத் தனம் நிழல்போல் தொடர்ந்து செல்கிறது.

கவி வன்மை

ஆனால் உலகம் தோன்றிய நாள் முதலாக நாம் அடிமைகளாகத் தான் இருந்திருக்கிறோமா என்றால் இல்லை. முன்னாளில் நம்மைப் போல் நாகரிக மடைந்த ஜனங்களே இல்லை யென்று சொல்லலாம். நான்கு வேதங்களை உலகிற்கு அருளியது நம் இந்திய நாடு. அந்த வேதங்களின் பெருமை நமக்குத் தெரியவில்லை. அதைப் படிப்பதற்கு நாம் கவலை எடுத்துக் கொள்வது மில்லை. ஆனால் ஐரோப்பியர்கள் மிகவுங் கஷ்டப்பட்டுக் கற்கிறார்கள். மாக்ஸ் முல்லர் [Max Muller] என்னும் ஆங்கிலேயன், அவ்வேதங்களைக் கற்று, அவைகளை மொழிபெயர்ப்பதற்குத் தன் வாழ்நாளில் 30 வருஷங்கள் செலவழித்திருக்கிறான். ஓர் ஆங்கிலேயன் தன் வாழ்நாளில் 30 வருஷங்களை நம் வேதங்களைக் கற்பதில் செலவழிக்க வேண்டுமாயின், அவ் வேதங்கள் எவ்வளவு பெருமையுடையனவா யிருக்க வேண்டும்? அத்தகைய வேதங்களைச் செய்தது யார்? ஷேக்ஸ்பியரும், மில்டனு மல்ல. பின் யார்? இந்திய ரிஷிகள். உலகத்திலேயே பெரிய இதிகாசங்களாகிய ராமாயண, மஹாபாரதத்தைச் செய்தவர்கள், முறையே வால்மீகி, வியாசர் என்ற இந்திய முனிவர்கள். 'யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல் வள்ளுவர்போல் இளங்கோவைப்போல் பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை; உண்மை வெறும் புகழ்ச்சியில்லை' என்று

பாரதியால் புகழப்பட்ட கம்பர், வள்ளுவர், இளங்கோ முதலிய புலவர்களை உலகிற்கு நல்கியது நம் இந்திய நாடு. காளிதாசர் பிறந்ததும் நம் இந்திய நாட்டில்தான்.

சமயத் தலைவர்கள்

ஆனால் நம்மிந்திய நாடு கவி வன்மையால் மட்டுந்தான் சிறந்து விளங்கியதோ என்றால் இல்லை. மத சம்பந்தமான விஷயங்களில் இந்திய நாட்டை மிஞ்சின நாடு இவ்வுலகில் வேறொன்றுமில்லை. புத்தர், மஹாவீரவர்த்தமானர், சங்கரர், இராமானுஜர், கபீர், சைதன்யர், சுவாமி விவேகானந்தர், இராமதீர்த்தர் முதலியோர்களெல்லாம் இந்தியாவிலேயே பிறந்தவர்கள். ஆனால் மேனாடுகளில், இவ்வுலகத்தி லுதித்த மதாச்சாரியர்களுள் எவரேனும் உதித்ததுண்டா என்று கவனித்துப் பாருங்கள். உலகம் போற்றும் பகவத்கீதையைக் கொடுத்தது நம்மிந்திய நாடல்லவா? இவ்வுலகத்தில் தர்மம் என்பது இருக்கு மட்டும், பகவத்கீதை உலகத்தாரால் போற்றப்படும் என்பது உண்மை. இத்தகைய புலவர்களையும், மதாச்சாரியர்களையும் பெற்ற ஒரு நாடு அடிமையாயிருக்கத் தகுதியுடையதுதான் என்று யாராவது சொல்வார்களா?

இராஜ நீதி

ஆனால் சிலர் சொல்லலாம்: 'இந்தியாவில் பெரிய புலவர்களும் மதாச்சாரியர்களும் பிறந்தார்களென்பது உண்மைதான். புலவர்களுக்கும் மதாச்சாரியர்களுக்கும் உலக விவகாரங்களைப் பற்றி ஒன்றுமே தெரியாது. புலவர்களும் மதாச்சாரியர்களும் எப்பொழுதும் பரலோகத்தை நினைத்துப் பாட்டுப் பாடிக்கொண்டிருப்பார்களே ஒழிய, உலக விஷயங்களைப் பற்றி அவர்கள் கவலை எடுப்பதே கிடையாது; இராஜ தந்திரங்களைப் பற்றி அவர்களுக்கு ஒன்றுந் தெரியாது. ஆகையால் இந்தியா அடிமையாயிருப்பதில் ஆச்சரியமில்லையே.'

ஆனால் இந்தியாவில் கைதேர்ந்த இராஜ தந்திரிகளும் இருந்திருக்கிறார்கள். இந்து தேச சரித்திரம் படித்த யாவரும் சாணக்கியரைப் பற்றிக் கேள்விப்பட்டிருப்பார்கள். அவரை இராஜ தந்திரத்தில் வெல்ல எத்தனை க்ளைவ் வந்தாலும், எத்தனை பிட் வந்தாலும், எத்தனை லாயிட் ஜார்ஜ் வந்தாலும் முடியாது. அவர் எழுதிய அர்த்த சாஸ்திரத்திலும, மூத்ரா ராக்ஷசன் என்ற ஒரு வடமொழி நாடகத்திலும் அவருடைய இராஜ தந்திரத்தைப் பரக்கக் காணலாம். மேலுந் திருவள்ளுவரது திருக்குறளின் சில அதிகாரங்கள் இராஜ தந்திரத்தைப் பற்றியே கூறுகின்றன.

சட்டம் நிர்மாணிக்குந் திறமை (Legislative Capacity) யிலும், இந்தியர் மேனாட்டாரைவிட ஒரு வகையிலும் பின்னடைந்தவ

ரல்லர். திருக்குறள், மநுநீதி நூல் முதலியவை ஹிந்து சமூகத்தின் சட்டங்களை ஒருங்கே திரட்டிய நூல்களேயாம்.

பராக்கிரமம்

மேலே கூறியன வெல்லாம் நம்மவர் மனோ வலிமையை அதாவது மூளை வலியையே காட்டுகின்றனவா யிருக்கின்றனவே யொழிய, தேக வலிமையைக் காட்டுகின்றனவாயில்லை. ஆனால் தேக வலிமையிலும் இந்தியர்கள் ஆதி தொட்டுச் சிறந்து விளங்கி யிருக்கின்றனர். தமிழ் நாட்டில் மறவர்கள் என்னும் ஜாதியாரும், வட நாட்டில் இராஜ புத்திரர்களும், சீக்கியர்களும், மகாராஷ்டிரர்களும் சுத்த வீரர்களாகவே திகழ்ந் திருக்கின்றனர். இந்தியப் பெண்களும் வீரமணிகளாக விளங்கி யிருக்கின்றனர். ராஜபுத்திர ஸ்திரீகளின் வீரத்தைப் பற்றி நான் சொல்லி நீங்கள் அறியவேண்டுவதில்லை. அது உலக றிந்த விஷயம். ஆனால் தமிழ் நாட்டுப் பெண்களைப் பற்றித் தப்பான அபிப்பிராயம் நிலவி வருகிறது. ஆகையால் அவர்களைப்பற்றிச் சிறிது சொல்ல விரும்புகிறேன்.

தமிழ் மாதர் வீரம்

தன் ஒரே மகனை ஒரு கிழவி யுத்தத்திற்கு அனுப்பி யிருந்தாள். யுத்த சமாசாரத்தைப் பற்றிப் போர்க்களத்தி லிருந்து மீண்டு வருபவர்களை அவள் தினந்தோறும் விசாரிப்பது வழக்கம். ஒரு நாள் சில குறும்பர்கள் அவளிடம் வந்து, அவளுடைய மகன், பகைவர்களுக்குப் பயந்து புறங்காட்டி ஓடியதாயும், அப்பொழுது பகைவர்களின் அம்பு ஒன்று அவன் முதுகில் தைத்து இறந்ததாயுஞ் சொன்னார்கள். அவள் கோபம் மிகுந்தவளாய் உடனே எழுந்து, ‘என் மகன் இவர்கள் சொல்லுகிறபடி முதுகில் காயம்பட்டு இறந்திருப்பானாகில், அவனுக்குக் கோழைத்தனத்தைப் பாலோடு சேர்த்து ஊட்டிய என் தனங்க ளிரண்டையும் இவ்வாளால் களைந் தெறிவேன்’ என்று சொல்லிக்கொண்டு யுத்த களத்திற்கு ஓடினாள்; சென்று அங்கே பிணங்களை ஒவ்வொன்றாய்ப் புரட்டிப் பார்த்துக்கொண்டு வருகையில் தன் மகன் பிணத்தைக் கண்டாள்; கண்டு உவகை பூத்தாள்! ஏன்? தன் மகன் அக்குறும்பர்கள் சொல்லியவா றல்லாமல், மார்பில் காயம்பட்டு வீரத்தோடு உயிர் நீத்திருப்பதைக் கண்டதனால்.

ஈன்று புறந்தருதல் என்றலைக் கடனே
சான்றோ னாக்குதல் தந்தைக்குக் கடனே
வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே
நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே
ஒளிறு வாளருஞ் சமமுருக்கிக்
களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே

என்பது புறநானூற்றுச் செய்யுள்களில் ஒன்று. 'களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே' என்பது 'Come with the shield or on the shield, never without the shield' என்று ஸ்பார்ட்டா தாய்மார்கள் தங்கள் புத்திரர்களுக்குச் சொல்லும் வீர மொழிகளை விட ஒரு சிறிதும் வீரத்தில் குறைந்தன ஆகா. 'கோழைத் தனத்தைப் பாலோடு சேர்த்து என் மைந்தனுக்கு ஊட்டிய என் தனங்களிரண்டையும் களைந்தெறிவேன்' என்றாள் ஓர் இந்திய அன்னை; 'களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே' என்றாள் மற்றோர் தமிழ் மாதா என்றால், இந்திய மாதர்களின் வீரத்திற்கும், அவர்களது புத்திரர்கள் வீரத்திற்கும் வேறு சான்று ஏதேனும் வேண்டுமோ?

இன்றைய நிலை என்ன?

இத்தகைய இந்தியா—கவி வன்மையாற் சிறந்த இந்தியா, மத வன்மையாற் சிறந்த இந்தியா, மதி வன்மையாற் சிறந்த இந்தியா, யாவற்றிற்கும் மேலாக, வீரத்தாற் சிறந்த இந்தியா,—இதுவும் அன்னியர்களுக்கு அடிமையாகுமா? உண்மையில் என்ன பார்க்கிறோம்? அடிமையாகத்தான் இருக்கிறது. காரணம் என்ன? ஒற்றுமையின்மை. ஒற்றுமையின்மை மட்டுமேயல்லாமல் வேறொன்றுமில்லை.

ஒரு தனி இந்தியனையும், ஒரு தனி ஆங்கிலேயனையும் எடுத்துக் கொண்டால், இந்தியனே ஆங்கிலேயனைவிட எவ்வகையினுஞ் சிறந்தவன் என்பது யாவரு மறிந்த விஷயம். ஆனால் இந்தியர்கள், ஆங்கிலேயர்கள் எனத் தேச மக்களனைவரையும் எடுத்துக் கொள்வோமானால் இங்கிலாந்தே முன்னிற்பது கண்கூடு. ஏன்? அவர்களுக்குள் ஒற்றுமையிருக்கிறது. நமக்குள் ஒற்றுமையில்லை. இந்துதேச சரித்திரம் உலகிற்கு ஓர் உண்மையைப் போதிக்குமானால், அது ஒற்றுமையின்மையால் வந்த கேடேயாகும். அதே மாதிரி இங்கிலாந்து தேச சரித்திரத்தி லிருந்து ஒருவன் அறிந்து கொள்ளுவது என்னவென்றால் ஒற்றுமையால் ஒரு நாட்டிற்கு வரும் நன்மைகளேயாகும்.

இந்தியர்கள் இரண்டு பேர் ஒற்றுமையாக வாழமாட்டார்கள். ஒரே குடும்பத்தில் ஒரு தாய் வயிற்றுப் பிறந்த சகோதரர்கள் ஒற்றுமையாய் வாழ மாட்டார்கள். தகப்பனுக்கும் மகனுக்குஞ் சண்டை. ஜனங்கள் எப்படியோ அப்படியே தேசம். தற்கால அரசியல் உலகிலோ ஒவ்வொருவனுந் தலைவனாக வேண்டுமென்றால் யார் பின்பற்றுவது? நிற்க,

ஆங்கிலர் ஒற்றுமை

இப்பொழுது இங்கிலாந்து தேச சரித்திரத்தை ஆராய்வோம். ஆரம்பத்தி லிருந்தே ஆங்கிலேயர்கள் ஒற்றுமையின் இன்றியமையாமையை உணர்ந் திருக்கிறார்கள். கி. பி. ஏழாவது நூற்றாண்டி-

லேயே ஆங்கிலேயர் அனைவரும் கிறிஸ்தவ மதத்தைத் தங்கள் மதமாக ஒப்புக்கொள்கிறார்கள். இம்மத வொற்றுமையே தேசிய வொற்றுமைக்குக் காரணமா யிருந்தது என்பது கவனிக்கற்பாலது.

பின்னர் கி. பி. 16-வது நூற்றாண்டில், ஆங்கிலேயர் அனைவருங் கிறிஸ்தவ மதத்தரா யிருந்தாலும், அக்கிறிஸ்தவ மதத்திலேயே, புரோட்டெஸ்டன்ஸ் (Protestants) ப்யூரிட்டன்ஸ் (Puritans) ஆர்மீனியன்ஸ், (Arminians) ப்ரெஸ்பிடீரியென்ஸ், (Presbyterians) கேதோலிக்ஸ் (Catholics) என அநேக பிரிவினராய்ப் பிரிந்திருந்தார்கள். இதை யறிந்த பிலிப், (Philip) என்னும் ஸ்பானிய நாட்டரசன் தான் கத்தோலியனா யிருப்பதால், இங்கிலீஷ் கத்தோலியர்கள் தனக்கு உதவி செய்வார்கள் என்னும் மூட நம்பிக்கையோடு 'வெல்லற்கு வல்ல கப்பற்படை' என்னும் பெயருடைய பெரிய சேனையோடு இங்கிலாந்தின் மீது படையெடுத்து வந்தான். ஆனால் முடிவில் என்ன நடந்தது? இங்கிலீஷ் கத்தோலியர்கள் இந்தியர்களைப் போல் 'நான் ஹிந்து; ஆகையால் முகம்மதியனுக்கு உதவியாய் நின்று யுத்தம் புரியமாட்டேன்' என்று இருந்தார்களா? அன்று! அன்று!! பின் என் செய்தார்கள்? 'நான் முதலில் ஆங்கிலேயன்; இரண்டாவதாகவே நான் கத்தோலியன்' என்று வீர ஒலி முழக்கிக் கொண்டு, யுத்தத்தின் முன்னிலையில் நின்றவர்கள் கத்தோலியர்களே யாவர். யுத்தத்தின் முடி வென்ன? அன்னையின் சேவையில் ஜாதி, மதம் முதலியவைகளை அறவே மறக்குந் தேசபக்தர்களுந் தோற்கடிக்கப்படுவ துண்டோ? 'வெல்லற்கு வல்ல' ஸ்பானிய வல்லரசுப் படை அவர்களை வெல்ல முடியா தொழிந்தது!

இந்திய சரித்திரம்

இப்பொழுது அன்னை பாரததேவியின் சரித்திரத்தை எடுத்துக் கொள்வோம். அந்தோ! என்ன பரிதாபம்! ஒற்றுமை யின்மையினால் விளைந்த தீமையைத் தேவி சரித்திரத்தின் ஒவ்வொரு பக்கத்திலும் சிவப்பு மையினால் பெரிய எழுத்துக்களில் எழுதப்பெற்றிருக்கின்றனவே! தேதியோடு கூடிய இந்து தேச சரித்திரம் அலெக்ஸாண்டர் படை யெடுப்பி லிருந்துதான் ஆரம்பிக்கிறது என்று வின்சென்ட் ஸ்மித் என்னுஞ் சரித்திர ஆசிரியர் கூறுவார். அதையே இந்து தேச சரித்திர ஆரம்பமாக எடுத்துக்கொண்டால், தொட்டிற் பழக்கம் சுடுகாடுமட்டும் என்றாற்போல் கி. மு. 323-இல் ஆரம்பித்த ஒற்றுமை யின்மையானது கி. பி. 1933 வரையுந் தொடர்ந்திருக்கிறது என்றே சொல்லலாம்.

அலெக்ஸாண்டர் இந்தியாவின் மீது படையெடுத்த போது ஹம்பி என்னும் இந்தியச் சிற்றரசன் ஒருவன் சண்டை செய்வதற்கு 5000 யுத்த வீரர்களையும், சேனையின் உணவுக்காக 3000 காளைகளையும்,

10,000 ஆடுகளையும் அவனுக்குக் கொடுத்து உதவினனும். இதை வாசிக்கும்பொழுது ஒவ்வோர் உண்மை இந்தியனின் நெஞ்சமுங் கொதிக்காதா? உதிரந் துடிக்காதா? வயிறு எரியாதா? 'நெஞ்சு பொறுக்குதில்லேயே, இந்த நிலை கெட்ட மனிதரை நினைந்து விட்டால்' என்று பாரதி கூறியது உண்மைதான் என்று அப்பொழுதுதான் தெரியும். ஆனல், ஹம்பி, தேசத்திற்கு எவ்வளவு துரோகஞ் செய்தானே, அவ்வளவு; ஏன்? அதற்கு மேலாகவே தியாகஞ் செய்த புருஷோத்தமன் என்ற தேசபக்தனும் அக்காலத்தி லிருந்தான் என்பதை நாம் மறக்கலாகாது. புருஷோத்தமன், ஹம்பியைப்போலுள்ள ஒரு பஞ்சாப் தேசத்துச் சிற்றரசன். பஞ்சாப் முழுமைக்குங்கூட அவ னரச னல்ல. அத்தகைய ஒரு சிற்றரச னிடத்தில், அக்காலத்தில் மிகவும் பிரசித்திபெற்ற பாரசீக இராஜ்ஜியத்தைத் தோற்கடித்தவனும், சுருங்கக் கூறின் உலகம் முழுவதையுமே வென்றவனுமாகிய அலெக்ஸாண்டர், அகப்பட்டுக்கொண்டு விழிப்பானுகில், ஹம்பியும், மற்றுமுள்ள இந்தியச் சிற்றரசர்களும் புருஷோத்தமனேடு சேர்ந்திருந்தால், அந்தக் கிரேக்கனின் கதி என்னவா யிருக்கும்?

இந்து தேச சரித்திரம் முழுவதிலும் ஒரே ஒரு முறை இந்தியச் சிற்றரசர்களிற் சிலர் ஒன்று சேர்ந்தார்கள். அதன் பலனென்ன? ஐரோப்பாவில் நாகரிகம் மிகுந்தவரும், மத்திய தரைக் கடலைச் சுற்றியுள்ள நாடுகளை யெல்லாம் ஆண்டு வந்தவருமான ரோமானியரை அடியோடு கொலைத்தவர்களும், ஆசியாவில் பாரசீகர்கள், ஆப்கானியர்கள் முதலியவர்களை முறியடித்தவர்களுமான வெள்ளை ஹூணர்களை முதன் முதலில் தோற்கடித்துத் துரத்தியவர்கள், நம்மிந்தியச் சிற்றரசர்க ளன்றே! இவ்விதமே அவர்கள் எப்பொழுதும் ஒற்றுமையுட னிருந்திருந்தால், இந்தியாவும் இந்தியரும் எவ்வளவு மேன்மையடைந் திருக்கலாம்? ஆனல் மகம்மது கோரி இந்தியாவின்மீது படையெடுத்து வந்தபோது ஜயச்சந்திரன் என்ன செய்தான்? பிருதுவிராஜனேடு பகைமை கொண்டு, மகம்மது கோரிக்கு உதவி செய்தான். பிருதுவிராஜன் தோற்கடிக்கப்பட்டு மகம்மதுகோரியால் கொல்லப்பட்டான். இதே மகம்மதுகோரியை, இதே பிருதுவிராஜன் ஒரு வருஷத்திற்கு முன்பு, தோற்கடித்து இந்தியாவை விட்டுத் துரத்தியிருக்கிறன். ஆனல், அடுத்த வருஷத்திலேயே பிருதுவிராஜன் மகம்மதுகோரியால் தோற்கடிக்கப்பட்டதற்குக் காரணம், ஜயச்சந்திரனின் உதவிதான் என்று சொல்லவும் வேண்டுமா? மகம்மது கோரி தனக்கு உதவி செய்த ஜயச்சந்திரனுக்காவது நன்மை செய்தானு? நாட்டைப் பிடுங்கிக் கொண்டு அவனையும் கொன்றுவிட்டான். தேசத்துரோகஞ்செய்த ஜயச்சந்திரனுக்கு இவ்வபாரதம் வேண்டியதுதான்!

பாபரை இந்தியாவின்மீது படையெடுக்கும்படி யழைத்ததும் ஓர் இந்தியனே.

இறுதியாக இந்தியா ஆங்கிலேயரால் கைப்பற்றப்பட்டதற்குக் காரணமும், இந்தியச் சிற்றரசர்கள் தங்களுக்குள் பகைமை என்னும் பாழுந் தேவதையைப் பாங்காய்ப் பூஜித்து வந்ததுதான். மைசூர் ஹைதர் அலியோடு மற்ற அரசர்கள் சேர்ந்திருப்பின், சூழ்ச்சி - ஒரு க்ளைவின் சூழ்ச்சியல்ல, நூறு க்ளைவின் சூழ்ச்சியானலுஞ் சரி-உடைவாள்-ஒரு பெய்லியின் உடைவாளல்ல, நூறு பெய்லியின் உடைவாளானலுஞ் சரி-இந்தியாவை வெல்லல் இயலாது என்பது நிச்சயம். 'மஹாராஷ்டிரர் ஹைதரை அடிக்கடி தொந்தரை செய்ததனல், அவர் வலி குலையா திருப்பின், அல்லது பிரஞ்சுக்காரர் தம் வாக்குப்படி அவருக்குச் சமயோசிதமான உதவி செய்திருப்பின், அல்லது அவர் அகால மரணத்தை யடையாது பின்னுஞ் சில வாண்டுகள் உயிரோ டிருப்பின், தென்னிந்திய சரித்திரம் முழுவதும் வேறுவிதமாக முடிந்திருக்கு மென்பது சரித்திரக்காரர் துணிபு.'

இந்தியர்க ளனைவரும், இங்கிலாந்தின் கரையில் நின்று ஜலபாதைக் கிருந்தால், இங்கிலாந்து மூழ்கிவிடும் என்பது எள்ளி நகையாடற் கிடமா யிருந்தாலும், அதிலும் ஓர் உண்மை யிருக்கிறது என்பது எனது கொள்கை. கப்பலேறிக் கடல் கடந்து இங்கிலாந்திற்குச் செல்வது சாஸ்திரத்திற்கு விரோதம் என்பர் சில வைதீகர்கள். 'அவனென்ன சொல்லுவது நானென்ன செய்வது? எனக்கு ஜலபாதைக்கு வரும்போதுதானே நான் இருப்பேன். அவன் சொல்லும் போதெல்லாம் ஜலபாதைக் கிருப்பதற்கு நானென்ன அவன் வைத்த ஆளா?' என்று சொல்லுவர் சில சுயேச்சை விரும்பும் இந்தியர். இவ்வளவு அற்ப காரியத்திலுங்கூட இந்தியர்களுக்குள் ஒற்றுமை யிராது என்பதுதான் அதன் உட்பொருள்.

ஆகையால் சகோதரர்காள், நம் நாடும் ஒரு நாடாக உலகத்தாரால் கருதப்பட வேண்டுமாயின், நம் நாடு சுதந்திர மடைய வேண்டுமாயின், நாமும் உலக முன்னேற்றத்திற்காக ஏதேனுஞ் செய்ய வேண்டுமாயின், அனைவரும் ஒன்று சேர்வோம்! ஒத்துழைப்போம்! சுதந்திரப்போரை நடாத்துவோம்! நமது நாடும் விடுதலை யடையும்!

மிருகங்களின் கர்ப்ப கால அளவு

பூனை	- 50 நாள்.	நாய்	- 50 நாள்.
பன்றி	- 115 நாள்.	ஆடு	- 150 நாள்.
பசு	- 285 நாள்.	எருமை	- 310 நாள்.
குதிரை	- 345 நாள்.	கழுதை	- 380 நாள்.

யானை 615 நாள்.

நகைச் சுவை

கோகிலம்:—என் புருஷர் சிறிது சாக்கு அகப்பட்டாலும் சண்டைக்கு வந்து விடுகிறார்.

கிருஷ்ணவேணி:—அது தேவலையே. என் கணவர் காரணமில்லாமலே சண்டைக்கு வந்து விடுகிறாரே!

* * *

எஜமானன்:—நாற்காலிகளில் ஏன் இவ்வளவு தூசியிருக்கிறது?

வேலைக்காரன்:—சில தினங்களாக இங்கு யாருமே வந்து உட்காரவில்லை.

* * *



மானேஜர்:—முந்திய அனுபவமேயில்லாத நீர் அதிகச் சம்பளம் கேட்கிறீரே?

வேலைக்கு வந்தவர்:—அனுபவம் இல்லாமல் ஒரு வேலையைச் செய்வது தானே அதிகக் கஷ்டம்?

* * *

பழைய மோட்டாரை வாங்கியவர்:—நீர் என்னிடம் விற்ற மோட்டார் வேகமாகவே போக மாட்டேனென்கிறதே. நீர் அதற்காக ஏழு முறை அபாராதம் செலுத்த நேர்ந்ததாகக் கூறினீரே?

அம்மோட்டாரை விற்றவர்:—நான் அபாராதம் செலுத்தியது மோட்டாரைக் கொண்டு போக்குவரத்திற்குத் தடையேற்படுத்தியதற்காகத்தான்.

ஒரு ஐரோப்பியர் வீட்டில் நடந்த விருந்தில் அதிக உற்சாக மடைந்த ஒருவர் பழக்கமில்லாத ஒரு ஸ்திரீயைத் தவருகக் கட்டிக் கொண்டார். உடனே 'தயவு செய்து மன்னிக்க வேண்டும். என் மனைவியைப்போ லிருந்ததால் அப்படிச் செய்துவிட்டேன்' என்று கூறினர்.

அந்த மாது:—இவ்வளவு ஒழுங்கான புருஷனுக்கு எந்த ஸ்திரீ மனைவியாக வாய்த்தாள்.

கனவான்:—ஆகா! பேச்சிலும் என் மனைவி மாதிரியே இருக்கிறதே.

* * *

மகன்:—அம்மா, எனக்குத் தந்தையர் ஐந்து பேர்களாமே.

தாய்:—என்னடா, உளருகிருய்?

மகன்:—பெற்றவன் ஒரு பிதா; வித்தை கற்பித்தவன் ஒரு பிதா; கடவுள் ஒரு பிதா; அரசன் ஒரு பிதா; முன் பிறந்தோன் ஒரு பிதா என்று எங்கள் தமிழாசிரியர் ஒரு செய்யுள் சொல்லிக் கொடுத்தார்.

* * *

ஒருவர்:—இப்பொழுது சென்னையில் எங்கே பார்த்தாலும் போலீசார் சோதனை போடுகிருர்களே, நேற்று உன் வீட்டில் சோதனை போட்டபோது என்ன கிடைத்தது?

மற்றவர்:—எங்கள் வீட்டு வேலைக்காரி ஒளித்து வைத்திருந்த மறுசாவி; சென்ற வாரம் காணுமல் போன என்னுடைய சட்டைப் பொத்தான்; ஒரு ஓணுலேபிள் முதலியவைகளெல்லாம் கிடைத்தன.

எஜமானன்:—(புதிய வேலைக்காரனைப் பார்த்து) ஒரு நாள் முழுவதும் நீ செய்யக் கூடிய வேலை இவ்வளவுதானா?

வேலைக்காரன்:—இதற்குமேல் முடியாதென்று நான் சொல்ல வில்லை. ஆனால் நான் அதிகமாக என்னைப்பற்றி வெளியே காட்டிக் கொள்வதில்லை.

* * *

சிறைச்சாலை விசிட்டர்:-(ஒரு கைதியை நோக்கி) ஏழ்மைத் தனத்தால் நீ சிறைக்கு வருமாறு நேர்ந்ததோ?

கைதி:-இல்லை. அதற்கு மாறாக நான் 100 ரூபா நோட்டுகளாகவே அச்சடித்துக்கொண்டிருந்தேன்.



* * *

'யாரே அழகுக்கு அழகு செய்வார்'.

'பெண்கள்'.

* * *

'நேற்று ஒரு சிறுவன்மீது மோட்டார் ஏறி விட்டதாமே. இப்போது அவன் உயிருக்கு ஒன்றும் ஆபத்து இல்லையே?'

உயிருக்கு ஆபத்து இல்லை. உடலுக்குத்தான் ஆபத்து நேரும்போலிருக்கிறது?

ஒரு சிறுவன் அழுதுகொண் டிருந்தான். வழியில் சென்றவர் அவனைப் பார்த்து 'ஏன் அழுகிறாய்?' என்று கேட்டார்.

சிறுவன்:—எங்கப்பா, அம்மாவைக் கழுதை என்றார்.

வழிப்போக்கர்:—அதற் கென்ன?

சிறுவன்:—எங்கம்மா, அப்பாவைக் காண்டா மிருகம் என்றாள்.

வழிபோக்கர்:—அதற்காக நீ அழுவானேன்?

சிறுவன்:—அப்படியானால் நான் என்ன?

* * *



நீதிபதி:— (எதிரியை நோக்கி) உனக்கு ஒரு வக்கீல் நியமிக்க வேண்டுமா?

எதிரி:—வக்கீலினால் பிரயோசன மில்லை. நல்ல சாட்சிகளாக இருவர் கிடைத்தால் தேவலை.

* * *

பிரசங்கியார்:—(சபையோரை நோக்கிக்) 'கல்லாத பேர்களே நல்லவர்கள் நல்லவர்கள்' என்றார் நமது தாயுமான சுவாமிகள். அவர் ஏன் அப்படிச் சொன்னார். உங்களில் யாருக்காவது தெரியுமா?

கூட்டத்தில் ஒருவர்:—படித்தவர்களுக்கு வேலை அகப்படாமையால் அவர் அவ்விதம் கூறி யிருப்பார்.

இயற்கை யன்னையின் காட்சி

[திரு. R. பாலகிருஷ்ண முதலியார் பி. ஏ., எல். டி.,]

கீட்ஸ் என்னும் ஆங்கிலக் கவிஞர் யாத்துள்ள பாக்களுள் வயல்களைக் குறித்து இயற்றியுள்ளவையே சாலச் சிறந்தன வெனக் கூறப்படுகின்றது. ரீங்காரஞ் செய்யும் வண்டினங்களையும், பூவின் தோற்றத்தையும், கதிரவனின் கருணை யொளியையும் கண்ட அவர் இயல்பாகவே நடுங்குகின்றார்; அவருடைய கண்களிலிருந்து ஒளி வீசுகின்றது; அவருடைய கன்னங்கள் சிவக்கின்றன; அவருடைய வாய் துடிதுடிக்கின்றது. விண்மீன்கள் நிறைந்த ஆகாயமும், உள்ளத்தே எழும் ஒழுக்க உணர்வும் கார்லைல் எனும் மற்றோர் ஆங்கிலப் புலவருக்குப் பேரச்ச மூட்டுகின்றன. இப் பூசல்களுக்கும் மனப் புன்மைக்கும் இயற்கை யன்னை என் ஆளாக வேண்டும்?

தானமைத்த இனிய படைப்புக்கள் விரும்பிய வண்ணம் இறைவன் எஞ்ஞான்றும் மிளிர்வது வீணுக் கன்று. அழகு என்னும் பதம் உண்மை எனப் பொருள் கொள்ளுமானால், அழகும் உண்மையும் ஒன்றேயாம். எனின், வையகத்தில் இயற்கை யழகுகள் தோற்றியது எற்றுக்கென சிந்திப்பின், மக்கள் உய்ய வேண்டு மெனும் காரணம் பற்றியே யாகும். நாம், இயற்கை யன்னையின் வனப்புடன் ஒன்றுறக் கலந்து நுகர்ச்சி எய்துவோ மெனின், நாம் உண்மையையுணர்ந்தவர்களாவோம்; அதாவது, கடவுளைக் கண்டவர்களாவோம்.

இயற்கைப் பொருள்கள் ஒவ்வொன்றைக் கொண்டும் கடவுள் நெறி பெறலாம் என 'பரோபேஸ்' கூறுகின்றார். ஞாலமோ இயற்கைப் பொருள்கள் அடர்ந் தமைந்தது. ஆகவே அதை எவ்வாறு மனிதன் மறந்திருத்தற்கியலும்? கடவுளைக் கைநெகிழ விட மனிதன் மனம் எங்ஙனம் பொருந்தும்?

'குழந்தாய்! நிறம் மலிந்த விளையாட்டுப் பொருள்களை எல்லாம் நானுனக்குக் கொண்டு வரும்போதெல்லாம், விசும்பிடை நிற மாற்றங்

'Educational Review' என்னும் ஆங்கிலப்பத்திரிகையில் வெளிவந்த The poetry of school garden என்னும் கட்டுரையைத் தழுவி அன்பர் த. பா. நித்தியானந்தம் மொழி பெயர்த்தது.

கொண்டு மேகங்கள் அமைவானேன் என்பதற்கு விடை காண்கிறேன்; மலர்கள் சிறந்த நிற மெய்துவதேன் எனத் தெளிகிறேன்; நீ ஆடும் பொருட்டு நான் பாடும் போது, இலைகள் அசையுங் காலத்தும் இசையேன் எழுகின்றது என்றும் அறிகின்றேன்' என 'கீதாஞ்சலி' என்னும் நூலில் கவிஞர் தாகூர் கூறியிருக்கிறார். ஆ! கடவுள் முன்னிலையில் மனிதனுங்கூட ஒரு சிறு குழவியே யன்றோ! எனவே நாமனைவரும் இயற்கைத் தோட்டத்தி லிருக்கும் சிறு குழவிகளன்றோ! ஓர் உயரிய நோக்கங் கொண் டன்றோ இறைவன் இயற்கை யன்னையின் மடியில் தவழுமாறு நம்மை விடுத்தான்!

உண்மை இதுவாக, நம் கல்விச்சாலைகளில் இயற்கையை நீக்கி அறிவுறுத்துதல் எங்ஙனம்? கல்வி பயிலுதற்கு ஏற்ற இடம் எது?

தண்ணொளி வீசும் தடாகத்தே தோன்றும் வெண்டாமரை மலரின் பரந்த இதழ்களி லன்றோ, கலைமகளின் நித்திய வேடும் பொற்பும் விளங்குகின்றன! அன்றியும் அவள் அசையுங் காலத்தும் பயிலும் பொருள்களும் ஆங்கேயே யன்றோ, அமைந்திருக்கின்றன.

இயல்பாகத் தாமரையைப் பார்க்கும் நமக்கு அதன் உட்பொருள் இன்னதென விளங்காது: அது வெறுமையாகவே தோற்றும். அறிவுநூல் தத்துவ விற்பன்னர் துறவியெனத் தலையசைத்து வெறும் வெள்ளை இதழாலானதுதான் தாமரை எனக் கருதுவார்கள். அது தோன்றியபோ திருந்த நிலையையே யுடையதா யிருப்பதாகக் கூறுகின்றனர். ஆனால் உலகப்பொருள்களனைத்தும் ஒருங்கே அது கொண்டிருப்பதாகக் கலையன்னைக் கருதுகின்றாள். அதன் மென்மையே வாழ்வு. அதன் மதிமுகப் புன்முறுவலே தூய்மை. ஆழம் மிக்க அகன்ற அருவியிலே சலனமற்று மெய்ம்மறந் துய்யும் போக்கைக் கூர்ந்து நோக்கின் இறைவனை நோக்கித் தவம் புரிவதே போன்று அது விளங்குகின்றது. உள்ளங் களிக்கும் மென்மையுடைய அம்மலர் இறைவனை வழிபடுவோருக்கு அருச்சிக்க உதவி ஊக்கமூட்டுகின்றது. இறை படைப்பில் எளிமை மிக்க வண்டினங்களுக்கு அதன் மது செறிந்த உள்ளம் ஓர் சுரபி எனவே துலங்குகின்றது. மட்டோ! இதன் உட்பொருள் உண்மைகளை எடுத்துரைக்க மக்களால் இயலுமோ!

மகன்:—அப்பா, நீங்கள் எனக்கு ஐந்து ரூபா கொடுத்ததாக நான் நேற்றிரவு கனவு கண்டேன்.

தந்தை:—நீ நல்ல பிள்ளை யாயிற்றே. சட்டை தைக்க வேண்டுமென்று கேட்டாயே. அதற்கு அந்தப் பணத்தை வைத்துக் கொள்.

ஸரஸாவின் சேஷ்டைகள்

[இலைமறை]

OFFICE OF THE REGISTRAR OF ...
19 JUN 1933
MADRAS

டாக்டர் கோபால் நாயுடுவும் அவர் மனைவி ஸரஸாவும் உதகமண்டலத்திலிருந்து சென்னைக்குத் திரும்பி வந்ததும் அநேக மாறுதல்கள் நடந்தன. ஆனால் அம் மாறுதல்களுக்கு மூலம் ஸரஸா என்பது மட்டும் அனைவருக்கும் வெள்ளிடை மலையென விளங்கிற்று. டாக்டருக்குத் தூங்குவதற்கே ஒழிவு நேரம் கிடையாது. மேலும் அவரும் இத்துணை விஷயங்களில் தலையிட்டுக் கொள்ளுவதும் கிடையாது. ஆதலின் டாக்டரின் இளைய மனைவியாகிய ஸரஸா தேவியே இவைகளுக்குக் காரணம் என்று அறிந்து கொண்டனர்.

ஸரஸா சென்னை சேர்ந்ததும் செய்த முதல் சேஷ்டை வீட்டுக்காரனுக்கு ஒரு மாதம் நோட்டீஸ் கொடுத்தது. டாக்டரும் அவர்



தாயாரும் ஸரஸாவை எவ்வளவோ தடுத்தனர். 'வீடு ஆவிவந்த வீடு. இதற்கு ஜாகை வந்த பிறகே நல்ல அதிர்ஷ்டம் ஏற்பட்டது. இதை விடவே கூடாது' என்று டாக்டர் கூடிய மட்டும் இறைஞ்சிக் கேட்டுக்கொண்டார். டாக்டர் தாயாரும் வீட்டிலுள்ள பல்வேறு

சௌகரியங்களை எடுத்துக் காட்டினாள். 'வீட்டுக்காரன் நல்லவன். டாக்டர் விரும்பிய மாறுபாடுகளை யெல்லாம் செய்து கொடுத்துள்ளான். வீடும் நல்ல 'ஷகரான' இடத்தி லிருக்கிறது. பத்துப்பேர் வரப் போக மிகச் சமீபமாயும் சௌகரியமாகவும் இருக்கிறது' என்றாள் கிழவியும்.

டாக்டரும், தாயாரும் அவ்வீட்டை விடாதிருப்பதற்கு எவ்வளவு முயன்றனரோ, அவ்வளவு பிடிவாதமா யிருந்தாள் ஸரஸாவும் அவ்வீட்டை யொழிப்பதற்கு. சொல்லும் அவள் குறைகளையும் ஒதுக்கித் தள்ளுவதற்கில்லை. முதலாவதாக அவள் டாக்டரின் மூட நம்பிக்கையை வெறுத்தாள். அதிர்ஷ்டம் எங்கிருந்தாலும் வாராதா? இரண்டாவது; ஜன நெருக்கமுள்ள இடத்தில் இங்கிலாந்து சென்று திரும்பி வந்த ஒரு பெரிய டாக்டர் வாசம் செய்வது, ஸரஸாவின் மனதில் அருவருப்பாக விருந்தது. மூன்றாவது; டாக்டர் ஜாகை மாற்றுவதனால் அவரை நாடிவரும் மனிதர்களின் சங்கியைக் குறையவே குறையாது என்ற பூர்ண நம்பிக்கை ஸரஸாவுக்கு உண்டு. குன்றின் மேல் திருவிடங் கொண்டு அமர்ந்துள்ள குமரக் கடவுளை நாடி, ஜனங்கள் செல்ல வில்லையா ? ஏழு மலைகளுக்கப்பால் திருமலையில் திருவீற்றிருக்கும் அப்பன் வெங்கடாஜலபதியை வேண்டி எண் கடந்த ஜனங்கள் செல்ல வில்லையா ? எங்கே கிடந்தாலும் மாணிக்கம் மாணிக்கமே.

முடிவாக வீட்டுக்காரனுக்கு நோட்டீஸ் விட்டாகி விட்டது. வேறு பங்களாவும் தேட வாரம்பித்தாய் விட்டது.

ஸரஸா செய்த இரண்டாவது அமளி, வீட்டு வேலைக்காரர்களை யெல்லாம் பாதித்தது.

சென்னை வந்த மறு வாரத்திற்குள் வேலைக்காரர்கள் எல்லாம் புதுப்பிக்கப்பட்டனர். சமையற்காரன் முதல், கம்பவுண்டர் வரை, பழைய ஆசாமிகளில் ஒருவர்கூட வைத்துக் கொள்ளப்படவில்லை.

'சமையற்காரன் 18 வருஷங்களாக டாக்டர் ஊழியத்தில் இருக்கிறவன். டாக்டர் மேற்படிப்பிற்காக மேல் நாடு சென்றிருந்தபோது, அவன் அவரோடு கூடவே போயிருக்கிறான்; சமையல் தொழிலிலும் நல்ல கெட்டிக்காரன்; நம்பத் தகுந்தவன். 18 வருஷங்களாக அவன் பேரில் ஒரு புகாரும் இருந்ததில்லை' என்று டாக்டர் தாயார் வாது புரிந்தாள்.

ஒன்றும் ஸரஸாவின் மனதிலாவது ஹிருதயத்திலாவது தாக்கவில்லை. 'ஓஹோ! அவன் 18 வருஷப் பழம் பெருச்சாளியா' என்று தலையசைத்துவிட்டுத் தன் தீர்மானத்தையே உறுதிப் படுத்தினாள்.

கம்பவுண்டர்களில் ஒருவன் பரம ஏழை. ஆனால் பெருத்த சம்சாரி. ஸரஸா, டாக்டரின் இல்லத்தில் 'ரிட்ரென்ச்மெட் ஆபீஸர்' என்று நினைத்துக்கொண்டு,

'அம்மணி, நான் குறைந்த சம்பளத்தையாவது ஏற்றுக்கொள்ளுகிறேன். என்னை வேலையை விட்டுத் துரத்தாதீர்கள்' என்று காலில் விழுந்து கெஞ்சினான்.

ஸரஸாவிற்குக் கோபம் பிறந்தது. 'டாக்டரைக் கொள்ளையடிக்க யோசனைபோல் இருக்கிறது. சீ நாயே! இன்றே தொலைந்து ஒழி' என்று ஒரே முடிவாகக் கூறிவிட்டாள்.

இவ் வண்ணமாக, கம்பவுண்டர்கள், காவற்காரன், தோட்டக்காரன், சமையற்காரன், பில் கலக்டர்கள் மூவர் முதலியோர் ஒருவித தயை, தாக்ஷண்யமின்றியும், பாரபக்ஷமின்றியும் வேலையினின்று ஒரு வாரத்திற்குள் நீக்கப்பட்டனர். ஒரு மாத நோட்டீஸுக்குப் பதிலாக ஒரு மாதச் சம்பளம் அனைவர்க்கும் கிடைத்தது. புது வேலைக்காரர்களும் அமர்த்தப்பட்டனர்.

குறி தவறு இக் கோடரியிலிருந்து தப்பித்துக் கொண்டவள் வீடு பெருக்கும் பெண் ஒருத்தியே. முதலில் அவளையும் ஸரஸா வெளிக் கிளப்பி விட்டாள்.

'தாயே, நான் இங்கு வந்து நாளை புதனுக்குத்தானே எட்டு நாளாகிறது. நீங்கள் மலையிலிருந்து வருவதற்கு முதல் நாள்தான் நான் இங்கு வேலையில் அமர்ந்தேன். அதற்குள்ளேயே அனுப்பி விடுகிறீர்களே. காலமோ கெட்ட காலமாயிருக்கிறது. நானோ ஒரு சிறு பெண். தாய் தகப்பன் ஒருவருமில்லை. வேலையை விட்டு நீக்கி விட்டால் பட்டினி கிடந்து உங்கள் வீட்டு வாசலிலேயே சாக வேண்டியதுதான். நான் இங்கு வேலைக்கு வருவதற்குமுன், மூன்று நாள் முழுப்பட்டினி, அம்மணி' என்று இரக்கம் உதிக்கும் வண்ணம் மன்றாடினாள்.

'எட்டு நாளாகிறது' என்ற வார்த்தைகள்தான் அந்தப் பெண்ணைக் காப்பாற்றின. ஸரஸா, மற்றப் பயமுறுத்தலுக் கெல்லாம் அப் பெண்ணைக் கோபித்துக்கொண்டு, அவளை வேலையி லிருத்திக் கொண்டாள்.

அடுத்தபடியாக ஸரஸா, டாக்டரின் தாயாருக்கும், மூத்தாளின் குழந்தைகளுக்கும் 'தாம்பூலம்' வைத்தாள்.

கிழவி, வேலையி லிருந்து தள்ளப்படும் பேர்வழிகளுக்கெல்லாம் வாது புரிகிறாள். புதிதாக வந்துள்ள வேலைக்காரர்களைச் சரிவர வேலை வாங்கத் தெரியவில்லை. வேலைக்காரர்களிடம் தயை, தாக்ஷண்யம் முதலியன காட்டவே கூடாது. கொஞ்சம் இரக்கமுள்ள மனதென்றால் 'குதிரையேற' ஆரம்பித்து விடுவார்கள். அவர்கள்

' மிஞ்சிடில் கெஞ்சுவர்
கெஞ்சிடில் மிஞ்சுவர்.'

சம்பளம் ஒன்றைத் தவிர அவர்களுக்கு எதும் கொடுக்கவே கூடாது. 'பக்ஸிஸ்' என்பது பேசவே கூடாது. வேலைக்காரர்கள் எதாவது புத்திசாலித்தனமாகக் காரியம் செய்து விட்டாலும், அவர்களை அதற்காக அவர்கள் எதிரிலேயே புகழ்ந்துரைப்பது போன்ற மூடத் தனம் வேறு கிடையாது. தன் தலைக்குக் கொள்ளி அதைவிட வேறொன்றும் தேவையில்லை. வேலைக்காரர்களிடம் வேலை வாங்கும் போது பச்சாதாபம், அனுதாபம் முதலிய பல்வேறு உணர்ச்சிகள் உற்பவிக்கும் 'நெஞ்சம்' ('ஹிருதயம்') என்பதைத் தூரமாகக் கட்டிப் போட்டு வைக்க வேண்டும். கடிகாரம் வேலை செய்வது போல், நாம் யாதொன்றையும் கவனியாது இருந்து வரவேண்டும். தற்காலத்தில் வேலைக்காரர்களைச் சரிவர நிர்வஹிப்பதென்பதே ஓர் அரிய நூல் ஆகி விட்டது.

'மேலும் 'உழவுக்கும் அக்னி ஹோத்ரத்திற்கும் ஒவ்வாது' என்று ஒரு பழமொழி உண்டு. அதேபோல் கிழவியுடன் தான் சேர்ந்து வசிப்பது ஒரு காலும் ஒவ்வாது. குழந்தைகளுடன் கிழ வியைப் பிரத்தியேகமான ஜாகை வைத்து விடுவது தான் இருவருக் கும் நலம். வீட்டிற்கும் நலம்' என்றாள் ஸரஸா டாக்டரிடம்.

'நரிக் கதிகாரம் கொடுத்தால் கிடைக்கு ஆடு இரண்டு கம்பி' என்று சொல்லுவார்கள். ஸரஸா விஷயத்தில் அது உண்மை ஆகிவிட்டது.

டாக்டரும் ஆலோசனை செய்தார்; தாயாரின் நன்மையை உத் தேசித்து, அவளும் குழந்தைகளும் ஒதுங்கி யிருப்பதே நலம் என முடிவு செய்தார். கிழவி அந்த 'சகிதி'யை விட்டு வெளியேறி னால் போதும் என்று சொல்லி சம்மதித்தாள்.

மறு வாரம் முதல் கிழவியும், குழந்தைகளும் காணப்படவில்லை. டாக்டர், வீடு 'வெறிச்சென்று' இருக்கிறது என்றார். ஆனால் ஸரஸா அப்படி நினைக்கவில்லை.

ஸரஸாவின் சீர்திருத்தங்கள் அத்துடன் நிற்கவில்லை.

டாக்டருடன் இரண்டு ஜூனியர் டாக்டர்கள் இருந்தனர். இங்கிலந்து சென்று வந்த பிறகு டாக்டருக்குப் பிராக்டீஸ் (Practice) மிக அதிகரித்தது. ஒருவரால் ஸமாளிக்க முடிய இயலாத அவ்வளவு கேஸுகளைப் பார்க்க வேண்டி யிருந்தது. டாக்டரின் கியாதியைக் கண்டு இரு டாக்டர்கள் அவரிடம் வந்தனர். 'கும்பிடப் போன தெய்வம் குறுக்கே வந்தது' போல், மகிழ்ச்சியுடன் தன்னிடம் அவர்களை வேலைக்கு அமர்த்திக் கொண்டார்.

வீட்டு நிர்வாகத்திற்கு யாதொரு சம்பந்தமு மில்லாத அந்த இரு ஜூனியர் டாக்டர்களும் பட்ட பாடு கடவுளே அறிவார். அவ்

விருவரும் 'எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார். கருமமே கண்ணயினர்;' ஆயினும் மானக் கேட்டிற்குப் பயந்தவர்கள்; 'சேலே கட்டிய மாதரை' நம்பக் கூடாது என்ற கொள்கையினர்; ஆதலின் மிகக் கவனமாகவே நடந்து வந்தனர்; ஸரஸாவின் மூளை என்னும் இயந்திரத்தில் ஒரு ஸ்க்ரூ (Screw) தளர்ந்து விட்டது என முடிவு செய்து கொண்டு, அவள் வழியே செல்வது முழுதும் தவிர்த்தனர்.

தன் வார்த்தைகளை அவ்விருவரும் மதிப்பதில்லை என ஸரஸா அறிந்து கொண்டாள்; அவர்களை அவமதித்து ஒழிப்பதெனக் கங்கணம் கட்டிக் கொண்டாள்.

இதற்குள் மற்றோர் சம்பவம் நிகழ்ந்தது. டாக்டர் கதர் இயக்கத்திலே மயக்க முள்ளவர். அவரது ஆடை உடைகள் அனைத்தும் கதராணியே. ஒரு நாள் ஸரஸாவிற்காகக் கதர் பட்டில் ஏராளமான மிக உயர்ந்த துணிகள் டாக்டர் வாங்கி வந்திருந்தார். மிகப் பரிவும் நயமும் காட்டி, டாக்டர் ஒவ்வொரு துணியையும் பற்றி மிகச் சிலாக்கியப் படுத்திச் சொல்லலானர்.

வந்தது கோபம் இராணிக்கு. டாக்டர் மட்டில் கதராடை இருந்ததுபற்றி அவளுக்கு யாதொரு ஆக்ஷேபனையு மில்லை. தனக்கும் கதராணி சிபார்சு செய்தபோது தான் கோபம் எழுந்தது.

'உங்களுக்கு வர வர மூளை கலங்கி விட்டது. நீங்கள் தான் எழவு கதர் வேஷம் போட்டுக் கொள்ள வேண்டும். அந்த எழவு எனக்கு எதற்கு? தடித்தடியாய், சாக்கு சாக்காய், புடவைகள்! நன்று!!' என்று கூறி டாக்டர் அன்புடன் வாங்கி வந்தவற்றை யெல்லாம் மிக அலக்ஷியமாக அப்பால் வாரி எறிந்து விட்டாள்.

டாக்டர் மிக ஸாத்விகி; ஒரு கன்னத்தில் அடித்தால் மற்றொரு கன்னத்தையும் காட்டும் மாண்புள்ளவர்; ஆகவே தானும் மிஞ்சியிருந்த கதர் துணிகளை வாரி ஸரஸா எறிந்த விடத்திலேயே எறிந்தார்.

சற்று முன் மிக ஒழுங்காகவும் ரமணியமாகவும் மடிக்கப்பட்டிருந்த துணிகள் தாறுமாறுய் அலங்கோலமாய்க் கிடந்தன. கண்ணைக் கவரும் கலர்கள், தூசியினுல் பாழாக்கப்பட்டு உருக்குலைந்து விட்டன.

டாக்டர் செயலின் கொள்கையை ஸரஸா அறிந்து கொள்ளக் கூடவில்லை. டாக்டரின் மனத்தைத் திருப்பிவிட்டதாக நினைத்துக் கொண்டாள்.

மறு நாள் முதல் டாக்டர் வீட்டிற்குப் பத்திரிகைகள் வருவது நின்று விட்டது.

பெரும்பாலான பத்திரிகைகள் கதரியக்கத்திற்குச் சாதகமாயிருந்தன. அனைத்தையும் ஸரஸா நிர்தாக்ஷண்யமாக நிறுத்திவிட்டாள்.

* * * *

டாக்டரின் இல்லற வாழ்க்கை நிம்மதி யற்றுவிட்டது. அன்பு, பாசம் முதலியவை பறந்தோடி விட்டன. அதிகாரம் படாடோபம் உலாவ ஆரம்பித்தன.

டாக்டருக்கு மூத்த மனைவியின் மூலம் மூன்று பெண் குழந்தைகள் இருந்தன. அவருக்கு மூத்தாள் இறக்கும் பொழுது வயது சுமார் 42. 'பிள்ளையில்லாமை' என்னும் குறையை நிவர்த்தி செய்து கொள்ளும் பொருட்டே அவர் அந்த முதிர்ந்த வயதில் ஸரஸாவைக் கலியாணஞ் செய்து கொள்ளத் துணிந்தது. ஸரஸா, பீ. ஏ. (B. A.) வாசித்தவள். நல்ல படித்தவள் தனக்கு மனைவியாகக் கிடைத்ததைக் குறித்து, டாக்டர் பெருமையோடும் மகிழ்ச்சியோடும் இருந்தார்.

ஆனல் டாக்டரின் எண்ணங்கள் வெகு சீக்கிரம் பொய்க்கலாயின. டாக்டர், பாக்கு வெட்டியி லகப்பட்ட பாக்குப்போல் ஆனர்; சண்டமாருதத்தில் தவிக்கும் உதிர்ந்த சருகு போல ஸரஸா என்னும் காற்றின் வழியே செல்லலானர். கலியாணம் பண்ணின மறு நாள் முதல் டாக்டரும் ஸரஸாவும் அநேக ஊர்களுக்குப் பிரயாணம் செய்துவிட்டுக் கோடை காலத்திற்கு உதகமண்டலம் சேர்ந்தனர். ஸரஸாவின் ஹனி மூன் (Honeymoon) சுமார் ஒரு வருஷம் வரை நீடித்தது.

சகல வியாதிகளின் மூலத்தையும் குணத்தையும் அறிந்த டாக்டர் ஸரஸாவின் குணத்தை அறிய முடியவில்லை. டாக்டர் ஸரஸா குணத்தை அறிந்திருந்தாளோ, இல்லையோ, அது தெரியாது. ஆனல் டாக்டரின் விருப்பத்தையோ அல்லது கொள்கையையோ அவள் சிறிதும் மதிக்கவில்லை. ஒருவர் மனத்தை மற்றொருவர் அறியாது அல்லது மதியாது சதிபதிகள் எவ்வாறு வாழக்கூடும்? கண்ணிரண்டும்

ஒன்றையே நோக்கினால்தானே ஒரு வஸ்துவைப் பார்க்கக் கூடும். இவ்வாறு டாக்டர் வீட்டில் அமைதி யின்மையி லிருந்து அன்பு குறைந்து, இருவருக்கும் பிளவு ஏற்பட்டது. பிளவி லிருந்து பேதங் களும் பேதங்களி லிருந்து பெருஞ் சண்டைகளும் தொடங்கலாயின.

டாக்டர் 'அனைத்தும் நன்மைக்கே' என்ற கொள்கை உள்ளவர்; ஸ்திரீகள் பால் அதிக மதிப்பு வைத்துள்ளவர். இவ்விரண்டு கொள்கைகளுமே, வீட்டில் அடிதடி கலகம் வராது காத்துக் கொண்டிருந்தன. ஸரஸாவின் கையும் ஓங்கி யிருந்ததற்குக் காரணம் இவையே. ஸரஸாவின் பிடிவாதமும் ஹிருதய மின்மையும் வர, வர, பொறுக்கக்கூட வில்லை.

* * * *

நாள் சில சென்றன. ஒரு நாள் மாலை வெளியே போன ஸரஸா திரும்பி வரவில்லை. இரவு வெகு நேரம் ஆகியும் வரவில்லை. டாக்டருக்குக் கவலை அதிகரித்துக்கொண்டே வந்தது. அவள் சாதாரணமாய்ப் போகக்கூடிய இடமெல்லாம் விசாரித்தும் ஆகிவிட் டது. பலனில்லை; இவ்விதம் இரண்டு நாட்கள் சென்றன. பம்பாயி லிருந்து டாக்டருக்கு ஒரு கடிதம் கிடைத்தது. அது ஸரஸாவினிட மிருந்து வந்தது. அது பின் வருமாறு:

பம்பாய்.

க்ஷேமம்,

நான் இங்கு வந்து ஸினிமாவில் சேர்ந்துவிட்டேன். என் அழகுக்கும், சாமர்த்தியத்திற்கும் எனக்கு மாதம் ரூ. 2,000 சம்பளம் ஏற்படுத்தி யிருக்கிறார்கள். கூடிய சீக்கிரத்தில் நான் நடிக்கப்போகும் படக் காட்சிகளைக் காணுவீர்கள். என்னை இனிமேல் நீங்கள் திரை யில்தான் காணலாம்.

அமைதியுள்ள வாழ்க்கையே எனக்குப் பிடிக்கவில்லை. 'போது மென்ற மனது பொல்லாங்கு செய்யும்' என்னும் கொள்கையாள் நான். உங்கள் குணங்களுக்கும் என் விருப்பத்திற்கும் வெகு தூரம். சுழற்சியும், வேகமும் பொருந்தியுள்ள என் வாழ்க்கையே எனக்குப் பிடித்திருக்கிறது.

நான் உங்களைப் பிரிந்தது இருவருக்கும் நலமே என எண்ணு கிறேன்.

இப்படிக்கு,

ஸரஸா.

டாக்டர் அக் கடிதத்தைப் படித்தவுடன் ஸ்தம்பித்துப் போய் விட்டார்; சிறிது நேரம் சென்று, தனக்குள்ளேயே 'நல்லது, திரையில் மட்டுமா உன்னைப் பார்க்கப் போகிறேன். உன் பெயரை எல்லாச் சுவர்களிலும் நான் காணப்போகிறேன்' என்று தனக் குள்ளே சொல்லிக்கொண்டு பெருமூச்சு விட்டார்.

மாதர் வழிபாடுகள்



நாக வழிபாடு



துளசி வணக்கம்

சித்திரக் கல்வி

[திரு. ச. சின்னத்துரை]

இக் காலத்திலே வித்தியாசாலைகளிலே கற்பிக்கப்படுங் கல்விகளுள்ளே சித்திரக்கல்வியும் ஒன்றாகும். மற்றைய கல்விகளைக் கற்பதற்குத் தகுந்த காலமும் நேரமும் வேண்டப்படுவதாகும். ஆனால், சித்திரக்கல்வியைப் பயில்வதற்கு அதற்கெனவோர் காலமும் நேரமும் வேண்டியதில்லை. மூளை சலித்த நேரமும் தூக்கம் வருவதற் கேதுவான வெயிற் காலங்களிலும் அதனைப் பயின்று கொள்ளலாம்.

பயிலுந்தோறும் உற்சாகத்தையும், புத்துணர்ச்சியையும், ஆனந்தத்தையும் உண்டாக்கக் கூடியது சித்திரக் கல்வியே யாம். இலக்கிய இலக்கண இதிகாசங்களை ஒருவன் தனது சக்திக் கேற்ப அதிக சீக்கிரத்திலுங் கற்றுக் கொள்வான். ஆனால், சித்திரக் கல்வியோ அங்ஙனம் ஏட்டுப் பிரதிகளிலே அல்லது புத்தகங்களிலே பார்த்து இலகுவாகக் கற்கப்பால தொன்றன்று. 'சித்திரமுங் கைப் பழக்கம்' என்ற முதுணர்ந்தோர் கூற்றின்படி பலநாட் பழகிவந்தாலேயன்றி அதிலே தேர்ச்சி யடைதல் முடியாததாகும். சித்திரக் கல்வியோ பல மொழியாளருக்கும் பொதுவாயதோர் கல்வியாம். உதாரணமாக: நாம் ஒரு சரித்திரத்தை நம் குழலினுமினிய தண்டமிழில் எழுதுவோமானால் அதைத் தமிழ் கற்றறிந்தவர்களே வாசித்து அறிவார்கள். அதனை விடுத்து ஆங்கிலத்திலே எழுதுவோமானால் ஆங்கிலங் கற்றவர்களே அதனை வாசித்து விளங்கிக் கொள்வார்கள். ஆகவே அச் சரித்திரத்தைப் பல பாஷைக்காரும் விளங்குதற் பொருட்டுப் பல பாஷைகளிலும் தனித்தனி எழுதுவோமாயினும் கல்லாதவர்கள் அதனை வாசித்தறிய மாட்டார்கள். ஆனால் சித்திர மூலம் அக்கதையை வரைந்து காட்டுவோமானால் யாவரும் எளிதில் விளங்கிக் கொள்வார்களென்பதற் கையமின்று.

அன்றியும் ஒரு பொருளை அறியாத ஒருவனுக்குப் பல வகையாக அதன் நிறம் உருவம் இத்தன்மைத்தென்று பன்முறை விளக்கினும் அது அவன துள்ளத்தில் நிலைநிற்க மாட்டாது. ஆனால் சித்திர மூலம் விளக்குவோமாயின் அது அவன துள்ளத்திற் பசுமாத்தாணிபோற் பதியுமென்பது ஒரு தலை. பூமி சாஸ்திரம் போன்ற பாடங்கள் படிப்பிப்

பதற்கும் சித்திரக்கல்வி இன்றியமையாது வேண்டப்படுவதாகும். நைல்நதி எகிப்தையும், எகிப்திய சூடானையும் நீர்ப்பாய்ச்சி மத்தித் தரைக் கடலுள் விழுகின்றதென்று பன்முறை சொல்லினும் அது மாணவருள்ளத்தில் பதிய மாட்டாது. ஆனால் பட மூலங் காட்டுவோமாயின் அது அவரதுள்ளத்தில் இலகுவாகப் பதிந்து விடும். இன்னும் பல பாஷைக்காரரும் பேசும் மொழிக்கு முதற் காரணமும், அணுத்திரளின் காரியமுமாகிய ஒலியை எழுத்து மூலங் காட்டுவதும் சித்திரமேயாம். சைவ மதத்தினராகிய நாம் கடவுளை அவரது இலட்சணங்களமைய ஓர் திரு உருவமாகச் சித்திரித்து வணங்குகின்றோம். சீர் திருத்தமும் நாகரிகமும் மிகுந்த இக் காலத்திலே பல தேயங்களையும் சுற்றிப்பார்ப்பதற்கு ஒருவனுக்கு மிகுந்த ஆவலாய் இருக்கும். அங்ஙனம் பார்ப்பதற்காகப் பல பாஷைகளையும் கற்பது அவனுக்கு முடியாததாகும். ஆனால் சித்திரம் மாத்திரம் பயின்றால் அவன் எல்லா மொழி பேசுபவருடனும் சித்திர மூலம் ஒருவாறு பழகிக் கொள்வான்.

இங்ஙனமெலாம் உயர்ச்சி பொருந்திய சித்திரக்கல்வியில் இந்தியரே பூர்வந்தொட்டு வல்லுனர்களாய் இருந்தனர். அது இப்போது தேய்பிறை ஒப்பக் குன்றி வருகின்றது. அறியாத ஒருவனது முகத்தைக் கொடுப்பினும் அவனைப்போல் சித்திரிக்கும் வன்மை இந்தியருக்கிருந்தது. எனவே இக்காலத்தில் மேலைத் தேயத்தவர்கள் கண்டுபிடித்த 'பொட்டோக் காமிரா' அக்காலத்திலே இந்தியருக்குத் தேவையற்றதாய் இருந்தது. என்னே! இந்தியர்களது திறமை.

நான்கு நாய்கள்

குழந்தை வளர்ப்பு

[மறையோலி]

(பதிப்புரிமை)

பயம்

பயம் என்பது என்ன? பயம் என்பது குழந்தைக்கு அவசியமா? பயம் எப்பொழுது உண்டாகிறது? அதனால் நற்பயன்கள் உண்டா? அல்லது அது கெடுதல்களை மட்டும் கொடுக்குமா? கெடுதல்கள் கொடுக்குமாயின், அதை அறவே ஒழிக்க முடியுமா? என்பனவற்றை இங்குக் கவனிப்போம்.

பயம் ஏற்படும் விதம்

சாதாரணமாக குழந்தைகளுக்கு இரண்டு அல்லது மூன்று வயதிற்கு மேலேதான் பயம் என்னும் உணர்ச்சி ஏற்படுகிறது என்று சொல்ல வேண்டும். அதுவரை தீயைப் பிடித்தல், பள்ளத்தில் விழுதல், மேட்டில் மோதிக்கொள்ளல், கிழித்தல், தண்ணீரைக் கொட்டுதல், விலை யுயர்ந்த வஸ்துக்களைப் பாழாக்குதல் முதலியவைகளை யாதொன்று மறியாமலும், அச்சம் சிறிது மில்லாமலும் குழந்தை செய்து வந்தது. யாராவது சற்றுக் கோபித்துக்கொண்டு அதட்டினாலும், தாயின் சலுகையை நம்பி அது பயப்படா திருந்தது. சுமார் மூன்று பிராயம் வந்தவுடன், குழந்தைக்கு அவயவங்களின் வலிமை ஏற்படுகிறது. மேலும் தாயின் சலுகையும் சற்று குறைகிறது. அதுவரை பார்த்திராத வஸ்துக்கள், கேட்டிராத சப்தங்கள், இவைகளைப் பார்க்கவோ அல்லது கேட்கவோ நேரிடுகிறது. தாயன்றி, வேறு வேற்று மனிதர்களையும், குழந்தை பார்க்க நேரிடுகிறது. அப்பொழுது, குழந்தைக்குத் தயக்கத்தை ஏற்படுத்தும் ஒரு புதிய உணர்ச்சி ஏற்படுகிறது. இவ்வுணர்ச்சியே பயம் எனப்படும்.

பெரும்பாலும் மூன்று வயதிற்கு மேலேதான் குழந்தைக்குப் பயம் ஏற்படுகிறது என்று மேலே சொன்னோம். ஏனென்றால், அப்பொழுதுதான், தன் தாயையே சார்ந்திருந்த குழந்தை, முதன் முதலாகத் தானாகவே காரியங்கள் செய்யத்தக்க வன்மையடைகிறது.

அவ்விதம் செய்யும்பொழுது, தான் எண்ணியவாறு காரியங்கள் முடிவதில்லை எனக் குழந்தை அறிந்து கொள்ளுகிறது. எதிர்பாராத இடர்களும், தடைகளும் உள்ளன என்று குழந்தை தானாகவே அறிந்து கொள்ளுகிறது. அப்பொழுதுதான் குழந்தைக்குப் பயம் என்னும் உணர்ச்சி ஏற்படுகிறது.

பயம் என்பது, பிறந்த பின், இரண்டு மூன்று பிராயத்திற்குப் பின் குழந்தைக்கு ஏற்படுபவைகளில் ஒன்று என்று முடிவாக உறுதி கூறுவதிற்கில்லை. பால் மணம் மாறாத, ஒன்றுமே யறியாத பசுங் குழவிகள் (பச்சைக் குழந்தைகள்) கூட, பயம் என்னும் உணர்ச்சி யைக் காண்பிக்கின்றன. வானத்தில் ஏற்படும் இடி, திடீரென்று ஏற்படும் சப்தம் முதலியவைகள் பச்சைக் குழந்தைகளையும் நடுங் கச் செய்தல், நாம் நன்கறிந்ததே. ஆதலின் பயம் என்பது பிறந்தது முதல் உண்டு என அறியவருகிறது.

பயத்திற்குக் காரணம்

இடி, மின்னல் இவைகளைக் கண்டு குழந்தை பயப்படுவதேன்? திடீரென ஏற்படும் சப்தங்களினால் குழந்தை பயப்படுவதேன்? இதற்குக் காரணம் வெகு சுலபமாகக் கூறலாம். சாதாரணமாக, நல்ல பகுத்தறிவு தெரிந்து, வயதிலும் அனுபவத்திலும் முதிர்ந்த பெரி யோர்களும் சில சமயங்களில் பயமுறுகிறார்கள். ஏன்? அறிவிற் கெட்டக்கூடாததும், (அதாவது தன் அனுபவத்தினாலும், யூகத்தி னாலும் கிட்டாததும்) தன் வசம் ஆக்க முடியாததும், வரை யறுத்துக் கூற முடியாததும், ஆனவைகளைக் கண்டால், பயம் ஏற்படு கிறது. இது இயற்கையின் இயல்பாய் அமைந் திருக்கிறது.

பயமென்பதையே, கனவிலும் கேட்டிராத, சிங்கம், புலி முதலிய கொடிய காட்டு மிருகங்களும், உருவத்தில் அற்பமான மனிதனைக் கண்டும், துப்பாக்கியின் ஓசையைக் கேட்டும் நடுங்குவானேன்? இவைகள், அவ்விலங்குகளுக்கு அஸாதாரணமானவை

இருட்டு, தனிமை, இவைகளினால் குழந்தைக்குப் பயம் ஏற்படு வதற்கும் காரணம் இதே. இவ்விதமான பயத்தை ஒழிப்பது வெகு சுலபமே. இருட்டில், விளக்கை யேற்றி பயப்படுவதற்கு அவசியம் யாதொன்றும் இல்லை எனக் குழந்தைதானே அறிந்து கொள்ளுமாறு செய்ய வேண்டும். இடி, மின்னல் மற்றுமுள்ள இயற்கை வினோதங் களைக் குழந்தைக்குத் தக்க பிராயம் வந்தவுடன், விளக்கிக் காட்டி அச்சம் அடையவேண்டுவதின்மையை வற்புறுத்தல் வேண்டும்.

மிருகங்கள், நூதனமான வஸ்துக்கள் முதலியவைகளைப் பற்றியும், குழந்தையின் அறிவிற்கு எட்டிய வரை விவரித்து, பயத்தைக் குறைத்தல் வேண்டும்.

மேற்கூறியவைகள் அல்லாமல், குழந்தையின் மனதில் நாமே, நாம் அறியாமலே பயத்தை ஏற்படுத்திவிடுகிறோம். குழந்தைப் பருவத்தில், நாம் எதையாவது கொண்டு, அதைப் பயமுறுத்திவிட்டால், அதை நாம் பின்பு மாற்றுதல் என்பது எளிதல்ல. ஆதலின், குழந்தை வளர்ப்பில், தற்கால சாந்தியாக, பயமுறுத்துதல் என்பது கூடவே கூடாது. உதாரணமாக ஒரு குழந்தை, சாப்பிடாத பக்ஷத்தில், அதன் தாய் பின் வருமாறு சொல்லுவது வழக்கம்; ‘ அதோ சிவப்புக் குல்லாயுடன் போலீஸ்காரன் வருகிறான். அவன் உன்னைப் பிடித்துக்கொண்டு போய் டாணாவில் அடைத்து விடுவான்.’ மற்றும் குழந்தை ஏதாவது சொன்னபடி கேட்காவிட்டால், தாய், ‘ பூச்சாண்டியிடம் உன்னைப் பிடித்துக் கொடுத்து விடுகிறேன் ’ என்று சொல்லுவதும் வழக்கம். இவ்வாறு சொல்லுவதினால், குழந்தையின் மனத்தில் நாமே பயம் என்னும் வித்தை விதைக்கிறோம். அது நாளடைவில் வேரூன்றி முற்றி விடுகிறது. பின்பு தீங்காய் விளைகின்றது. ஆதலின், இவ்விதமான முரண்பாடான வார்த்தைகளையோ அல்லது புத்திமதிகளையோ நாம் சொல்லாது வெகு ஜாக்கிரதையாய் இருக்க வேண்டும்.

மற்றொரு வகையான பயமும் உண்டு. பிறருடைய கொடுமையைக் கண்டும் கோப வார்த்தைகளின் கடுமையை நினைத்தும் பயமுறுதல். உதாரணமா, தக்க காரண மில்லாமல் அடிப்பது, ஓயாமல் திட்டுவது, அடிக்கடி தண்டிப்பது இவைகள் எல்லாம், குழந்தையின் மனதில், பின்பு எவ்வகையான உபாயத்தாலும் மாற்ற முடியாத பயத்தை எழுப்புவதுடன், சண்டித்தனத்தையும் ஏற்படுத்துகிறது. இவ்வாறு செய்வதால் குழந்தையானது நாளடைவில், பிறருடைய அபிப்பிராயங்களைப் பற்றியோ, பிறர் தம்மைப் பற்றி நினைப்பதைப் பற்றியோ மனதிற் கொண்டு அச்சம் அடையும். ஆகவே குற்றங்களுக்காகத் தண்டிப்பதில், பெற்றோர்கள் வெகு கவனமா யிருக்க வேண்டும்.

பயத்தினால் ஏற்படும் தீங்குகள்

பயம் கொடிய வியாதி போன்றது. இது மனோவிருத்தியைக் குறைப்பதுடன் சரீர சௌக்கியத்தையும் பாழ்படுத்தும்; குழந்தையின் செயல்களைக் குறுக்கி, சுறுசுறுப்பை முற்றிலும் ஒழித்து, கற்பனா சக்தியை அறவே வோறுக்கும்; காரியங்களிலும் குதூகலத்தையும், உத்ஸாகத்தையும் குறைத்து விடும்; சமயத்திற் கேற்றவாறு பொய் சொல்லுமாறு தூண்டும்; பிற்பாடு கொடுமை,

பொறுமை, ஸ்வய புத்தி யில்லாது ஒரு கட்சியைச் சார்தல் முதலிய வைகளுக்கும் காரணம் பயமே. மேற்கூறியவை எல்லாம் பயத்தினால், மனதிற்கு ஏற்படக்கூடிய தீங்குகளாகும்.

இவையல்லாமல், பயத்தினால், சரீர ஸௌக்கியத்திற்கு ஏற்படும் கெடுதல்களும் எண்ணிறந்தவை. பயத்தினால், நடுக்கமும், தொண்டையடைப்பும், மாரடைப்பும், தன்னறியாமலே மூத்திரம் பெய்து கொள்ளுதலும் வாயி லெடுத்தலும், வேர்த்து விறுவிறுப்பதும், மயிர்க் கூச்சலிடுதலும், மயக்கமுற்று, மூர்ச்சையற்று படீரெனக் கீழே விழுதலும் ஆகிய பல அதிர்ச்சிகளைக் கண்டிருக்கிறோம்.

ஆதலால் பய மிகுதியானது, சரீர ஸௌக்கியத்திற்கும் தீங்கு செய்கிறது. இதன் பயனாகப் புத்தி தீட்சண்யத்தையும் ஆட்டிவிடுகிறது.

பயத்தினால் ஏற்படும் நலன்கள்

பயத்தினால், சில நன்மைகளும் இல்லாமலில்லை. குழந்தைப் பருவத்தில் குழந்தையை வேண்டாததைச் செய்வதினின்றும் தடுப்பதற்குப் பயமுறுத்தல் நல்ல கருவியாகும். ஒரு முறை தப்பிதம் செய்து விட்டால் மறுமுறை அதே மாதிரி செய்யா திருக்குமாறு தடுப்பதற்கும் ஸாதகமாகும். இவ்விதம் செய்வதில், பயத்தை நற்பயனைத் தரும் அளவுவரை உபயோகித்து, மிகையாகாமல், கவனித்து வருவது அவசியமாகும். அல்லாமலும் பயமானது ஒரு விஷயத்திலுள்ள அபாயங்களைக் குறித்து எச்சரிக்கை அடையுமாறு செய்வதற்குச் சிறந்த உதவியாகும். இந்தச் சந்தர்ப்பத்தில் பயத்திற்கும், எச்சரிக்கைக்கும் உள்ள வேறுபாடுகளைத் தெரிந்து கொள்ளுதல் நலம். பயம் என்பது, காரண, காரியம் தெரியாது அச்சுறுதல். எச்சரிக்கை என்பது ஒரு காரியத்தில், நல்லவை, தீயவைகளை அறிந்து தீயவைகளை விலக்குவதே.

இவ்வாறின்றி, திடீரெனப் பயமும் எச்சரிக்கையுமின்றி ஒரு காரியத்தைச் செய்யப் புகுதல் மூடத்தனமாகு மல்லவா?

பயத்தைத் தடுத்தல்

பயத்தினால் ஏற்படும் நன்மைகள் மிகச் சில. அதனால் ஏற்படும் கெடுதல்களோ அநேகம். ஆதலின் பயத்தைத் தடுத்தல் அவசியம் என ஏற்படுகிறது.

குழந்தையை அநாவசியமாகவாவது அடிக்கடியாவது பயமுறுத்தக் கூடாது. எதாவது தற்கால சாந்தியாக பயமுறுத்த வேண்டி யிருந்தாலும் முன்னுக்குப் பின் முரண்படாமல், ஒரே மாதிரிக் கொள்கையையே கையாள வேண்டும். போலீஸ்காரனைப் பற்றிச் சற்று முன்பு பயமுறுத்திவிட்டு, உடனே, குழந்தையை

நோக்கிக், 'காற்று வாங்க வெளியே போகலாம்' என்று கூறிக் கூப்பிட்டால் அது வருமா ?

அக்கம்பக்கத்திலுள்ள அஸாதாரணமானவைகளைப் பற்றியும், அடிக்கடி ஏற்படும், இடி, மின்னல் போன்ற இயற்கை அதிர்ச்சிகளைப் பற்றியும் தக்க காலத்தில் சிறிது சிறிதாக விவரித்து, குழந்தையின் அறிவைக் கொஞ்சம், கொஞ்சமாகப் பரக்கச் செய்ய வேண்டும்.

அறிவு வளர வளர, அவ்வப்பொழுது பெரிய வீரர்களின் கதைகளையும், வாழ்க்கை வரலாற்றைப்பற்றியும் உரைத்து, குழந்தையின் மனதில் பயமே இல்லாமல், ஊக்கமும், தைரியமும் ஏற்படும் வண்ணம் செய்து வர வேண்டும். இராமர், ஹனுமார் இவர்களுடைய வீரச் செயல்களைப் பற்றி, சிறு பிராயத்தில் தன் தாய் சொல்லக்கேட்டு, பின்பு பிரபல்யமான தீரச்செயல்கள் புரிந்த சிவாஜியின் பெயர் இங்குக் குறிக்கத் தக்கது.

குழந்தை தவறுதல்கள் செய்தாலும் அவைகளைக் குறித்து, அதன் முன்னிலையிலேயே பழிப்புரை கூறுவதோ அல்லது இழிவு படப் பேசுவதோ கூடாது. இவ்விதம் செய்வதால் குழந்தை பயத்தினால் இதைத் தவிர்த்து, அறிவு விருத்திக்கு ஆதாரவும் அனுசரணையுமான ஆசைகளை எழுப்ப வேண்டும். திடீரென யாதொரு காரியத்தையும் செய்யவிடாது, தன்னறிவிற் கெட்டியவரை தீர விசாரித்துச் செய்யுமாறு பழக்க வேண்டும்.

முடிவாக, பயம் என்பது யாவர்க்கும் உள்ளதே. அதை முற்றிலும் ஒழிப்பது என்பது இயலாத காரியம். பயத்தினால் ஏற்படும் தீங்குகள் மிகையாதலால், பயத்தை எவ்வளவு குறைவாகக் கையாடக் கூடுமோ அவ்வளவு குறைத்துக் கொள்ளுவது நன்மை தரும். பயத்தினாலேயே குழந்தையை வளர்த்தல் பிழையாவதுடன், குழந்தையின் ஸ்வயத் தன்மையை உருக் குலைக்கும்.

கருணைக் கடலாம் கடவுளின் கிருபையில் நம்பிக்கை

எல்லாம் வல்ல இறைவனது கருணையில் நம்பிக்கை வைத்தல் பயத்தை ஒழிப்பதற்கு ஒரு அரிய கருவியாகும். 'அன்பரிடருற்ற சமயந்தனில் நினைக்கு முன் வந்துதவு'ம் தன்மையுள்ளவரல்லவா கடவுள் ? உலகில், நாம் அறியாமலே நம்மை அச்சுறுத்தும் வஸ்துக்களும், பிராணிகளும், மற்றவைகளும் எவவாறு மலிந்து கிடக்கின்றனவோ, அவ்வாறே நாம் அறியாவண்ணம் கடவுளின் கருணைப் பிரவாகமும் மறைந்து கிடக்கின்றது. குழந்தைப் பருவம் முதலே இதை வற்புறுத்தி வருவது நலம்.

நித்தியமூர்த்தியின் காதல்

[மகதன்]

அம்பாள்புரம் 'ஜாலி கிளப்' அகில இந்திய 'ஜாலி கிளப்பு'களுக் கெல்லாம் தலைமை வகித்துவரும் கிளப்பாகும் என்பதை நீங்கள் முதலில் தெரிந்து கொள்ள வேண்டும். தீண்டாமை, பாராமை, நெருங்காமை முதலிய எந்த ஆமைகளும் இந்தக் கிளப்பில் அடியெடுத்து வைக்க முடியாது. ஆனால் கிணற்று ஆமை மாத்திரம் வாரந் தோறும் கிளப்புக்குள் கொண்டுவரப்பட்டு 'ஸூப்' செய்யப்பட்டு வந்தது. 'எல்லாரும் ஓர் குலம், எல்லாரும் ஓர் இனம், எல்லாரும் இந்தியா மக்கள்' என்ற பாரதியாரின் மொழிகளை ஒரு மயிரிழை கூட பிறழாது நடக்கும் தமிழ் மகன்கள் (தமிழ்ப் பண்டிதர்கள் இந்தத் தப்பிதத்திற்காக மன்னிக்க) இந்தக் கிளப்பில்தான் என்று நான் சொன்னால் நீங்கள் நம்ப மாட்டீர்கள். நீங்கள் நம்பினாலும், நம்பா விட்டாலும் 'ஜாலி கிளப்' பொது உடைமைக் கொள்கையில் மூழ்கி எழுந்த கிளப்பாகும் என்று நான் சொல்ல வேண்டியவனாயிருக்கிறேன்.



இதோ படத்தில் பாருங்கள்! ஒரு பெரிய கண்ணாடிக் கோப்பை நிறைய ஏதோ ஜலம் மாதிரி காணப்படுகின்றதல்லவா? 'ஆரஞ்சு கிரஷ்' என்றோ, 'ஐஸ் கலர்' என்றோ நினைத்துவிடப் போகின்றீர்கள்; இந்தத் திரவங்களெல்லாம் ஜாலி கிளப்பில் தலை காட்ட முடியவே முடியாது. வேறு என்னவாயிருக்குமென்று யோசிக்கிறீர்கள்; என்ன விழிக்கின்றீர்களே? வி—ன்—கா—ர்—னி—ஸ்! ஆமாம் சுவாமி! இந்தியர்களின் உடல் நலத்தைக் கருதி சீமைக்காரர்களால் செய்யப்பட்டு வருகின்றதே இன்பரசம்—அந்த ரசம்தான் இந்தக் கோப்பையில் ஜ்வலித்துக்கொண்டிருப்பது! 'வின்கார்னிஸ்'—அது நீடூழி

வாழ்க! தேசியப் பத்திரிகாசிரியர்கள் 'வின்கார்னிஸ்' சாப்பிட்டால் மிகவும் பயனுண்டு என்பதே அடியேன் அபிப்பிராயம். மூளை குளிர்ச்சியாக இருந்தால் தேசியத்தின் பெயரால் மக்களை ஏமாற்ற லாம்—அடியேனது யோசனையை எந்த ஆசிரியராவது பின்பற்று வார்களானல் 100 பர்ஸெண்ட் லாபம் உண்டு என்று உறுதி கூறு கிறேன். உம்!...ஒருவராவது பின்பற்றமாட்டார்களா என்ற உறுதி யுடன் இதுவரையிலும் இருந்து வருகிறேன். 'காதல்' என்ற தலைப் பைக் கொடுத்துவிட்டு இம்மாதிரி வீண்கதை வளர்த்துகிறனே இந் தப் பாவி' என்று சிலர் மந்திரம் ஜபிப்பது என் காதில் விழுகின் றது. மன்னியுங்கள்! மறந்தே போனேன் நித்திய மூர்த்தியை! ஏதோ, அடுத்த பாராவுக்குத் தாண்டிக் குதியுங்கள் பார்க்கலாம்.

'ஜாலி கிளப்'பின் காரியதரிசி நித்திய மூர்த்தி ஐயர் மிகவும் உத்தம குணம் வாய்ந்த ஓர் புருடர். உடலோ நெல் உறை மாதிரி. தேகமோ 'அமாவாசை' நிறம். அவரது தொந்தியோ இருவரை முட்டி வீழ்த்தும் சாமர்த்திய முடையது. அவரது இருண்ட உடலில் இரு விளக்குகள்போல ரவைக் கடுக்கன்கள் டால் வீசிக்கொண்டிருக் கும். ஐயர் ஷோக்குப் பேர்வழி. சீமைச் சரக்குகளைத் தவிர வேறு எந்த நாட்டுச் சரக்கையும் ஐயர் ஆதரிப்பது கிடையாது. 'நமது முன் னேற்றத்திற்காக இரவும் பகலும் ஓயாது பாடுபடும் வெள்ளை மக் களைச் சேர்ந்த லங்காஷையர் தொழிலாளர்களை ஆதரிக்கவேண்டி யது ஒவ்வொரு இந்தியனது கடமை யல்லவா? ஆதரிக்காது விட்டு விடுவோமானல் அது அதர்ம மல்லவா?.........' என்று ஐயர் அடிக் கடி ஜாலி கிளப் 'மீட்டுங்'குகளில் கர்ஜனை புரிவதுண்டு. ஐயருக்கு வயது இப்போதுதான் 53 ஆகிறது. இந்த இளம்பருவத்திலும் ஐயர் செய்து வரும் லீலைகள் அநேகம். புலால் புசிப்பார். பெண்க ளோடு லீலை செய்வார். ஸிகரேட் அடிப்பார். 'இவைகளைச் செய்ய வேண்டுவது ஒவ்வொரு இந்தியனின் கடமையாகும்—எப்படி யெனில் கேளுங்கள். பரமசிவன் நாமாம்ஸபக்ஷிணி; கண்ணப்பன் கொடுத்த கறித்துண்டங்களை உண்டவன். இந்துமதக் கடவுள்களுக் கெல்லாம் வைப்பாட்டிகள் உண்டு. கண்ணன் கோபிகைகளோடு லீலை புரியவில்லையா? சிவனுக்கு நெற்றியில் நெருப்புண்டு. நெற்றியில் நெருப்பை வைத்துக்கொண் டிருக்க நம்மால் முடியாவிட்டாலும் வாயிலாவது வைத்திருக்க வேண்டாமா?' என்று ஒரு சமயம் ஐயர் மைனர்கள் சங்கத்தின் திறப்புவிழாவில் செய்த பிரசங்கம் இன்னும் என் காதில் விழுந்துகொண் டிருக்கிறது. ஐயரை இதோடு சற்று நிறுத்துவோம்.

*** *** ***

அம்பாள்புரம் 'ஆனந்த லக்ஷ்மி' தியேட்டரில் எள் விழ இட மில்லை; அவ்வளவு பெரிய ஜனக்கூட்டம்! ('கடுகு விழுமா' என்று ஒருவர் கேட்கிருர். 'எங்காவது ஜனக்கூட்டமுள்ள இடத்திற்குப்

போய் எக்ஸ்பெரிமென்ட் செய்து பார்த்து முடிவுகட்டிக் கொள்ளுங்கள்' என்பது எனது விடை.) அன்று 'காதலர்களின் கோரம்' என்பது ஆட்டம். புரோபஸர் போளிராவ்'ஸ் மாஜிக்! குயிலினுமினிய கோகிலத்வனி, சுகசாரீர, சம்பன்ன, சௌந்தர்ய சுந்தராலங்ருத பூஷணி, கிராமபோன் பிளேட் மிஸ் ஜோரா பாயின் நடனம். கூட்டத்திற்குக் கேட்பானேன்?

படக்காட்சி மூன்று பாகம் காண்பிக்கப்பட்டதும் நடனம் ஆரம்பமாகியது. 2 அணு டிக்கட்டில் ஷோக்குப் பேர்வழி நித்திய மூர்த்தி ஐயர் எழுந்தருளியிருந்தார். 3 ரூபா இடத்தில் உட்கார்ந்தால் ஜோரா பாயை எப்படிக் கண்குளிர தரிசிக்கமுடியும்? ரவை மோதிரங்கள் பளபள வென்று மின்னிக்கொண்டிருந்தன. பாப்லீன் ஷர்டு வியர்வை நீரால் நனைந்து அவரது அழகை அதிகப்படுத்திக்கொண்டிருந்தது. உஸ்......பேசாதீர்கள்......ஸைலன்ஸ்......ஜோராபாய்!



'தணிகை மேவும் கந்தசாமி' என்ற பாட்டைப் பாடிக்கொண்டே வெளி வந்தாள் ஒரு இளம் பெண். உதடுகளில் சிவப்பு வர்ணம் மின்னியது. முகத்தில் வெள்ளைப் பௌடர். இரு கொங்கைகள் மாத்திரம் ஒரு மெல்லிய துணியால் மறைக்கப்பட்டிருந்தன. கால் நிஜார்—காலில் நிஜார் அல்ல. $\frac{1}{4}$ நிஜார்—இன்னுமா விளங்கவில்லை. தொப்புளிலிருந்து துடையை $\frac{1}{4}$ பாகம் வரையில் மறைத்துக் கொண்டிருக்கும் நிஜார். ஜோராபாயோ பச்சை மஹம்மதிய ஸ்திரீ. ஆனால் தமிழ்ப் பாட்டை இப்போது கொலைசெய்துகொண்டிருக்கிறாள். 'ஒன்ஸ்மோர்' 'ஒன்ஸ்மோர்' (நாடகத்தால் ஏற்பட்ட அநுபவத்தை எப்படி மறக்க முடியும்?) என்ற ஒரேகூச்சல். நித்திய மூர்த்தி ஐயர் கொண்டுவந்திருக்கின்ற ரோஜா மாலை ஜோராபாயின் கழுத்தில்

போடப்பட்டது. அச்சமயம் ஒரே கரகோஷம்!......................
ஆட்டம் முடிந்துவிட்டது.

நித்திய மூர்த்தி ஐயர் நேராக ஸ்டேஜ்க்குள் போனார். முன்னமேயே ஐயரது கருத்தை அறிந்துகொண் டிருந்த ஜோராபாய் அவரை நோக்கி, 'வாருங்கள்! என்? ரிஸர்வ் ஸீட்டில் உட்காருகிறது தானே? இன்று தங்களுக்கு மிகுந்த ஸ்ரமம்' என்று கூறி அவரை வரவேற்றாள். 'பரவாயில்லை. ரொம்ப பஸ்ட் கிளாஸா டான்ஸ் பண்ணினாயே!' உடம்பு வலிக்கிறதா?" என்றார் ஐயர். இம்மாதிரி சம்பாஷணைகளிலிருந்து ஐயர் 'காதல்' சம்பாஷணைகளி லிறங்கினார்.

'கண்ணே ஜோரா! உன்னைக் கண்டது முதல் என் மனம் பாதரஸம்போலத் தத்தளித்துக்கொண் டிருக்கிறது. உன் மேல் நான் காத லானேன்' என்றார் ஐயர். 'மோஹனா! அழகுத் தேவரே! என் மனமும் தங்களைக் கண்டது முதல் இன்புளுயன்ஸா ஜுரத்தில் மார்பு அடித்துக் கொள்ளுகிற மாதிரி அடித்துக் கொண் டிருக்கிறது. காதலானேன் சாமி! கலந்தணைவாயென் சாமி! உன்மேல்........' என்று பாட்டுடன் ஒரு அடி அடித்தாள் ஜோராபாய். அவ்வளவு தான் தாமதம்? பரஸ்பரம் ஒருவருக் கொருவர் முத்தமாரி பொழிந்து கொண்டனர். புனிதமான காதலில் ஈடுபட்டிருக்கும் ஐயர் முகத்தில் பௌடர் ஒட்டிக்கொண்டு அவரை சாம்பல் பூசிக்கொண்ட கருங்குரங்குபோல் ஆக்கியதைக் கண்டு ஜோரா நகைத்தாள். நிற்க!

'அட பாவி! இதைப்போய்க் 'காதல்' என்று சொல்லுகிறாயே? உனக்கு மூளை இருக்கிறதா?" என்று சிலர் கேட்கலாம். தயவு செய்து பின் வரும் எழுத்துக்களைக் கவனமாக ஊன்றி ஊன்றி ஆராய்ச்சியுடன் படியுங்கள். எனக்குப் பம்பாய் வாசி யொருவர் சமீபத்தில் நண்பரானார். ஒரு சமயம் காதலின் தத்துவத்தைப்பற்றி நான் அவரிடம் பேச நேர்ந்தது. அவர் சொன்னார்:—'உனக்குக் காம எண்ணம் உண்டாகும்போ தெல்லாம் ஒரு பெண்ணைக் கலந்து உன்னிச்சையைப் பூர்த்தி செய்து கொள். இதுதான் காதல் முறை. இதில் பாவமே கிடையாது.' இதைக் கேட்டவுடன் என் புதிய நண்பரது காதல் தத்துவம் இத்தகையது என்று தெரிந்து திகைத்துப் போனேன். இந் நண்பரும் ஒரு மலையாளத்து ஐயர்தான். இதே தத்துவம்தான் நமது நித்தியமூர்த்தி ஐயரின் தத்துவமும். ஆகவே கதா நாயகனது காதல் தத்துவத்திற்கும் அடியேனுக்கும் யாதொரு சம்பந்தமும் கிடையாது என்பதை நண்பர்கள் தெரிந்து கொள்வார்களாக!

*** *** ***

திருநிறைச் செல்வி ஜோராபாயும், திருவாளர் நித்தியமூர்த்தி ஐயரும் மூன்று மாத காலமாக இல்லற வாழ்க்கையை இனிதே

நடாத்தி வரலானுர்கள். (சபாஷ்! தமிழ் நடை! பஹுத் அச்சா! இந்தச் சனியன் பிடித்த பேனு இம் மாதிரியே எழுதிக்கொண்டு போக மாட்டேனென்கிறதே! நான் என்ன செய்யட்டும்?) திடீரென்று ஜோராபாய்க்கு இல்லற வாழ்க்கையில் வெறுப்புத் தோன்றியது. ஐயரோ கொஞ்ச வருகிறுர். ஒரு நாள ஜோராபாயின் துறவறக் கொள்கை மிகவும் முற்றிப் போய் விட்டது. உடனே திருவலகினுல் மனமாற சிங்காரித்தாள் நமது ஐயரை. ஐயர் சற்று முறைத்தார்! அச் சமயம் ஜோராபாயின் பக்கத்தி லிருந்த சாந்தாகாரமான பிராணி யொருவர் ஐயரின் வாயைத் தடவிக் கொடுத்து இரண்டு பற்களைக் கீழே உதிரும்படிச் செய்தார். மறு நிமிடமே ஐயர் ஜோராவின் வீட்டி லிருந்து உதைத்து வெளியில் தள்ளப் பட்டார்.



நமது ஐயர் இப்போது ‘பட்டினத்தார்’ ஆனுர். காதற்றஊசி கூட இப்போது அவர் கையில் கிடையாது. ‘கோவண மூர்த்திச் சாமி’ என்று அம் பாள்புர வாசிகள் அவரை அழைத்து வருகின்றனர். அவ்வூர்க் குறும்புச் சிறுவர்களில் பலர் ‘மலைப்பிஞ்சுகளை’ச் சாமியார் மீது எறிந்து அவரது சாந்தத்தைச் சோதித்து வருகிறுர்கள்.

அட கர்மமே! காதலை இம்மாதிரி கண்ருவியாகவா முடிக்க வேண்டும்?

சன்மானம்

எழுதும் ஆற்றலுள்ள அன்பர்கள் ‘தமிழர’சில் பிரசுரிப்பதற்கு நகைச்சுவை மிகுந்த கட்டுரைகளையும், இனிமை வாய்ந்த சிறு கதைகளையும், விகடத் துணுக்குகளையும் அனுப்பலாம். அவற்றைப் பரிசோதித்து, தகுதியானவைகளுக்குச் சன்மானம் அளிக்கப்படும்.

* பிரார்த்தனைக் குறிப்பு

[திரு. அ. சிதம்பரநாதன் செட்டியார் பி. ஏ.,]

1. எண்ணரிய அரும்பொருளே! என்னருமை யப்பாவே!
தண்ணருளே திருவுருவாந் தன்மையனே! தனியரசே!
உண்ணின்றே யுதவிடவே உன்பிள்ளை யடியேற்குக்
கண்ணியதாந் திருப்பாதம் எய்திடலாம் ஆற்றினையே.

2. பொய்ம்மையே பெரிதுடையேன்; என்பொய்க்கும் அளவுண்டோ?
மெய்ம்மையே மெய்வடிவாம் மேலோனே! மெய்யோனே!
பொய்யெல்லாம் போனுற்றுன் மெய்யனினைக் கண்டிடலாம்;
பொய்யெல்லாம் போக்கிடவே புனிதாநீ புரிந்திடுவாய்.

3. யான்செய்த செய்கின்ற வஞ்சனைக்கும் அளவுண்டோ?
யான்சொன்ன சொல்கின்ற கோளுக்கும் அளவுண்டோ?
யான்பிறரைத் தூற்றியுமே ஏசியுமே பேசியதும்
யான்பிறர்வாய்ப் பிதற்றலைத்தான் கேட்டதுவும் அளவுண்டோ?

4. யானினிமேல் வஞ்சனையைக் கிஞ்சித்துஞ் செய்யாமே
யானினிமேல் கோளுரையைக் கனவிலுமே நினையாமே
யானினிமேல் ஒருவரையுந் தூற்றுமே ஏசாமே
யானினிமேல் பிதற்றலைத்தான் கேளாமே யருளிடுவாய்.

5. சிந்தைக்கும் வாக்கிற்கும் எட்டாத மேலோனே?
சிந்தையிலும் வாக்காலும் மெய்யாலும் வணங்கிடவே
சிந்தைதனில் வந்திடுவை யென்பதனில் ஐயமுண்டோ?
சிந்தைதனைத் தூயதுவாய் வைத்திடவே யருள்புரிவாய்.

6. வேண்டுவதை நீயறிவாய்; யான்சொல்ல வேண்டுமோதான்?
வேண்டுவதெல் லாம்விரும்பி யளித்திடுவாய் ஐயமில்லை;
வேண்டுமுறை யானறியேன், அம்முறையும் உணர்த்திடுவாய்;
வேண்டுவோர்க்கு வேண்டியாங்கே யளிக்கவல்ல வள்ளனீயே.

7. என்பிறப்பை யறுத்திடுவாய்! அதற்குரிய வழியருள்வாய்;
என்பிறப்பிங் தொன்றுதான் பலவோதான் சிலவோதான்?

---

* இது திரு. செட்டியாரவர்களுடைய தினசரி பிரார்த்தனைக் குறிப்பிலிருந்து எடுத்து வெளியிடப்படுகிறது.

என்பிறப்பாம் இப்பிறப்பின் முன்னர்பல பிறப்புண்டோ?
என்பிறப்பு நேரேதான் நின்னின்றும் இழிந்ததுவோ?

8. அல்லாமல் அனாதியதாந் தன்மையதோ, அறியலாமோ?
கல்லாத நானறிய வல்லேனே? அல்லனல்லன்;
எல்லாரும் அறிந்திடுவான் உலகதனில் ஒளியோனீ
சொல்லிட்ட தாக்சொல்லும் சொல்லெல்லாம் பலபடித்தே.

9. ஆதலினால் அடியனாவான் அறிந்திடத்தான் முயலுவதும்,
சோதனைக்கப் பாலாமுன் திறமும்மென் றிறமும்மென்
வீதலையே செய்திடுமவ் விலங்கினதன் திண்திறமும்
நோதலையே மேற்கொண்டு நோக்குவதும் பயனின்றே.

10. பயனென்கொல் அவ்வறிவால், பயன்படுத்த அருளாயேல்;
பயனுண்டே பயனுண்டு, பிறரெல்லாந் தானேபோல்
நயமாகப் பாவித்தே நடந்தாலே நடந்தாலே;
ஜெயமெல்லாம் நின்னருளே; ஜெயங்கொடுப்பாய் ஜெயவீர.

வைதீகர் கொடுமை



அடே பிரஷ்டப் பயலே! எட்டிப் போடா! தலைவர்களெல்லாம் தீண்டப்படாதவர்களைக் கோயிலுக்குள் விட்டுடுங்கோனு ஏகமா கத்ராளே! சுத்த அசட்டுப் பிண்டங்கள்! இவர்களுக்கென்னமோ கேடு காலந்தான் வந்திருக்கு! பிரஷ்டப் பயலே! தூரப் போடா!

கடற்கரை சம்பாஷணை

(மே. மா)

(சென்ற மாதத் தொடர்ச்சி)

நான்:—இலிங்கமானது எந்தக் குறியையும் குறிக்காது என்று சொல்லுகின்றீர்கள். அப்படியானல் குழவியைப் போல் ஒரு கல்லின் ரூபத்தை ஆலயங்களில் அமர்த்தி யிருப்பது எதைக் குறிக்கின்றது? அக்கல்லின் வடிவம் ஒரு குறியாக மாட்டாதா? தாங்கள் குறி என்பதை மனிதவடிவத்தை என்று பொருள் கொள்ள முடியுமா?

சந்நியாசி:—இலிங்க வடிவமானது எந்தக் குறியையும் குறிக்க மாட்டாது. அநேக ஆண்டுகளாகத் தமிழர்களால் அதிலும் சிறந்த அறிவாளிகளும் ஞானிகளுமாய் விளங்கியவர்களால் அனுஷ்டிக்கப் பட்ட விதியே லிங்க வழிபாடு. அவர்களைக் காட்டிலும் நீர் அறிவாளியல்ல. தவிர நீர் உம்முடைய யுக்தியையும் அறிவையும் கொண்டு பேசுகிறீர். ஆதலால் உமது அறிவை யான் பொருட்படுத்த மாட்டேன். சாத்திரங்களைக் கொண்டு பேச வேண்டும். சாத்திரத்திற்கு விரோதமாய்ப் பேசக் கூடாது. சாத்திர விரோதமாய்ப் பேசும் உமக்கு அறிவேது.

நான்:—சாமிகளே, கோபமாய்ப் பேச வேண்டாம். என்னைச் சொன்ன வார்த்தைகளுக்குத் தாங்களே உரியவராவீர்கள். சாத்திரம் படிக்கவில்லை என்று சொன்னல் அதில் எனக்குக் கோபமில்லை. எனக்குத் தெரியாதவைகளை உங்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்ள அவாவுகிறேன். சாத்திரத்தைப் படித்துச் சகல விஷயங்களையும் தெரிந்துகொண் டிருக்கும் தாங்கள் என்போலொத்தவர்களுக்கு விளங்குமாறு சொல்லி மனதை நம்பும்படிச் செய்யவேண்டியது கடமை யல்லவா? எனக்குச் சாத்திரம் வேண்டாம். யான் கேட்ட வினுவிற்குத் தக்க சமாதானம் கூறும்படி மீண்டும் தங்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன். சாத்திரம் படித்ததாய்க் கூறும் நீங்கள் இக்கேள்விக்குப் பதில் சொல்லாமல் கோபித்துக் கொள்வதுதான் சாத்திரம் படித்ததின் சாரம் போலும்? (சாத்திரங்களில் கூறும் பரிபாஷைகளையும் தர்க்கங்களையும் மனனம் செய்து வைத்துக் கொண்டு தங்களிடம்வரும் சீடர்களுக்குப் பாடம் சொல்லிப் பல அர்த்தங்களால் விளக்கி அச்சாத்திரத்தின் கருத்துக்கு ஒத்தவாறு போதித்

துக் கொண்டுவரும் இவர்கள் நம்பிக்கையை முதலில் வைத்து அந்நம்பிக்கை யளவில் போதித்து வரப்பட்டவர்க ளாதலால் தங்களுக்குத் தெரியாத விஷயத்தைக் கேட்டால் கோபம் வருகின்றது.)

சந்நியாசி:—சாத்திரம் படிக்காதவர்கள் அறிவீனர்கள். அவர்கள் கேட்கும் கேள்விகளுக்குப் பதில் சொல்ல வேண்டியதில்லை. உமக்குக் கூறவேண்டிய பதிலை முதலிலேயே கூறிவிட்டேன். இனிக் கூற வேண்டியதில்லை. (இவ்வாறு சொன்னவுடன் மற்றசாமிகள் 'பொழுது போய் விட்டது. எங்களுக்காக மடத்தில் காத்துக்கொண் டிருப்பார்கள். போகலாம்' எனச் சொன்னதால் நாங்கள் எழுந்து சென்னை, சூளை ஆனந்தாஸ்ரமத்திற்குப் புறப்பட்டோம்.)

நான்:—தங்களுக்கு இலிங்கத்தின் தத்துவங்கள் தெரியா விட்டால் அதற்காகக் கோபித்துக் கொள்ளலாகாது. என்னறிவுக்கு எட்டியதை நான் கூறுகிறேன். தங்களுக்குப் பிடித்தால் எடுத்துக் கொள்ளுங்கள். இல்லையேல் தள்ளிவிடுங்கள். இலிங்கம் என்பது ஒவ்வொரு மனிதர்களின் மூளையின் கீழ், பிரகாசம் தங்கிய குழவி வடிவமாய் இருக்கின்றது. அந்தப் பிரகாசத்தை மூலமாகக் கொண்டே சரீரமுதல் சகலமும் நடைபெறுகின்றன. அந்தப் பிரகாசத்தை விருத்தி செய்வது எதுவோ அதனையே யோகம் என்பது. அத்தகைய யோகங்களில் ராஜயோகம் ஒன்றும் சிவயோகம் மற்றொன்றுமாகும். ராஜயோகம் ஆரியர்களுடையது. சிவயோகம் தமிழர்களுடையது. இதன் விஷயங்களை விஸ்தாரமாய் 'ஜீவரகசியம்' என்னும் நூலில் யான் எழுதி இருக்கின்றேன். நமது சிதம்பரசாமிகளிடம் அப்புத்தகம் இருக்கின்றது. வேண்டுமானால் வாசித்துப் பாருங்கள்?

சந்நியாசி:—உம்முடைய ஆராய்ச்சியும் நீர் சொல்லுவதும் எனக்குப் பிடிக்காது. சாத்திரம் கூறியதாய்ச் சொல்லாமல் நீர் கூறுவதாய்ச் சொல்லுவது முட்டாள் தனம். உம்போலுள்ள முட்டாள்கள் பேச்சை யார் கேட்கப்போகிறார்? என்போலொத்த சாத்திரம் படித்தவர்கள் சொல்லுவதுதான் சரியானது?

நான்:—அப்படியானால் நீர் உண்மையில் படித்த சாமியாரானால் பத்திரிகையில் எழுத முன் வாரும். நானும் அதற்குப் பதில் எழுதுகிறேன். உலகம் விஷயத்தை யுணர்ந்து உமது அறிவைப் புகழட்டும் என்று சொல்லும்போது சிதம்பரசாமிகள் பேச்சு அதிகம் வேண்டாம் என்றார். இதற்குள் கார் சென்னை, சூளை ஆனந்தாஸ்ரம மடத்திற்கு வந்து சேர்ந்தது. உடனே சாமிகளே எனக்கு உங்களைப்போல் அவ்வளவு கோபம் இல்லை. ஆனாலும் என்மேல் கோபத்தை விடுங்கள் என்றேன்.

சந்நியாசி:—தாங்கள் எனக்கு வேதத்தை மொழி பெயர்க்கும் வகையில் வேண்டிய சகாயம் செய்ய வேண்டும் என்றார். (இதோடு சம்பாஷணை முடிந்தது.)

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
19 JUN 1933
MADRAS



உணவு உண்ணும் விதங்கள்

'யான் கொள்ளைக்காரன் ஆனதேன்?'

[ஜீவா]

(சென்ற மாதத் தொடர்ச்சி)

கொள்ளைக்காரத் தலைவன் முதலில் எங்களைக் கண்டதும் புன்முறுவல் கொண்டா னாயினும், சமீபத்தில் எங்களைக் கண்டதும் அவன் முகம் மாறுத லடைந்தது. அம்முக மாறுதலி லிருந்து அவன் எங்கள் தோற்றத்தைக் கண்டு ஏதோ முடிவு செய்து கொண்டா னென்று தெரிந்தது. சிறிது நேரம் அங்கு அமைதி நிலவி யிருந்தது. அம்முரட்டு ஆள்கள் தலைவன் கட்டளையை எதிர் பார்த்தவாறு நின்றிருந்தார்கள். நாங்கள் அவன் என்ன சொல்லுவானோ என்று ஏங்கி யிருந்தோம்.

பின்னர், கொள்ளைக்காரத் தலைவன் எங்களை நோக்கி, 'இன்று உங்களைக் காண நேர்ந்தது குறித்து மகிழ்கிறேன். ஆனால் நீங்கள் என்னையும் என் கூட்டத்தாரையும் கண்டு அச்சங்கொண் டிருக்கிறீர்கள் என்பது எனக்குத் தெரியும். எதற்காக நீங்கள் இங்குக் கொண்டு வரப்பட்டீர்கள் என்பதையும் அறிய ஆவலுள்ளவர்களாய் இருக்கிறீர்கள் என்பதையும் நான் அறிவேன். அதை இன்னுஞ் சில நிமிடங்களுக்குள் நீங்கள் அறிவீர்கள். இப்போது நீங்கள் பசியாலும், நெடுந்தூரம் நடந்த களைப்பாலும் வாடி யிருக்கிறீர்கள். ஆகவே முதலில் நீங்கள் இங்குச் சிறிது உணவு அருந்திக் களைப்பாறுங்கள். பிறகு பேசுவோம்' என்று கூறித் தன் ஆட்களைக் கடைக் கணித்தான்.

அவன் குறிப்புணர்ந்த இருவர் பேசா மடந்தைபோல் வாய் திறவாது நின்றிருந்த எங்களை வேறோர் இடத்து அழைத்துச் சென்றனர். தலைவன் பேசிய வார்த்தையி லிருந்து எனக்கும் என் நண்பர்களுக்கும் சிறிது துணிபு பிறந்தது. எனவே, நாங்கள் அவன் விருப்பப்படியே ஆட்களுடன் சென்று கைகால்களைக் கழுவிக்கொண்டு அவர்களால் படைக்கப்பட்ட உணவை யருந்தினோம். அவ்வுணவு வகையோடு பழ வகைகளும் ஏராளமாக எங்களுக்குப் பரிமாறப்பட்டன. நாங்கள் நல்லுணவு அருந்திக் களை தீர்ந்த பின், மீண்டும் தலைவ னிருக்கு மிடஞ் சென்றோம். எங்களுக்கு உட்கார ஆசன மளிக்கப்பட்டது.

'யான் கொள்ளைக்கார ஞனதேன்?'

நாங்கள் எங்களுக்கு இடப்பட்ட ஆசனங்களில் அமர்ந்ததும், கொள்ளைக்காரர்கள் தலைவன் புன்னகை பூத்த முகத்தோடு எங்களை நோக்கி 'ஐயன்மீர்! தகுதி வாய்ந்த நீங்கள் ஏழையேனது சிறு குடிலுக்கு விருந்தினராய் அமைந்தது எனது பெரும்பாக்கியமே யாகும். வழி மறித்துப் பயமுறுத்தலோடு இங்கு நீங்கள் கொண்டு வரப்பட்ட தொன்றே குறையாக உளது. அதனாலேயே நீங்கள் இன்னும் மனக் கலக்க மடைந்தீர்கள். நீங்கள் இங்குக் கொண்டு வரப்பட்டதன் நோக்கத்தை யறிந்தீர்களானால் என்மீது கோபங் கொள்ள மாட்டீர்க ளென்று நம்புகிறேன். நான் இப்போது கூறப்போகும் எனது வரலாற்றி லிருந்து, அந்நோக்கம் உங்களுக்கு இனிது புலப்படும். நான் ஒரு தகுதி வாய்ந்த பெருங் குடும்பத்தில் பிறந்தவன். எனது சொந்தவூர் திருநெல்வேலி யாகும். என் தந்தையார் இயற்கையிலேயே பெருஞ் செல்வந்தரா யிருந்ததோடு, டிபுடி கலெக்டர் உத்தியோகத்தை வகித்து வந்தார். யான் கல்லூரியில் உயர்தரக் கல்வி பயின்று வந்தேன். எனக்குத் தங்கை யொருத்தி யிருந்தாள். அவள் உற்ற பருவத்தை யடையு முன்னரே, என் தந்தை அவளை எங்கள் நெருங்கிய உறவினரில் ஒருவரான பண்ணையாருக்கு வதுவை செய்து வைத்தார். எனவே எனது தந்தையின் பெருஞ் செல்வத்துக்கு யான் ஒருவனே உரிமை யுடையவனு யிருந்தேன். யான் கருவிலேயே திரு வுற்றமையால், இதுவரை துன்ப மென்பதையே அறியாத நிலையில் வளர்ந்து வந்தேன். எங்கள் மாளிகையை அடுத்து ஒரு சிறு பங்களா இருந்தது. அதில் எனது கல்லூரித் தலைவர் வசித்து வந்தார். அவர் சமீபத்திலேயே திருச்சியி லிருந்து இங்கு மாற்றப்பட் டிருந்தார். அவர் பார்ப்பன வகுப்பைச் சேர்ந்தவர். அவருக்கும் எனது தந்தைக்கும் நெருங்கிய நட்பு இருந்து வந்தது. யானும் அவர் எனது கல்லூரித் தலைவர் என்ற முறையில் அவரோடு பழகி வந்தேன். யான் கல்வியில் ஊக்க முற்றிருப்பதைக் கண்டு என்னிடம் மிகுந்த அன்பு கொண்டார். யானும் அவர் என்மீது பரிவுகொண் டிருப்பதைக் கண்டு மிக மரியாதையோடு நடந்து வந்தேன். கல்லூரிக்குச் செல்லும் நேரந் தவிர மற்ற காலங்களில் அவர் மாளிகைக்குச் சென்று, அவரோடு அளவளாவி மகிழ்ந்து அவருக்கு ஆவன செய்து வருவேன். அவரும் எனக்குக் கடினமான பாடங்களைச் சொல்லிக் கொடுப்பார். இவ்வாறாக நாங்கள் பழகி வந்தும், எங்கள் தொடர்பு புளியம்பழம் போலவே இருந்தது. அவர் பொதுவாக நற்குணமுடையவராக இருந்தாலும் அவருடைய போக்கும், செயலும் குறுகிய நோக்கமுடையதா யிருந்தது. அவர் மாளிகையின் வெளிப்புறத்துள்ள மெத்தைப் படிகளின் வழியாகவே, மேன்மாடியி லிருக்கும் அவரது அறைக்கு வரும்படிக் கட்டளை யிட்டிருந்தார். அவர் அறையை விட்டு அப்புறம் இப்புறம் பார்த்தாலும் என்னை மிகவும் கடிந்து கொள்வார். அவரோடு ஓராண்டாக நான் பழகி வந்தும் அதன் இரகசியம் எனக்குத்

தெரியா திருந்தது. எனக்கு அப்போது வயது பதினெட் டிருக்கும். இருந்தும், நான் என் தாய் தந்தையர்களால் செல்வமாக வளர்க்கப்படுவதும், யான் கலாசாலையில் படிப்பதும் தவிர, வேறு உலகானுபவ மொன்றும் எனக்குத் தெரியாது. பார்ப்பனர், சூத்திரர் என்ற பாகுபாடு கொண்டு இவ்வாறு அவர் நடப்பதாக நான் நினைத்துக் கொண்டேன்.

விதவைப் பெண்ணோடு வெளியேற்றம்

இங்ஙன மிருக்க, நான் பி. ஏ. தேர்வுக்குப் (Examination) போக வேண்டிய காலம். ஒரு நாள் மாலை நான் என் தலைமையாசிரியர் மாளிகைக்கு வழக்கம் போல் சென்றேன். படிகளைக் கடந்து மேன்மாடியி லுள்ள அவர் அறையை அடைந்த யான், சிறிது மூடப்பட்ட கதவைத் திறந்து உட்சென் றேன். உடனே மின்சாரப் பொறியால் தாக்குண்டவன்போல் உள் வைத்த காலை பின்னுக் கிழுத்தேன். என்? அங்கு யான் கண்ட காட்சி யாது? என்று நீங்கள் வினவலாம். அவ்வறையில் தலைமை யாசிரியர் இல்லை. அதற்குப் பதிலாக ஒரு மங்கை காணப்பட்டாள். அவளுக்குப் பதினாறு வயதிருக்கும். அவளது தோற்றம் யாவரையும் வசீகரிக் கக் கூடியதா யிருந்தது. அவள் யாரென எனக்குத் தெரியவில்லை. இதுவரை அவளை யான் அங்குக் கண்டதே கிடை யாது. எனவே, ஒரு இளம் பெண் இருக்கு மிடத்துக்கு யௌவன பருவத் தினனான யான் சென்றது தவறென்று எண்ணி வெளி வருகையில், 'என்ன? நீங்களா? வாருங்கள் உள்ளே. என் தந்தை வெளிச் சென்றிருக்கிறார். வருவ தற்குச் சிறிது நேரஞ் செல்லும். நீங்கள் தயவு செய்து உள்ளே வந்து உட்காருங்கள்' என்று உள்ளிருந்த மங்கை சொல்லியது என் காதில் விழுந்தது. நான், 'இல்லையம்மா! நான் சென்று அவர் வந்த பிறகு வருகிறேன். அவர் வழக்கம் போல் இருப்பாரென்று நினைந்து உள்ளே வந்து விட்டேன். மன்னிக்கவும்' என்று சொல்லித் திரும்பினேன். மீண்டும் அப் பெண்மணி 'அது பற்றிக் கவலை வேண்டாம். நீங்கள் சற்று இருங்கள். என் தந்தையார் வந்து விடுவார். நீங்கள் என்னை இதுவரை தெரிந்துகொண் டிராவிட்டாலும், நான் உங்களை நெடுநாள் கண்டிருப்பதுபோல் பேசுவது உங்களுக்கு அதிசயத் தைத் தரும். நாங்கள் இவ்வூருக்கு வந்தது முதலாகவே நான் உங்களை



யறிவேன். என் தந்தை உங்களுக்கு இட்டிருக்கும் கட்டளையின் இரகசியம் இப்போது உங்களுக்கு அநேகமாக விளங்கி யிருக்குமென்று எண்ணுகிறேன். தயவு செய்து உள்ளே வந்து உட்காருங்கள். பயப்பட வேண்டாம். என் தந்தை இதற்குள் வரமாட்டார். என் தாயும் கீழே வீட்டு வேலைகளைக் கவனித்துக்கொண் டிருக்கிறாள். நீண்ட நாளாக இவ்வித சந்தர்ப்பத்தை எதிர்பார்த் திருந்தேன். என்னைச் சற்று தலை நிமிர்ந்து பாருங்கள். எனது அலங்கோல நிலை உங்கள் மனத்தை உருக்கு மென்பதில் ஐயமில்லை. இது எங்கள் மரபுக்குப் பரம்பரையாகக் கொடுக்கப் பெறும் சீதனப் பொருளாகும். யான் எட்டாவது வயதிலேயே விதவைத் தன்மையை எய்தினேன். தீவினை வயத்தால் யான் மாமியார் வீட்டி லில்லாது தாய் வீட்டில் இருந்தாலும் சிறையில் வைக்கப்பட் டிருக்கிறேன் என்று கூறில் மிகையாகாது. ஐயகோ! யான் படும் துயரை எவ்விதம் விவரிப்பேன். உங்களை முதன் முதல் நான் கண்டபோது தங்கள் அழகிய வதனம் என் துன்ப விருளை நீக்கும்பரிதி எனத் தெரிவித்தது. அப்போதே தங்களை என் மனத்தில் சிறைப்படுத்தினேன். அவ்வித தன்மை வாய்ந்த என்னை இக்கொடுஞ் சிறையி லிருந்து விடுவிக்க வேண்டுமென்று தங்களை மன்றாடிக் கேட்டுக் கொள்ளுகிறேன்' என்று கூறி முடித்தாள்.

அவள் கண்களி லிருந்து நீர் ஆறாகப் பெருகியது. இதைக் கேட்டதும் எனக்கு ஒன்றும் விளங்கவில்லை. பார்ப்பனர் தம் பெண்களுக்கு இளமையிலேயே விவாகஞ் செய்வதையும், அதனால் பல துன்பங்கள் விளைவதையும் நான் பலர் வாயிலாகக் கேட்டிருந்தாலும், இவ்வநுபவம் என்னைக் கலக்கி விட்டது. என் உள்ளத்தில் பல எண்ணங்கள் தோன்ற லாயின. கைம்மை நிலையை அடைந்துள்ள அக்காரிகைக்கு எவ்விதத்தில் உதவி செய்வது? சிறையி லிருந்து விடுவிக்க வேண்டும் என்று அவள் சொல் வதன் பொருளென்ன? என்றிவ்வா றெல்லாம் சிந்தித்துக் கடைசியில் அவள் சொல்லும் வண்ணஞ் செய்வதென்றும், அதனால் என்ன துன்பம் வரினும் தயங்குவதில்லை யென்றும் தீர்மானித்தேன். சுருக்கமாகச் சொல்லுமிடத்து, யான் அவளோடு கலந்து ஆலோசித்து ஒரு முடிவு செய்து கொண்டேன். என் உயர்தரக் கல்விக்கு அத்தோடு முற்றுப் புள்ளி வைக்கப்பட்டது. யான் ஒரு நாள் என் தந்தையிடம் நான் தலைமை யாசிரியர் மகளை விவாகஞ்செய்து கொள்ள எண்ணுவதாகச் சொன்னேன். அவர் அது தகுதியற்றதென்று சொல்லி என்னைக் கண்டித்தார். எனவே, யான் எங்கள் முடிவுப்படி, சிறிது பொருளெடுத்துக் கொண்டு ஒரு நாளிரவு யாருக்குந் தெரியாமல் வெளிக் கிளம்பி, ரயிலடிக்குச் சென்று ரயிலேறித் தூத்துக்குடியை அடைந்து ஒரு வீட்டில் குடியேறினோம். நாங்கள் வெளியேறிய விஷயம், திருநெல்வேலி முழுதும் காட்டுத் தீபோல் பரவி விட்டது. என் தந்தை எங்களைப் பல விடங்களிலும் தேடினர். தலைமை யாசிரியர் தம் குடும்பத்துக்கு இழிவு வந்த

தாக நினைத்து, வெளியிலும் வராது மாளிகையிலேயே அடைபட்டிருந்த தாகத் தெரிந்தது. பின்னர் என் தந்தை நாங்கள் இருக்குமிடம் அறிந்து வந்து, என்னைத் தன்னோடு வரும்படி யழைத்ததோடு, யான் இவ்வாறு ஒரு பார்ப்பன விதவைப் பெண்ணோடு வெளியேறியது அடாத செயலென்றுங் கூறினர். அப்போதும் யான், 'தந்தையே! நான் கொடுந் தன்மை வாய்ந்ததான விதவை நிலையால் வருந்தி யிருந்த அப்பெண்ணைக் காப்பாற்றுவதாகவும், அவளோடு கூடி வாழ்வதாகவும் வாக்குறுதி யளித்து விட்டேன். ஆதலால் தாங்கள் அப்பெண்ணை எனக்கு விவாகஞ் செய்து வைப்பதானல் நான் தங்களுடன் வரத் தடையில்லை' என்று கூறினேன். அதற்கு என் தந்தை, 'அது முடியாத காரியம். பி. ஏ. தேர்வில் நீ தேறியவுடன் உனக்கு நம் குலத்தில் அழகும் செல்வமும் வாய்ந்த ஒரு பெண்ணை விவாகஞ் செய்ய இருந்தேன். நீ இதற்குள் இவ்வித தகாத செயலில் ஈடுபட்டு உன் கல்வியைக் குழிதோண்டி புதைத்தாய். இப்போதும் ஒன்றும் மிஞ்சி விடவில்லை. நான் சொல்லும் வார்த்தையைக் கேட்டு இப்பெண்ணை விட்டு விட்டு என்னோடு வீட்டுக்கு வா. உடனே விவாகஞ் செய்து வைக்கிறேன்' என்று நயந்து கூறினர். அபலைப் பெண்ணை நடுத்தெருவில் விட்டு விட்டுத் தன்னோடு வரும்படிச் சொன்ன என் தந்தையின் கொடிய உள்ளத்தை என்னென்பது! எனவே, நான் ஆத்திரத்தோடு, 'என் அருமைத் தந்தையே! பள்ளத்திலிருந்து கை தூக்கிவிட்ட பெண்ணை மீண்டும் படுகுழியில் தள்ளிவிட்டு-நடுத்தெருவில் நிராதரவாக விட்டு விட்டு வரும்படிச் சொல்லத் தங்கள் மனம் எவ்வாறு துணிந்தது? ஐயோ! நான் அவளை விட்டு விட்டால், அவள் தாய் தந்தையரோ உறவினரோ அவளைச் சேர்த்துக் கொள்வார்களா? அவள் கதி அப்புறம் என்னுகும்! அந்தோ! அந்நிலையை நினைந்து பார்த்தாலும் என் நெஞ்சந் துடிக்கிறதே! (இந்து சமூகத்தில் இளம் பருவமுடைய விதவைக் கன்னிப் பெண்கள் அடையும் துன்பங்களை யான் எழுதிய 'யான் ஏன் பெண்ணுய்ப் பிறந்தேன்?' என்னும் நூலில் விவரித்து இருக்கிறேன்.) நீர் என்ன சொன்னுலும் அவளை விட்டு மட்டும் வரமாட்டேன்' என்று அழுத்தமாக உறுதி கூறினேன். இதைக் கேட்டு என் தந்தை கோபங்கொண்டு, 'அப்படியா! வெகு நியாயங் கற்றவனடா இவன்? யான் பிள்ளை யாச்சே என்று நயந்து கூப்பிட்டால், தலைமீது ஏறுகிருயா? நான் சொல்லுகிறபடி வந்தால் நீ நன்மை யடைவாய். இல்லையானல், உனக்கு என் சொத்தி விருந்து ஒரு செல்லாக் காசுகூடக் கிடைக்காது. என்ன சொல்லுகிருய். யோசித்துச் சொல். பின்னுல் துன்பத்தைத் தேடிக் கொள்ளாதே' என்று பயமுறுத்திக் கேட்டார். நான் உறுதியை நழுவ விடாமல் 'தங்கள் சொத்தை யிழப்பதா யிருந்தாலும், என்னை நம்பி வந்தவளைக் கை விடேன். அவளை எனக்கு விவாகஞ் செய்து வைக்க விரும்பா விட்டால் தங்கள் இச்சைப்படி செய்யலாம். தங்கள் சொத்து எனக்குப் பெரிதல்ல' என்று சொன்னேன்.

'என் தந்தைக்கு உண்டான கோபத்துக்கு அளவே யில்லை. அவர், "என் சொத்து உனக்குப் பெரிதல்லையா! அவ்வறு முண்டைதான் உனக்குப் பெரிதாக இருக்கிறாள் போலும்! அவ்விதமே வைத்துக்கொள். உன் முகத்தில் இனி நான் விழிக்க மாட்டேன். என் மகன் இறந்து விட்டானென்று நினைத்துக் கொள்ளுகிறேன்' என்று சொல்லி விட்டுத் தம்முடன் வந்தவர்களோடு விரைந்து சென்றார்.

என் தந்தை கோபித்துச் சென்றதற்கு வருந்தினேனாயினும், எனது கடமையை நினைத்து மனந் தேறினேன். எங்கள் கையில் பொருளுள்ளவரை யானும் எனது காதலியும் இன்பமாகவே வாழ்ந்து வந்தோம். இதனிடையே யான் பல இடங்களுக்குச் சென்று உத்தியோகம் பெற முயன்று வந்தேன். வருவாய்க்கு இடமேற்பட்டு விட்டால் யாங்கள் இன்பமாகக் காலங் கழிக்கலாமென்பது எனது எண்ணம். சிலர் எனக்கு உத்தியோகந் தர முன் வந்தனர். அதை என் தந்தையார் தடுத்து விட்டார் என்பது பின்னால் எனக்குத் தெரிந்தது. என் தந்தை தூத்துக்குடியில் சில ஆட்களை வைத்து என்னுடைய நடவடிக்கைகளைக் கவனித்து அப்போதைக் கப்போது தமக்குத் தெரிவிக்கும்படி ஏற்பாடு செய்திருந்ததாகவும் தெரிந்தது. என் உத்தியோக முயற்சியைத் தடுத்து விட்டால் வருவாய்க்கு வழி யில்லாமல் திண்டாடி வருந்திக் கடைசியில் அப்பார்ப்பனப் பெண்ணை விட்டு விட்டுத் தம்மிடம் அடைக்கலம் புகுவேன் என்று என் தந்தை கனக் கண்டிருந்தார் போலும். அதுவன்றி யான் பார்ப்பனப் பெண்ணை வெளியேற்றிக் கொண்டு வந்து விட்டதால், எனக்கு உத்தியோகங் கொடுக்கக் கூடாது என்று பார்ப்பன அதிகாரிகள் வஞ்சங் கொண்டனர்.

இவ்விதமாக யான் கையிலுள்ள பொருளெல்லாம் செலவாய் வருவாய்க்கு வழி யில்லாமல் வறுமை நிலை யெய்திப் பல நாள் வருந்தினேன். இச்சமயத்தில் என் காதலி கருப்பங் கொண்டாள். எனவே, எனக்குப் பொறுப்பு அதிகமாவதைக் கண்டு வெளியூருக்கு எங்கே யாகிலுஞ் சென்று பிழைக்கலா மென்று தீர்மானித்து சென்னைக்கு என் காதலியுடன் வந்தேன். இங்கும் எனக்கு உதவி செய்வாரில்லை; உத்தியோகமுங் கொடுப்பாரில்லை. என் வரலா றறிந்த ஒவ்வொருவரும் என்னை வெறுக்கலாயினர். நான் இவ்வித அனுபவத்தைப் பெற்றும், கேட்பாருக்கு என் வரலாற்றை மறைத்துச் சொல்வதில்லை. ஒரு சிறு வீட்டில் குடி யிருந்த யாங்கள் பல நாட்கள் பட்டினியால் வாடினோம். எங்கள் ஏழ்மை நிலை யறிந்தும் எங்களுக்கு யாரும் இரங்குவாரில்லை. யான் ஒவ்வொரு நாளும் யாதாயினும் வேலை கிடைக்குமா என்றலைந்து ஒன்றும் கிடைக்காது கடைசியாகச் சோர்ந்து வீடு வந்து சேர்வேன். என் வாடிய முகத்தைக் கண்டு என் காதலி வாடி நிற்பாள். யாங்கள் இருவரும் ஒருவரையொருவர் பார்த்துக் கண்ணீர் விட்டுக் கதறுவோம். இளமையி லிருந்தே செல்வத்தில் வளர்ந்து வந்த எங்களுக்கு இவ்வேழ்மை நிலை தாங்க முடியாததா

யிருந்தது. சென்னையிலும் எனக்கு உறவினர் இருந்தனர். அவர்கள் உதவியை யான் நாடியபோது என்னை வெறுத்துத் தள்ளினர். இவ்வவமானம் என்னால் பொறுக்க முடியாததாயிற்று. என் மனைவிக்கோ கருப்ப வேதனையுங் கூடச் சேர்ந்து பெருந் துன்பந் தந்தது. பசிப்பிணியையும், கருப்ப வேதனையையும் பொறுக்க முடியாது ஒரு நாளிரவு என் அருமைக் காதலி அந்தோ! இறந்தாள். இவ்வெதிர்பாரா விபத்து என்னை என்ன விதமான நிலையை அடையச் செய்திருக்குமென்று நீங்களே நினைத்துப் பாருங்கள். நான் இரவெல்லாம் என் காதலியின் பிரிவையும் திக்கற்ற எழ்மை நிலையையும் நினைந்து நினைந்து கதறி யழுதேன். என் கூக்குரலை யாருங் கேட்பா ரில்லை. என் விஷயத்தில் தெய்வமும் கண்ணற்று நின்றது. பொழுது விடிந்தது. என் மனைவியை அடக்கஞ் செய்ய என்னிடத்துப் பொருளில்லை. பலரிடத்துச் சென்றிரந்தேன். இரங்கி யீவார் யாரு மில்லை. இறுதியில் சமண சமயப் பெரியாரொருவர் பொருளுதவி செய்ததோடு, என் மனைவியை அடக்கஞ் செய்தற்கு வேண்டிய உதவிகளுஞ் செய்தார். என் அருங் காதலியை அடக்கஞ் செய்த பின், வீட்டுக்குத் திரும்ப என் மனம் இசையவில்லை. யான் வீட்டுக்குச் செல்வதற்கு அங்கு யார் இருப்பது? எங்கே செல்வதென்று தெரியாது, மிகுந்த வருத்தத்தாலும், பசி நோயாலும் தளர்ந்து தள்ளாடித் தள்ளாடிச் சென்று கொண்டிருந்தேன். அப்போது எனக்கு என் கொடிய தந்தை மீதும் மற்றும் உள்ள மக்கள் மீதும் அளவிலா கோபம் பொங்கி யெழுந்தது. அறிவுக்குப் பொருந்த மற்றதும், மூடக் கொள்கைகள் நிரம்பியதும், இரக்கங் கிஞ்சித்து மில்லாததுமான இந்து சமயத்தையும், சமூகத்தையும் அழித்து ஒழித்து விட வேண்டுமென்று ஆத்திரங் கொண்டேன்.

யான் வடக்கே திருவொற்றியூர் பக்கமாகச் சென்று கொண்டிருக்கையில் என்னெதிரில் நடுத்தர உயரமும், கம்பீரத் தோற்றமும் உடைய ஒரு மனிதர் வந்துகொண் டிருந்தார். அவர் எனது அலங்கோல நிலையைக் கண்டு இரக்கங் கொண்டவராகி, என் வரலாற்றை விசாரித்தார். அவரது முகத்தில் கருணை ததும்பி வழிவதைக்கண்ட யான், என் வரலாறு முழுவதையும் ஆதியோடந்தமாகத் தெரிவித்தேன். இவற்றை யெல்லாம் அமைதியாகக் கேட்ட அவர் என் மீது முன்னிலும் அதிக கருணை காட்டி என்னைத் தன்னோடு வரும்படி அழைத்துச் சென்றார்.

அவரே இக்கொள்ளைக் கூட்டத்தாருக்கு எனக்கு முன் தலைவராக இருந்தவர். அவர் என்னைத் தன் னிருப்பிடத்துக்கு அழைத்துச் சென்று, என் மனத் துயரைச் சாந்தப்படுத்தி, வருந்தி எனக்கு அமுதருத்தினர். பின்னர் அவர் என்னை நோக்கிப் பணக்காரர்களும், மேல் வகுப்பாரும் ஏழை மக்களைப் படுத்துங் கொடுமையைக் கண்டே தான் கொள்ளைக்காரரான தாகவும், செல்வந்தர்கள் செல்வத்தைச் சூறையாடி ஏழைகளுக்குக் கொடுப்பதே தன் தொழி லென்றும் கூறி, என்னை அவரோடு இவ்வள்ளிமலைக்கு வரும்படி அழைத்து வந்தார். முதலில் யான் அவர் கொள்ளைக்காரர் என்பதை யறிந்து அருவருப்புக் கொண்டேனாயினும், அவர் நோக்கம் விழுமிதா யிருந்ததால், அவரோடு கூட்டுறவு கொண்டு, அவர் நோக்கம் நிறைவேறுவதற்கு உதவியா யிருந்து வந்தேன். நாளடைவில் நானும் கொள்ளைக்காரனானேன் என்பதை உங்களுக்குச் சொல்ல வேண்டுவதில்லை. எங்கள் கொள்ளையில் உயிர் கொலை நிகழாது. எங்கள் கையில் சிக்கும் பணக்காரர்களுக்கும், மேல் வகுப்பாருக்கும், யான் சமூகக் கொடுமைகளை யெடுத்துக் காட்டி அவைகளை யொழிக்க வேண்டுமென்று வற்புறுத்துவது எனக்கு வழக்கமாயிற்று. உற்ற காலத்து உதவிய அப்பெரியார் என்னிடம் மிக அன்பு கொண்டு அவர் பதவிக்கு என்னை யிருத்திக் காலஞ் சென்றார். அது முதல் யான் செல்வந்தர்களுக்கும், மேல் வகுப்பாருக்கும் கால காலனாய், ஏழை யெளியவர்களுக்கு அடியவனாய் இருந்து என் கடமையைச் செய்து வருகிறேன். ஆகவே, சமூகக் கொடுமைகளை யெடுத்துக் காட்டி அவற்றை யொழித்து ஏழை யெளியவர்களையும், அபலைப் பெண்களையும் ஆனந்த வாழ்வில் திளைக்கச் செய்ய வேண்டுமென்று அறிவுறுத்துவதற்கே நீங்கள் இங்குக் கொண்டு வரப்பட்டீர்கள். ஆனல் நீங்கள் அருளுளங் கொண்டவர்கள் என்பது உங்கள் தோற்றத்திலிருந்து தெரிகிறது. எனவே, உங்களுக்கு அதிகஞ் சொல்ல வேண்டுவதில்லை. இப் பரந்த நோக்கத்தைக் கடைப்பிடித்து இந்து சமூகத்தைச் சிறப்புறச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். உங்களை இன்று காண நேர்ந்ததற்கு மிகவும் மகிழ்கிறேன். உங்களுக்குச் சிரமந் தந்ததற்கு மன்னிக்க வேண்டும். நீங்கள் சென்று வரலாம்' என்று கூறி முடித்தான்.

நாங்கள் கொள்ளைக்காரத் தலைவன் கூறிய வரலாற்றைக் கேட்டு வியப்பும், திகைப்பும், வருத்தமும் மகிழ்ச்சியும் மாறி மாறி யடைந்தோம். கடைசியில் நாங்கள் அவனுக்கு முகமன் கூறி விடைபெற்றுக்கொண்டு, எங்களை வழிமறுத்த ஆட்கள் பின் தொடர வெளியேறினேம். அங்கிருந்து நாங்கள் மேல்பாடியை அடைந்து இரண்டு நாளிருந்து பின்னர் சென்னை திரும்பினேம்.

தாசிகளும் தாசிகாந்தர்களும்

ஒரு விநோத நாடகம்

(திரு. ஏ. சோக்கலிங்கப் பிள்ளை)

(பதிப்புரிமை ஆசிரியருடையது)

சென்ற வெளியீட்டின் தொடர்ச்சி

காட்சி 5

இடம்—ஒரு தாசி வீடு.

(தாசி சிங்கார மஞ்சரியும், அவள் தாய் எத்துவல்லியும் பிரவேசம்.)

எத்துவல்லி:—மகளே! வேசியானவள், தன்னை வைத்துக் கொண்டிருப்பவன் மீது எவ்வளவு பிரீதி வைத்தவளானாலும், தன் தாயினுடைய சொல்லை மட்டும் மீறலாகாது. இது நம்முடைய குலதர்மம். நான் உனக்குப் பெற்ற தாயாவென்று சொல்லுவையோ என்னமோ? பிரதினம் நம்மிடத்திற்குப் பத்து பேர் புருஷாள் வருவதும் போவதுமாயிருப்பதால், ஏதோ சுக சாட்டியங்கள் தேகத்திலுண்டாகும். ஆனதால், தேவடியாட்களுக்குச் சந்தானம் உண்டாக மாட்டாது. உன்னை யான் வளர்த்துக் கொண்டது போலவே என்னையும் என் தாய் வளர்த்துக் கொண்டாள். ஆகையால், நம் தாசி குலத்தில் தாய் என்றால் வளர்த்ததாய் என்று அர்த்தம். அந்தப் பிராம்மணன் பணங் காசு கொடுக்கிறானா? நல்ல பாவாடை இரவிக்கை வாங்கிக் கொடுக்கிறானா? நகைகளேதேனும் பண்ணிப் போடுகிறானா? இனி அந்தப் பிராம்மணனை நம்ம வீட்டிற்கு வர வொட்ட வேண்டாம்.



சிங்காரமஞ்சரி.—நீ என்ன சொன்னாலும் அவர் விஷயத்தில் உன் வார்த்தையைக் கேளேன். அவர் மீது எனக்கு மிக்க ஆசையுண்டு. அவரால் எனக்கு நல்ல இலாபங் கிடைக்கிறது. அவருக்குக் கொடுப்பது மாதத்திற்கு ரூபா 10 தானே. அதற்குப் பதிலாக

அவர் மூலமாய்க் கிடைக்கும் பத்து பங்கு பொருளை யெண்ணி யுன் கையில் கொடுப்ப தில்லையா?

எத்துவல்லி:—அடி! உனக்கு அறியாத் தன்மை. இன்னும் உனக்கு ஒன்றுந் தெரியாது. நான் சொல்வதைக் கவனமாய்க்கேள்:

'மண்ணுலகில் மூத்தோர்சொல் வார்த்தை அமுதமென
எண்ணியென்றன் வார்த்தைசெவிக் கேற்றுவாய்-நண்ணிவரும்
பாங்காளர் கையில் பணம்பறித்து வாழ்வதல்லால்
சோங்கோடி வந்திடுதோ சொல்லுவாய்-நீங்காத
பக்குவத்தில் முன்னிருந்த பாட்டிமார் தேடிவைத்த
பொக்கிஷந்தா னுண்டோ புகலுவாய்-தக்கதொரு
வாணிபமுண்டோ சருவ மானியத்தில் நாலாறு
காணிவிளைந் தோவருது கண்மணியே-நாணமறப்
பெண்பிள்ளைப் பாடன்றிப் பேசில்நமக் காண்பிறந்த
வண்பிள்ளைப் பாடுபட்டு வந்திடுதோ-திண்புவியில்
எல்லாப் பொருளையு நாமெத்திப் பறிப்பதுவே
யல்லால் புதைய லகப்படுமோ-எல்லவர்க்கும்
பாடுவே றுண்டாக்கிப் பலகாலும் நன்மையையன்
மேடு பார்க்குந் தொழிலில் விட்டானே—
....சுந்தரஞ்சேர்
தாசிக் குடலந் தளர்ந்தபோ தென்னவரும்
வாசற் பெருக்கவரும் வாணுதலே-தேசிளமை
தன்னில் வாதுக்காகுந் தாசிவயது சென்றால்
என்னமோ மேய்ப்பா ளெனுங் கதையை-உன்னிப்பார்.'

அடி அம்மா! நான் சொன்ன புத்தியை உன் மனத்தில் வைத்து யௌவன மிருக்கும்போதே நாலு பணம் சேர்த்துக் கொண்டால் தளர்ந்த காலத்தில் பாலுஞ் சோறுஞ் சாப்பிடலாம். பக்ஷத்திற்கு மாத்திரம் புருஷனைப் பக்கத்தில் வைத்துக் கொண்டால், பசிக்குச் சோறுகுமா? தேவடியாட்கள் புருஷாள் மீது உண்மையான பிரீதி வைத்து சிநேகிப்பார்களானல், நமது குலம் அன்றைக்கே அழிந்து போம். எந்தப் புருஷனானாலும் அவனிடமிருந்து பொருளைக் கிரகிப்பதே நமது குலாசார கருமம். அதனல் பாவமில்லை. நாம் கொடுப்பது மாத்திரங் கனவிலு மில்லை. மாதத்திற்கு அறுபது ரூபா கொடுத்து உன்னைச் சோமநாதையர் வைத்துக்கொண்டிருக்கிறு ரல்லவா? அவருக்கு இந்த ஒன்று மில்லாத பிராம்மணன் சங்கதி தெரிந்தால் நன்று யிருக்குமா? அடி! என் வார்த்தையைக் கேட்டு அந்தப் பிச்சைக்காரப் பார்ப்பானை நாளைய முதல் நம்முடைய வீட்டிற்கு வர வேண்டாமென்று சொல்லி விடு. நான் சொல்வதெல்லாம் உன்னுடைய நன்மைக்கேதான் தெரிந்து கொள்.

சிங்கார:—இத்தனை நாளாக குண்டு சுப்பையர் நம்முடைய வீட்டிற்கு வருவதும் போவதுமா யிருக்கிறு ரல்லவா? சோமநாதையருக்கு எப்போதாகிலும் எவ்விதமான சந்தேகமாவது என் விஷயத்தி லுண்டாயிற்ரு? அவர் ஐயருக்கும் எனக்குந் தூது நடந்து கொண்டு வருகிரு ரானதால், குண்டு சுப்பையரைப்போல் நம்பகமானவர் யாருமில்லை யென்றும், அவரால் தனக்குக் கௌரவமிருக்கிறதென்றும், எல்லாரிடத் துஞ் சொல்லிச் சந்தோஷப்படுகிருர். அந்தப் பிராம்மணராலேயே பல பேர் எனக்குச் சிநேகமாகி என்னிடம் பேசிப் போகிருர்கள். அவர்களால், எனக்கு வேண்டும் பொருள்களுங் கிடைக்கின்றன. நீ யேன் அவரை வேண்டாமென்று சொல்ல வேண்டும்? பணத்திற்காகவே தவிர, உண்மையில் எனக்கு எவ்வித ஆசையும் சோமநாதையர் மீது இல்லாமற் போனுலும், உங்களைத் தினம் பார்க்காமற்போனல், எனக்கு உலகமே யில்லை யென்று நடிப்பதால், கட்டிக் கொண்ட பாரியாளுக்குக்கூட இவ்வளவு அன்பும் விஸ்வாசமு மிருக்க மாட்டாதென்று, என்னைப் பலவாறு சிலாகிக்கின்ருர்.

எத்துவல்லி:—இதெல்லாம் உன்னுடைய பிரயத்தனமென்று எண்ணிக் கொள்ளுகிருயோ என்ன? நான் உன்னுடைய சுகத்தைக் கோரியே எவ்வளவோ கஷ்டப்பட்டு, உன்னை யிந்த நிலைமைக்குக் கொண்டு வந்தேன். அதெப்படி யென்று கேள். அவர் எங்கேயாயினும் வெளியூருக்குப் போய் வந்த உடனே, நீ, அவ ரில்லாத நாள்களில் உனக்கிஷ்டமானவர்களுடன் பேசிக் கொண்டு சந்தோஷமாக இருக்கிருய். நான் அதை யெல்லாம் மறைத்து, நீங்கள் போன இரண்டு நாட்களாக மகள் சாப்பிடுகிறதில்லை, எழுந்திருக்க மாட்டாள், நல்ல வஸ்திரம் உடுக்காள், ஐயர் வந்து விட்டாரா என்று அடிக்கடி கேட்பாள் என்று உனக்காகச் சொல்லிக் கொண்டும் வருகிறேன். அதனுல், உன்மீது அவர் அவ்வளவு மோகங்கொண் டிருக்கிருர்.

சிங்கார:—உன்னுடைய போதனைக்குத் தக்க விதமாகவே நானும் சமயோசிதமான வார்த்தைகளைச் சொல்லிக் கொண்டு வருவதால், அவருக்கு என் மீது முழு நம்பிக்கை வந்து விட்டது. அவர் வைத்துக் கொண்ட ஆரம்பத்தில், யாராவது நம்முடைய வீட்டிற்கு வந்து, என்னேடு பேசுவதை நேராகக் கண்டால், உடனே திரும்பிப் போய் விடுவார். பிறகு, நான் குண்டு வெங்கடேசையரிடஞ் சொல்லி அவரை யழைத்துவரும்படி செய்வேன். அவர் என் மீது சந்தேகங் கொண்டதனுல், வீட்டண்டை ஒரு ஆளைக் காவல் வைத்தார். அந்த ஆளை என் சாமர்த்தியத்தால், என் சொல்லைப் போல் நடக்கும்படி வசப்படுத்திக் கொண்டதால், அவன் என்னுடைய சங்கதிக ளொன்றையும் அவரிடம் சொல்லவே

மாட்டான். என்னைப் பற்றி அவரிடம் நல்ல மாதிரியாகவே சொல்வான். அதனால் அவர் என்னைப்போ லொத்த உத்தம தாசி யில்லையென்றும், என்னை யாராகிலும் தூஷித்தால், அவர்கள் புழுத்துப் போவார்களென்றுஞ் சொல்லுவார். இப்போது அவருக்கு என்மீது எவ்வித அவ நம்பிக்கையுமில்லை. ஆனால், உண்மை தெரியாமல் நான் நோயாளியென்று, யாரோ சொன்னதைக் கேட்டு, வைத்தியனை யழைத்து மருந்து கொடுப்பித்தார். நான் அதனை வாங்கிக்கொண்டு, உடனே உள்ளே போய்ச் சாப்பிடுகிறேனென்று சொல்லி மாத்திரையை அப்புறம் எறிந்து விட்டு, வாயில் சலங் கொட்டிக்கொண்டு அவருக்கெதிரில் விழுங்குவேன். ஐயரும் மெய்தானென்று எண்ணிக் கொள்வார்.

எத்துவல்லி:—இந்தத் தந்திரோபாயமெல்லாம் முதலில் உனக்கு யார் கற்றுக் கொடுத்தது? நானுனக்குக் கற்பித்துக் கொடுத்ததால், மாதத்திற்குப் பதினைந்து நாள் தலை நோய், இடுப்பு நோய், கால் நோய், வயிற்றுவலி யென்று பற்று போட்டுக் கொண்டு, அவர் வரும்போது பாதைப்பட்டுக்கொண் டிருக்கிறாய். அவர் கொஞ்ச நேரம் உன்னைப் பார்த்து விசாரப்பட்டு வீட்டிற்குத் திரும்பின உடனே பற்றைக் கழுவி விட்டு, உதயமாகும் பரியந்தம் உனக்கிஷ்டமான சரசர்களோடு சந்தோஷமாக விருக்கிறாய். நீ எவ்வளவு சம்பாதித்தாலும் மாதத்திற்கு 100, 150 ரூபாவுக்கு மேல் சம்பாதிக்கிறதில்லை. என் காலத்தில் என்னை வைத்துக் கொண்ட முதலியார் கொடுப்பது தவிர எத்தனையோ பேரிடத்தில் மாதத்திற்கு 300, 400 ரூபாவுக்குக் குறையாமல் சம்பாதிப்பேன். ஐயர் கோர்டுக்குப் போனபிறகு, நீபகற் காலத்தில் சம்பாதிப்பது மிகக் குறைவு தானே?

சிங்கார:—ஐய ரில்லாத வேளையில் என்னிடம் வருபவர்களிடமிருந்து எதேதோ பேசித் தந்திரமாகப் பணத்தை நீ வாங்கிவிடுகிறாய். ஐயரையும் சும்மா விடுகிறாயோ? அவர் எப்போதாகிலும் சந்தோஷமாகக் கொடுத்தா லொழிய யான் கேட்கவே மாட்டேன். நீயோ பெண்ணுக்குப் புடவையில்லை, இரவிக்கையில்லை, அசலார் போட்டுக்கொண்டிருக்கும் நகைகளைப் பார்த்து மகள் ஆசைப்படுகிறாளென்றுஞ் சொல்லி, மாதத்திற்கு அவர் கொடுக்குஞ் சம்பளமன்றி மேலும் வாங்கிக் கொள்ளுகிறாய்.

எத்துவல்லி:—இதென்னடி பார்த்தாய், என் காலத்தில் நான் இன்னார் இனியார் என்று பார்க்கவே மாட்டேன். பார்க்கிறவர்களுக்கு நான் மிகுந்த கௌரவமுடையவளாயும், அந்தஸ்துடையவர்களிடத்தில் மாத்திரம் சிநேகஞ் செய்பவளென்றுங் காட்டிக் கொண்டு, தேனொழுகப் பேசி எத்தனையோ விதத்தில் துட்டைப் பிடுங்குவேன். வாலிபர்க ளெல்லாருக்கும் போட்டி யுண்டுபண்ணி

யெவ்வளவோ சம்பாதிப்பேன். பாட்டுக் கற்றுக்கொள்ள வேண்டு மென்று சொல்லி, வீணை, தம்புரு வாங்கிவைத்துக் கொண்டு பாடகர் களை வரவழைத்து, அவர்கள் மூலமாய் எவ்வளவோ சம்பாதிப் பேன். பார்க்கிறவர்கள் என்னை ஒருவனே வைத்துக்கொண் டிருப்ப தாக எண்ணுவார்கள். நானும் அப்படித்தான் காட்டிக் கொள்வேன். ஆனால், நானொருவனுக்கும் அடங்கினவளல்ல. எவன்மீதும் உண்மை யான ஆசைகிடையாது. வருகிறவர்களெல்லாரும் வாயைப் பிளந்து கொண்டு என் வார்த்தைகளைக் கேட்டுவிட்டு, மறுபடியும் எப்போது வரலா மென்று ஆசையோடு போவார்களே யல்லாமல் வெறுப்பாகப் போக மாட்டார்கள். சீமான்கள் பிள்ளைகளை இரகசியமாக வர வழைத்து வாடிக்கை செய்துகொண்டு, மறுபடியும் அவர்களை எங் கள் வீட்டிற்கு வாராமற் செய்கிறேனென்று சொல்லி, அவர்கள் தாய் தகப்பன்மார்க ளிடத்திலும் துட்டைப் பறிப்பேன். நீ யின்னும் அறியாதவள். அதோ யாரோ கதவைத் தட்டுகிறார்கள். நான் சொன்ன சங்கதிகளை யுன் புத்தியில் வை எல்லாம் உனக்காகத்தான். (தாய்க்கிழவி போகிறாள்.)

(தொடரும்)

ஒருவர் ஒரு கட்டுரையை எழுதி பத்திரிகை ஆசிரியரிடம் கொடுத்துவிட்டு வெளியே வந்தார். உடனே ஏதோ நினைத்துக் கொண்டு மீண்டுந் திரும்பி உள்ளே சென்று கட்டுரையில் ஒரு பிழை இருப்பதாகவும், அதைத் திருத்தித் தர, அவ் வியாசத்தைக் கொடுக்க வேண்டுமென்றும் ஆசிரிய ரைக் கேட்டுக்கொண்டார்.



உடனே ஆசிரியர் வெற்றுக் காகிதங்களைப் போடும் கூடையிலிருந்து அவருடைய வியாசத்தைத் தேடி எடுத்துக் கொடுத்துவிட்டு, 'விரைவாகத் திருத்தம்செய்து கொடுங்கள். இந்தக் கூடையில் உள்ள வற்றை அள்ளிக் கொண்டு போக இரண்டு நிமிஷத்திலே ஆள் வருவான்' என்றார்.

"மீனாட்சி" பிரஸ் 31, வைத்தியநாத முதலித் தெரு, சென்னை.

சகல மேக சித்தாதி எண்ணெய்

இந்த எண்ணெயைக் காலையில் ஒரு தேக்கரண்டி அல்லது அரை அவுன்சு எடுத்துக்கொண்டு 1/8 படி பசும்பாலில் கலந்து சாப்பிட வேண்டும். இரண்டு மூன்று தரம் மலம் தள்ளும். மேக வாய்வு, கைகால் பிடிப்பு, உடம்புவலி, இடுப்புவலி நீங்கும். வயிற்றில் தங்கிய வாய்வையும் வெளிப்படுத்துவதுடன், பெண்களுக்குண்டாகும் சூதக வாய்வு, சூதக வலி, பித்த குன்மம், வெள்ளை வியாதி, மூலம், பவுத்திரம், குஷ்டம் இவைகளைப் போக்கும். வயிற்றிலுள்ள இரணங்களை ஆற்றும்.

இந்த எண்ணெய் சாப்பிடும்போது தயிர் சாதம் அல்லது மோர் சாதம் சாப்பிட வேண்டும். எண்ணெயை இரண்டு நாளைக்கு ஒரு

முறை சாப்பிட வேண்டும். பாரிச வாய்வுக்கு இது உயர்ந்த எண்ணெய். வாத|சரீரம் இளைத்துவிடும்.

சில அபிப்பிராயங்கள்

திரு. டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு எழுதியது: நான் ஒரு வருட காலமாய்ப் பல வைத்தியர்களிடம் எண்ணெய்களும், லேகியங்களும், ஆங்கில மருந்துகளும், இன்ஜெக்ஷன்களும் கொடுத்து என் மனைவிக்குச் சிகிச்சை செய்து ஒன்றும் பயன்படவில்லை. கடைசியில் சென்னைக் கோபாலாசாரியார் உங்களைப் பற்றிக் கூறினர். அவர் வார்த்தைக் கிணங்கி தங்களிடம் வந்து சகல மேக சித்தாதி எண்ணெயை வாங்கிக் கொண்டுபோய் 5 நாள் கொடுத்தேன். முதல் நாளிலேயே கணுக்களில் இருந்த மேக நீரினுண்டான வீக்கங்கள் நீங்கிவிட்டன. மூன்றும் நாள் சம்பூரண சுகத்தைத் தந்தது. நீங்கள் கூறியபடி 3—ஆம் நாள் எண்ணெய் சாப்பிடும் வரையில் தயிரன்னத்தை இரவு பகலாகக் கொடுத்து வந்தோம். இப்போது என் மனைவி உல்லாவி வருகின்றாள். இனி என்ன மருந்து கொடுக்கலாம் என்பதைத் தெரிவிக்கவும்.

சென்னை
15—5—30

இப்படிக்கு,
அண்ணுவையங்கார்.

கனம் டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு,

தாங்கள் எனக்குக் கொடுத்த சகல மேக சித்தாதி எண்ணெயை இரண்டு நாள் சாப்பிட்டேன். என் முழங்கால் வீக்கமும் பிடிப்பும் நீங்கிவிட்டது. இடுப்பு வலியும் போய்விட்டது. வயிற்றில் சப்தித்துக்கொண்டிருந்த வாய்வும் நீங்கிவிட்டது. இன்னும் ஒரு வேளை எண்ணெயைக் கையிருப்பாக வைத்திருக்கிறேன். இந்த லெட்டர் கொண்டுவரும் பிராம்மண விதவை மிகவும் ஏழை. கால் குடைச்சலினுல் அநேக நாளாய்க் கஷ்டப்படுகிறாள். கிருபை கூர்ந்து ஒரு ரூபா வாங்கிக்கொண்டு இரண்டு வேளை எண்ணெய் கொடுத்தனுப்பவும். நான் தங்களை வந்து பார்க்கிறேன்.

இப்படிக்கு,
கீழ்வீதி சீனிவாச ஐயங்கார்,
சைவ முத்தையா முதலி வீதி, சென்னை.

இத்தகைய இன்னும் எண்ணிறந்த நற்சாட்சிகள் பெற்ற

சகல மேக சித்தாதி எண்ணெய்

புட்டி 1-க்கு விலை ரூபா 5.

அயத்தங்க திராவகம்



நண்பர்களே! இந்த மருந்தானது மலேரியா என்னும் விஷ சுரத்தினுலாவது அல்லது வேறு எந்த சுரத்தினுலாவது சரீரம் இளைத்து இரத்தம் குறைந்து சோகை போலும் வெளுத்துக் காணப்படும் இளைத்த தேகிகளுக்கு ஒரு ஆச்சரிய அபூர்வ மெனவே காட்டும்.

இதைச் சாப்பிடுபவர்களுக்கு மயிர் கறுத்து வளரும்; பசியின்மை நீங்கும்; மலம் தாராளமாய்க் கழியும்; தாதுவிருத்தி உண்டாகும்; பரிசுத்த இரத்தம் பெருகும்; நல்ல பசியுண்டாகும்; முகம் வசீகரமாய்க் காணும்; மேனி சிவக்கும்; நரம்புகள் தடிக்கும்; பசி யதிகரிக்கும். இம்மருந்தை சாப்பிட்டவர்கள் வீரர்களாகவும், பலசாலிகளாகவும், இரத்த சுத்தியும், இரத்தப் பெருக்கும் பெற்று பித்த சோகை, பித்த பாண்டு, ஊதுகாமாலை, எலும்புருக்கி முதலிய நோய் நீங்கப் பெறுவார்கள்.

இம் மருந்தால் மலமும் தாராளமாய்க் கழியும். இம் மருந்தைச் சாப்பிட்டவர்கள் பயில்வான்க ளாவார்கள். திடகாத்திர புத்திரர்களைப் பெறுவார்கள்; இன்பத்தையும் அடைவார்கள்.

இம் மருந்தைப் பால்யர் முதல் வயோதியர் வரை ஆண்பெண் இருபாலர்களும் எந்தக் காலத்திலும் சஞ்சீவியைப்போல் உபயோகித்து வரலாம்.

மக்கள் சுகம் பெற வெண்ணியே குறைந்த விலைக்கு விற்கப் படுகிறது.

உபயோகிக்கும் விதம்:—ஒரு அவுன்சு ஜலத்தில் பெரியவர்களுக்கு 2 துளி முதல் 5 துளி வரையிலும், சிறுவர்களுக்கு 1 முதல் 3 துளி வரையிலும் காலை மாலை கொடுக்கலாம். யாதொரு பத்தியமும் இதற்கு வேண்டுவதில்லை.

சில அபிப்பிராயங்கள்

அன்புள்ள மாசிலா திலக !

தாங்கள் முந்தி யனுப்பிய வி. பி. வந்து பெற்றுக்கொண்டேன். சாமான் திருப்தியாக யிருக்கிறது. நானும் ஒரு அநுபவ வைத்தியனாதலால் விலை குறைவு செய்து அனுப்பினல் தங்கள் மருந்தை அதிகம் செலவு செய்வேன். பின்பு தங்களுதவி கண்டு தங்களுக்கு சிலோன் ஏஜண்டுமானுலு மாவேனுதலால் அதை யனுசரித்து அரை டஜன் அயத்தங்க திராவகம் (ஆறு போத்தல்) வி. பி. பார்சலில் அனுப்ப வேண்டுகிறேன்.

S. V. அக்னீஸ்வரன்.

ஐயா !

தாங்கள் எனக்கு ஒன்றரை மாதங்கட்கு முன் அனுப்பிய அயத்தங்கத் திராவகத்தை உபயோகித்ததில் மிகவும் குணமடைந்தேன். ஆதலின் நான் அதனைத் தொடர்ச்சியாகக் கையாட விரும்புகிறேன். எனவே தொடர்ச்சியாய்ச் சாப்பிடுவதினுல் குணக்கேடு உண்டாகாதென்று தாங்கள் கருதுவீர்களாயின், உடனே வி. பி. மூலமாய் இன்னும் இரண்டு மருந்து புட்டிகளை அனுப்பக் கோருகிறேன். ஏனைய மருந்துகட்கும் அட்டவணை சாபிதா இருந்தால் அனுப்பவும்.

இங்ஙனம்

20–6–30, கண்ணுபுரம். திரு. பி. எஸ். கணேஸ்வரன்.

நான்கு மாதம் சாப்பிடக் கூடிய மருந்து விலை அணு 12.

தபால் கூலி பிரத்தியோகம்.

வியாபாரிகள் விவரம் எழுதித் தெரிந்துக்கொள்ளலாம்.

கூழ்ப்பாண்ட லேகியம்

இந்த லேக்கியத்தில் ஒரு கெச்சக்காய் அளவு காலை மாலைகளில் சாப்பிட பலம் தரும், மலம் தள்ளும், சரீர உஷ்ணம் நீங்கும். மலச்சிக்கல் நீங்குவதும் கணச்சூடு விலகுவதும் இம்மருந்தின் முக்கியகுணம். எலும்புருக்கி நோயால் இளைக்கும் தேகத்தைப் பலப்படுத்தும். குழந்தைகள் முதல்

யாவரும் சாப்பிடலாம். யாதொரு பத்தியமும் இல்லை. எண்ணெய் ஸ்நானம் செய்யும் தினம் மருந்தை நிறுத்த வேண்டும், சுரம், தலைவலி யிருக்கும் காலத்தில் மருந்து சாப்பிடலாகாது. மருந்து குளிர்ச்சியைத் தரக்கூடியது.

சில அபிப்பிராயங்கள்

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு, கூழ்ப்பாண்ட லேகியம், மீன் எண்ணெயைக் காட்டிலும் குணம் செய்கின்றது. கணச்சூட்டுக்கு மேன்மையாய்த் தெரிகின்றது. க்ஷயரோகம் வாராதபடி தடுக்கவும் மேலானதாய்க் காணப்படுகின்றது.மலச்சிக்கல் நீங்குகின்றது. ஆனபடியால் எங்கள் எல்லா ஷாப்புக்கும் மாதா மாதம் 10 பவுன் அனுப்பவும். இந்த லெட்டர் கொண்டுவரும் ஆள் வசம் 3 வீசை கூழ்ப்பாண்ட லேகியம் கொடுத்தனுப்பவும்.

M. C. நஞ்சுண்டராவ். B. A., M. B. & C. M. மைலாப்பூர்.

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு, தங்களைப் பார்த்து வெகுநாளாய் விட்டது. நான் இளையாளை மணந்த பிறகு 'டனுக்கு' என்னும் ஊருக்கு ஜில்லா முனிசீப்பாக இருக்கின்றேன். தங்கள் கூழ்ப்பாண்ட லேக்கியத்தினால்தான் என் குழந்தை பெருத்து நன்றாக பலத்து இருந்தது. இப்போது எனக்குக் கூழ்ப்பாண்ட லேகியம் 5 பவுன் வி. பி. யில் அனுப்பவேண்டியது.

இப்படிக்கு,

C. ராஜகோபாலாசாரியார் B. A., B. L.,
District Munsiff, Tanuku.

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு, 2 பவுன் கூழ்ப்பாண்ட லேகியம் வி. பி. யில் அனுப்பவும். இப்போது என் மனைவியின் தேக காந்தம் குறைந்திருக்கின்றது. அத்துடன் சிவப்பிரகாச பற்பொடி 1 டசன் அனுப்பவும்.

வியாசராவ் M. A., B. L., District Munsiff, Bellary.

ஒரு பவுன் விலை ரூபா 2.

மென்தா மவுத்வாஷ்

இம் மருந்தானது வாயிலுள்ள நோய், ஈர்வளர்தல், பல்வலி, இரத்தம் கொட்டல், சீழ் வருதல், வாய் நாற்றம் இவைகளைப் போக்கிச் சதா வாயுக்குக் கம கம வென்ற ஒரு மணத்தைக் கொடுக்கும்.

4-மாதம் உபயோகிக்கக் கூடிய மருந்து விலை ரூபா 2.

தலைவலிச் சூரணம்

இந்தக் சூரணத்தில் ஒரு சிட்டிகை எடுத்து வாயில் போட்டுக் கொண்டு ஜலம் சாப்பிட்டால் 5-நிமிஷத்தில் தலைவலி நீங்கும். தவிர உடம்புவலி கை கால்வலி இவைகள் போம். எத்தகைய சுரமானாலும் ஒரு சிட்டிகை மருந்து சாப்பிட்டவுடன் வியர்வை விட்டு சுரம் நீங்கும். மருந்து உபயோகிக்கும் முறை மருந்துடன் அனுப்பப்படும். இம் மருந்து வீட்டிலிருப்பின் எந்தப் பாமும் எவ்வித அஞ்சனமும் வேண்டியதில்லை. புட்டி 1–க்கு விலை 8.

காஸ்டோலின்

(இது சர்வ படையையும் சம்மரிக்கும்)

சரீரத்தில் இடுப்பிலும், கழுத்துப் பட்டைகளிலும், துடையின் இடுக்கிலும், சாமான் கூட்டின் மேலும் படரும் படையானது இரவுபகலாக மானபிமானம் விட்டு பலர் முன்னிலையில் சாமான் கூட்டில் கையைவைத்து நமை நீங்க சொறிந்துக் கொள்ளச் செய்கின்றது.

சிலர்க்கு முகத்திலும் கழுத்திலும் படர்ந்து விகாரத்தை உண்டு பண்ணுகின்றது. சிற்சிலருக்கு முழங்காலுக்குக் கீழ், கணுக்காலுக்குமேல் படர்ந்து எந்நேரமும் நீர் கசிந்துகொண்டு இரணமாய் இருக்கின்றது.

இத்தகைய வியாதிக்கு இங்கிலீஷ் மருந்தில் ஆசிட்சாலிசிலிக் என்னும் பவுடரை மெதிலேடட் ஸ்பிரிட் என்னும் திரவத்துடன் கலந்து பலர் படை மருந்து என்று விற்கின்றார்கள். இம் மருந்தை வாங்கி பூசினவுடன் எரிச்சல் கொடுத்து உதிர்வதுபோல் காணப்பட்டு மீண்டும் திரும்பி விடுகின்றது. எரிச்சலும் பொறுப்பது கஷ்டமாகின்றது. சிலருக்குக் குணமே கிடைப்பதில்லை. ஆதலால் அத்தகைய மருந்தைக் காட்டிலும் தமிழ் மருந்தே வேருடன் களையக்கூடியது. ஆகையால் எங்களால் தயார் செய்யப்பட்டுள்ள காஸ்டோலின் என்னும் விளக்கெண்ணெயினால் தயார் செய்த படை மருந்தை உபயோகித்துப் பாருங்கள்.

எவ்வித படைகளையும் நொடியில் போக்கும் தன்மை வாய்ந்தது. உபயோகிக்கும்போது எரிச்சல் உண்டாகாது. வேஷ்டியில் கரை பிடிக்காது. எத்தனை வருஷமாக இருக்கப்பட்ட இரணமானாலும் போக்கக்கூடியது.

இதனை உபயோகித்தவர்கள் அனைவரும் புகழ்ந்தே பேசுகிறார்கள்.

புட்டி 1-க்கு விலை அணா 4.

இன்னும் சகல நோய்களுக்கும் சிறந்த மருந்துகள் எங்கள் மருத்துவ சாலையில் கிடைக்கும். விவரமான கேட்லாக்குக்கு எழுதவும்.

எமது விலாசம்:—

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார்,
31, வைத்தியநாத முதலித் தெரு, சென்னை.

208525
சென்னை-600 008

சந்தா நேயர்களுக்கு

1. சந்தாத் தொகையை முன்னதாக மணியார்டர் மூலம் அனுப்ப வேண்டும். வி. பி. யில் பெறுவதென்றால் ரிஜிஸ்டர் சார்ஜ் 3 அணா, மணியார்டர் கமிஷன் 2 அணா, வி. பிக்குத் தபால் சார்ஜ் ½ அணா, ஆக 5½ அணா சேர்த்து ரூபா 1-5-6 கட்டி வி. பி. யைப் பெற நேரிடும். மணியார்டர் அனுப்பினால் ரூ. 1-2-0 மட்டுமே யாகும். ஆதலால் முன்னதாக மணியார்டர் அனுப்பிப் பத்திரிகை பெற்றுக்கொள்வதே இரு சாராருக்கும் நலமாகும். இது முக்கிய மாய்க் கவனிக்க வேண்டிய விஷயம்.

2. இடம் மாறும் சந்தாதாரர்கள் தங்கள் புதிய விலாசத்தோடு சந்தா எண்ணையும் குறிப்பிட்டு எழுத வேண்டும்.

3. சந்தாதாரர்கள் கடிதம் எழுதும்பொழுதும் மணியார்டர் அனுப்பும் பொழுதும் சந்தா நம்பரை அவசியம் குறிப்பிட்டு எழுத வேண்டும். இன்றேல் பதில் செய்ய இயலாது. பதிலை விரும்புவோர் ரிப்ளை கார்டாவது தபாற் பில்லையாவது அனுப்ப வேண்டும்.

வியாசம் எழுதுவோர்க்கு

'தமிழர்'சில் வெளியிட வியாசங்கள் அனுப்புவோர் தயவு செய்து பின் வரும் விதிகளைக் கவனித்தல் அவசியமாகும்:—

1. இலகுவான இனிய செந்தமிழ் நடையில் படிக்கப் படிக்க இன்ப மூட்டும், நினைக்க நினைக்க ஆவேச முண்டாக்கும் அரிய சரித்திரங்களும், நெஞ்சை அள்ளும் சிறு கதைகளும், விடா நகைப்பை விளைவிக்கும் விகடத் துணுக்குகளும், உள்ளத்தை உருக்கும் வாழ்க்கை வரலாறுகளும், நாட்டுப்பற்றும், மொழிப்பற்றும், உரிமை வேட்கையும் உண்டாக்கும் உயர்தர வியாசங்களும், சீர்திருத்த விஷயங்களும் அன்போடு அங்கீகரிக்கப்படும்.

2. வியாசம் எழுதுவோர் எளிய இனிய தமிழ் நடையில் இலக்கண வழுவில்லாமல் ஒரே பக்கத்தில் மிகத் தெளிவாக மையினால் எழுதி அனுப்புதல் வேண்டும்.

3. எந்தக் கட்டுரையும் நான்கு அல்லது ஐந்து பக்கத்திற்குள் அடங்கக் கூடியதாக இருப்பதே நலம். இத்தகைய வியாசங்களே முதன்மையாகக் கருதப்படும்.

4. அங்கீகாரமாகாத கட்டுரைகளைத் திருப்பி அனுப்பவேண்டுமானாலும், அனுப்பிய கட்டுரைகளைப்பற்றி அபிப்பிராய மறிய வேண்டுமானாலும் அவற்றோடு தபால் தலைகளும் அனுப்ப வேண்டும்.

5. கிடைக்கப்பெறும் கட்டுரைகளைக் கூட்டவும் குறைக்கவும் திருத்தவும் ஆசிரியருக்கு அதிகார முண்டு.

கார்டோலின்

ஆஸ்தமாவுக்கு அரிய ஔடதம்

30, 40 வருடங்களாகக் காசநோயாளர் கஷ்டப்பட்டவர்களை இம் மருந்து காப்பாற்றி இருக்கிறது.
சீஸா புட்டி 1-க்கு ரூபா 10. விவரமான கேட்லாக்குக்கு எழுதவும்.

சளி இருமல், சுவாச காசம், சுர இருமல், க்ஷய காசம் முதலிய நோய்களுக்குச் சிறந்த மருந்து.

விலாசம்:—31, வைத்தியநாத முதலி வீதி, சென்னை.

Edited, Printed and Published by Dr. M. Masilamani Mudaliar at Meenatchi Press, 31, Vaithiyanatha Mudali Street, Madras.